# "சமூகம்"
(அல்லது)
# "சூழ்நிலை"

மேற்பார்வை

உயர்திரு :
டாக்டர். மு. வரதராசனர்,
M. A., M. O. L. Ph... D.

ஆக்கியோன்

ந. சங்கர்.

ஸ்ரீ சண்முகம் பதிப்பகம்.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

# "சமூகம்" அல்லது "சூழ்நிலை"

(நாடகம்)

உயர்திரு டி. கே. எஸ். சகோதரர் அவர்களுக்கு
ஆசிரியரின் அன்பளிப்பு
ந. சங்கர்

A / 524

மேற்பார்வை

உயர்திரு.

டாக்டர். மு. வரதராசனர் M. A; M. O. L. Ph...D.

தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி.

மதராஸ் 10.

ஆக்கியோன்

ந. சங்கர்.

கலைச்சுடர் குழு
57. சம்பாத் தெரு
தென்காசி

ஸ்ரீ சண்முகம் பதிப்பகம்,
சுவாமி சன்னதி, தென்காசி.

---

விலை 1—4—0

தி.க. சண்முகம் நூலகம்
வரிசை எண்: 95
கொடை எண்: 95

முதற் பதிப்பு:— 1—12—'54.

உரிமை ஆசிரியருக்கு.

"இச்சிறு நாடக நூல் இந்த சமூகத்திற்கே சமர்ப்பணம்"

"இதில் வரும் பெயர்களும், சம்பவங்களும் யாரையும் குறிக்காது"

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்பளிப்பு
தி.க. சண்முகம்

# மதிப்புரை.

சமூகம் அல்லது சூழ்நிலை என்னும் இந் நாடகம் புதிய பல கருத்துக்களைக் கொண்டு மிளிர்கின்றது. திரு. ந. சங்கர் நாடகமேடைக்கு ஏற்ற வண்ணம் சில நல்ல அமைப்புகளை அமைத்துள்ளார்.

இதில் உள்ள உரையாடல்களுக்கு இடையிடையே என் நூல்களிலிருந்து வாக்கியங்களும் தொடர்ந்த பேச்சுக் களும் எடுத்துப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

தமிழ் நாட்டில் மேடைகளில் நடிப்பதற்கு உரிய நாட-கங்கள் பல உள்ளன; ஆயினும் போதிய அளவிற்கு இல்லை. அந்தப் பஞ்சத்தைத் தீர்ப்பது நல்ல தொண்டு ஆகும். ஆத-லின் திரு. சங்கர் அவர்களின் முயற்சி வரவேற்கத்தக்க தாகும்.

மு. வரதராசன்.

# முன்னுரை.

அன்பர்களே!

நான் ஒரு தத்துவ ஞானியுமல்ல! தர்க்க வாதியுமல்ல! இயற்கையைத் தன் அறிவென்ற அளவுகோலால் அளந்து கவி புனையும் கவிஞனுமல்ல! சூழ்நிலையில் ஏற்படுகிற மாற்றங்களைக் கண்டு கருத்துக்களைச் சேகரித்துத் தந்தேன். அவ்வளவுதான். இதில் உயர்திரு, டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் கருத்துக்கள் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன. கருத்துக்களை எடுத்துக் கையாண்டதற்கு அவர்களிடமே மதிப்புரைக்கு அனுப்பி, மதிப்புரையும் பெற்றேன். மட்டற்ற மகிழ்ச்சியும் அடைந்தேன். அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவன் ஆவேன், நன்றி மறவா முறையில். இந்த நூலுக்கும் பிழை திருத்தித் தந்த உயர்திரு, வித்துவான் உ. குமாரசாமி அவர்களுக்கும், உயர்திரு, வித்துவான் சிவ. சீத்தாராமன் அவர்களுக்கும் என் உள்ளம் கனிந்த நன்றியை என்றும் மறவாமல் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த நூலை அச்சிட்டுத் தந்த சண்முகம் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகுக. இப்புத்தகத்தைப்பற்றிய ஏதாவது தகவல் தெரிவிக்க விரும்பும் அன்பர்கள் பதிப்பக விலாசத்திற்கே அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை ஆதரிக்கும் அன்பர்கள் அனைவருக்கும் என் மனம் கனிந்த நன்றி என்றும், எப்பொழுதும் உரித்தாகும்.

ஆக்கியோன்

**ந. சங்கர்,**

கலைச்சுடர்குழு
57, சம்பாத்தெரு
தென்காசி

# "சமூகம்" அல்லது "சூழ்நிலை"

**நடிகர்கள்.**

1. இராஜேந்திரம் பிள்ளை:- அரசாங்க உத்தியோகஸ்தர். இரக்க குணம் உள்ளவர். உண்மையே பேசுபவர்.

2. சுந்தரம்:- இராஜேந்திரம் பிள்ளையின் மகன். சிறந்த படிப்பாளி. சீர்திருத்தச்செம்மல்.

3. முத்தையா பிள்ளை:- இவரைப்பற்றி அதிகம் சொல்லத் தேவை இல்லை. சுருக்கமாகச் சொன்னால் உறங்கும்போது பக்கத்தில் ஒருவர் காலணாவை சுண்டினால் போதும், எழுந்து விடுவார். இதிலிருந்தே இவருடைய நல்லகுணம் விளங்கும்.

4. குமார்:- முத்தையாப்பிள்ளையின் மகன். நல்ல படிப்பாளி. சுந்திரத்தின் இணைபிரியா நண்பன் என்றாலே சகலமும் அடக்கம். காதலில் தோல்வியுற்று பைத்தியமாக மாறு கிறான்.

5. கமலா:- முத்தையாப் பிள்ளையின் மகள். குமாரின் தங்கை. நல்ல குணமுடையவள். சுந்தரத்தின் காதலி.

6. செல்லம்:- ஒரு அநாதைப் பெண். இவளை ஆதரித்தவர் இராஜேந்திரம் பிள்ளை. சுந்திரத்தின் தங்கை ஆகிறாள். இவள் காதலில் தோல்வியடைந்து உயிர் துறக்கிறாள்.

7. விநாயக முதலியார்: பரம ஏழை. ஆனால் ஆடம்பரப் பிரியர். கடன் வாங்கியே காலத்தைக் கழிக்கிறார். மானத்தைவிட வயிறுதான் பிரதானம், என்று மகளை விபச்சாரியாக்கி விடுகிறார்.

8. நளினா:- சேற்றிலே முளைத்த செந்தாமரை; இவளைப் பார்த்தாலே இவள் அழகைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. மானத்தோடு வாழத்தலைப்பட்டாள். ஆனால் வறுமை செய்த சதியாலும், பெற்ற தகப்பனார் பண ஆசை-யாலும் படுகுழியில் தள்ளப்படுகிறாள்.

9. அரசு:- சுந்தரம், குமார் இவர்களின் நண்பன். இவன் மணியின் இணைபிரியா நண்பன். வறுமையில் வாடுகிறான்.

ஆனால் மானத்தோடு வாழப் பிரியப்படுகிறான். செல்லம் என்பவளை காதலித்து பின் பண ஆசையால் அவளைக் கைவிடுகிறான்.

10. மணி:- அரசின் நண்பன். சமூக நடப்பறிந்து நடப்பவன். காலத்திற்குத் தகுந்தவாறு நாமும் மாறவேண்டும் என்ற கொள்கை கொண்டவன். அரசுவின் பிடிவாத குணத்தை மாற்றுகிறான், அவனின் பெற்றோர்களுக்காக.

11. தபால்காரன்:- வியாபாரிகளின் கையாள்.

12. பையன்:- விநாயக முதலியார் நண்பரின் மகன்.

—— * ——

# "சமூகம்" அல்லது "சூழ்நிலை"

---

## காட்சி 1.

இடம்:- தெரு. காலம்:- பகல்.

தேவை:- பிச்சைக்காரி, முத்தையாப் பிள்ளை, ராஜேந்திரம் பிள்ளை, அரசு, கமலா. (கோரஸ் பாட்டு)

(பிச்சைக்காரி ஆண்டவனிடத்தில் முறையிட்டு பாடுதல்)

பிச்சைக்காரி:- சமூகமே! அட சண்டாள சமூகமே! என்னை இந்நிலைக்குக் கொண்டுவந்து விட்டாயே. ஐயோ! கடவுளே இனி நான் எப்படி வாழ்வேன்.

முத்தையாப்பிள்ளை:- இராஜேந்திரம்! இந்தப் பாழாப் போன சமூகத்திலே பிழைக்கிறது மிகவும் கஷ்டமாக இருக்கு. என்ன செய்யவோ தெரியவில்லை. வாழ்கிறவனை வாழவிட மாட்டேன் என்கிறது சட்டம். சட்டத்தை மீறினலோ கஷ்டம். உம். என்ன செய்ய.

இராஜேந்திரம் பிள்ளை:- என்ன இப்படிச் சொல்லு கிறீர்கள். உங்கள் கஷ்டத்தைத் தீர்க்கத்தான் கடவுள் இருக்கிருரே, கவலை ஏன்? மேலும் நீங்கள் கடவுள் பக்தர், கட்டாயம் காப்பாற்றுவார். ஆமா! உங்களுக்கு என்ன கஷ்டம். வியாபாரத்திலோ இப்போ நல்ல சான்ஸ். மேலும் பணத்தை வட்டிக்கு விட்டு வருகிறீர்கள். கஷ்டப்பட வழியே இல்லையே! சட்டத்தை எப்படி எப்படி மீறலாம் என்பதும் தெரியும். வேண்டுமானல் என்னைப்போல் உங்களுக்கும் மனைவி இல்லையென்ற வருத்தம் இருக்கலாம். வேறு என்ன குறை உங்களுக்கு.

முத்தையாப் பிள்ளை:- ஒன்ற, இரண்டா. இந்தா பாரு ராஜேந்திரம்! உலகில் மனிதனுகப் பிறந்தாலே சாகிற வரையிலும் சஞ்சலந்தான். என்னதான் கோடியும் கொள்ளையும் இருந்தாலும் அவனுக்கும் ஏதாவது மனக் கஷ்டம் இருக்கத்தான் செய்யும்.

பிச்சைக்காரி:- ஐயா! மனிதப்பிறவி எடுத்த இந்தப் பெண்ணுக்கு ஏதாவது கொடுத்து உதவுங்கள் ஐயா! மனமிரங்குங்கள் ஐயா! அய்யா,

முத்தையாப் பிள்ளை:- சரிதான், இவள் சொல்கிறதைப் பார்த்தீர்களா? காலம் கெட்டுப்போச்சு; பின்னே எப்படி நாடு உருப்படும். இந்தா, நிற்காதே, பேசாமல் போ!

பிச்சைக்காரி:- அய்யா! உங்களுக்குக் கோடிப்புண்ணியம் உண்டு அய்யா.

முத்தையாப் பிள்ளை:- புண்ணியம் தேடிக்க எங்களுக்குத் தெரியும். போன்னு போவையா, ராங்கித்தனமா பண்றே.

பிச்சைக்காரி:- அய்யா! இந்த அனுதைக்குக் காலணு கொடுங்கள் அய்யா!

ராஜேந்திரம்:- இந்தப் பிச்சைக்காரத் தொல்லை என்று ஒழியுமோ? அன்றுதான் நம்ம நாடு உருப்படும்.

பிச்சைக்காரி:- அய்யா! இதை நீங்கள் சொன்னுல் போதுமா? சர்க்கார் அல்லவா கவனிக்க வேண்டும்.

முத்தையாப் பிள்ளை:- சரி சரி, போ! சர்க்காருக்கு அட்வைஸ் பண்ண வந்துட்டா? உம். நம்ம போவோம். இதுகளுக்கு இதுவே வேலை.

பிச்சைக்காரி:- அய்யா! தர்மம் கொடு அய்யா!

முத்தையாப் பிள்ளை:- இது என்னடாயிது, பெரிய நியூஸென்ஸாப்போச்சு!

இராஜேந்திரம்:- யாரம்மா நீ?

பிச்சைக்காரி:- நான் ஒரு அனுதையய்யா!

இராஜேந்திரம்:- இனி அப்படிச் சொல்லாதேயம்மா? எல்லா உயிர்களுக்கும், தாயாக இயற்கை இருக்கிறது. கடவுள் காப்பாற்றுவாரம்மா உன்னை! உம். பாவம். அழுது அழுது உன் கண்கள் வீங்கி விட்டதேயம்மா! ஆமாம், உன் தாய் தந்தையர்கள்?

பிச்சைக்காரி:- இப்படி அழ அழ விட்டுவிட்டு அவர்கள் மாண்டுவிட்டார்கள் அய்யா! அய்யா! என் கதி இப்படி ஆகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை அய்யா?

இராஜேந்திரம்:- வருந்தாதேயம்மா வருந்தாதே! உலகம் தெரியாத உனக்கு இவை பெரும் சோதனை தானம்மா! ஆமாம், நீ படித்திருக்கிறாயா?

பிச்சைக்காரி:- இல்லையய்யா! ஆனால் கேள்வி ஞானம் கொஞ்சமுண்டு படிக்க வழி இல்லை.

இராஜேந்திரம்:- இல்லையா? உம்! இந்த பாழும் சமூகத்திலே படித்தவர்களுக்கே வேலை இல்லை? அப்படி இருக்க உனக்கு.

பிச்சைக்காரி:- அய்யா! பணமிருந்தும் படிக்காமலில்லையா? ஆனால் எனக்கு ஆசையிருந்தது? அதற்குப் பணம்.

இராஜேந்திரம்:- பணம்! பணம்! பாழாய்ப்போன பணம்! என்னென்ன செய்கிறது

பிச்சைக்காரி:- இன்றைய உலகில் பணம்தானேயய்யா முதல் ஸ்தானம். அது இல்லையானால் என்னைப்போல் தெருவில்த்தானே அலையவேண்டும். வேறு வழி.

இராஜேந்திரம்:- அம்மா! எல்லாம் கொஞ்ச காலம் தான்! இந்நிலை நீடிக்காது. அம்மா! நீ என்னுடன் வருகிறாயா? ஏதாவது ஒரு வேலை பார்த்துத் தருகிறேன்.

பிச்சைக்காரி:- ஏனய்யா? என்னால் உங்களுக்கு வேறு கஷ்டம். வேண்டாமய்யா! வேண்டாம். கடவுள் வழி காட்டுவார் எனக்கு?

இராஜேந்திரம்:- உம்! கடவுள் வழி காட்டுவாரென்று நாம் சும்மா இருந்தால் முடியுமா! நாமும் ஏதாவது முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நம் வாழ்நாள் முன்னேறும்.

முத்தையாப் பிள்ளை:- அட நீங்க ஒன்னு? இதுகள்டே போட்டுக்கிட்டு என்ன பேச்சு. வாங்க.

பிச்சைக்காரி:- அய்யா! பசி! இந்த ஏழைபேரில் கண் பாரய்யா. பசி காதையடைக்கிறது.

முத்தையாப் பிள்ளை:- போடி போ! பெரிய மனிசி மாதிரி வந்துட்டே. பெரிய மனிதர்கள் வந்தாலே ஏதோ வந்திட்டாங்களே என்று கொடுக்கிற காலத்திலே!

பிச்சைக்காரி:- பெரிய மனிதர்கள்! பண்பிலா, பகட்-டான வேஷத்திலா. ஏழைக்கு ஒரு வயிறும் பணக்காரனுக்கு ஒரு வயிறுமா இருக்கிறது? இருவரும் மனிதர் குலம் தானே? ஆண்டவனால் படைக்கப்பட்ட அவனும் பத்து மாதந்தான், நானும் பத்து மாதந்தான். பசி, பசி, யாருக்கும் பொதுதானய்யா!

முத்தையாப் பிள்ளை:- பிச்சைக்காரிகள் இப்படிப் பேசினா, சோறு எப்படிக் கிடைக்கும். இப்படிப் பேசிப் பேசித்தான் இப்படி அலைகிறே. போதும் உன் "அட்வைஸ்" நிறுத்திக்கோ!

இராஜேந்திரம்:- (காசு கொடுத்தல்) இந்தாம்மா!

முத்தையாப் பிள்ளை:- ரொம்ப நன்றாயிருக்கிறது காரி-யம்! நீயே இந்த உலகத்திலுள்ளவர்களையெல்லாம் சோம்பேறியாக்கி விடுவாய் போலிருக்கே. இந்தா பாரு ராஜேந்-திரம்! தினமும் இந்த மாதிரி யானைப்பசி உடையவர்கள் வந்து கொண்டேயிருப்பார்கள். நம்மால் தீர்த்து வைக்கவும் முடியாது. தீர்ப்பதானால், நம்மாஸ்தியெல்லாம் தீர்ந்து விடும்! பின்பு நாம் திவாலாக வேண்டியதுதான்! இப்பொழுதே சொல்லி வைக்கிறேன்.

இராஜேந்திரம்:- முத்தையா! இதில் ஒன்றும் நம்ம ஆஸ்தியே முழுகி விடாது. பயப்படாதீர்கள்!

பிச்சைக்காரி.- இந்த ஊரில் இம்மாதிரி சொல்லக்கூடியவர்களும் இருக்கிறார்களா!

முத்தையாப் பிள்ளை:- எங்கேயாவது சத்திரம் சாவடியைப் பார்த்துப் போவையா? இங்கு வந்து சனியன் மாதிரி உயிரை வாங்குது! உம். ராஜேந்திரம் வாப்பா! (போகிறார்கள்)

பிச்சைக்காரி:- (இருவரும் போனபின்) சனியனு நான்... உம்...... ஆம் சனியன்தான்...... உமக்கு மட்டுமா சனியன், இந்த சமூகத்திற்கே சனியன்தான். அய்யோ! இந்த சமுதாயம் புறக்கணிக்கும்படியான சண்டாளியா நான். உம். உலகில் மனிதப்பிறவிதான் உயர்ந்தது என்பார்கள். பகுத்தறிவு என்று ஒன்று இந்த மனிதப் பிறவிக்குத்தான் உண்டாம், இருந்தும் என்ன பயன். இனத்தை இனமே இழிவு செய்யும் சிறுமையும், வறுமை பலருக்கும், வாழ்வு சிலர்க்கும் என்ற வஞ்சனை. (அரசு வருதல்) உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று ஒருவரை ஒருவர் ஒதுக்கித் தள்ளும் கொடுமை, சூதும் சூழ்ச்சியும், சூழ்நிலையும் சட்டமும் நிறைந்ததுதானே இந்தப் பாழும் சமூகம். பிறவியினுல் உயர்ந்தவனுகப் பேசிக்கொள்ளும் மனித சாதியின் பேதப் புத்தியைப் பார்த்து எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. அட சமூகமே!

அரசு:- தங்கையே! ஏன்? இப்படி! தனியே புலம்பிக் கொண்டு நிற்கிருய்? இந்தச் சமூகத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும்.

பிச்சைக்காரி:- அய்யா! சமூகத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை அய்யா! இந்தப் பாவி பிறந்த நேரத்தைத் தான் சொல்ல வேண்டும். இப்பூமிக்குப் பாரமாக வளருகிறேன். எல்லாம் என் தலைவிதி.

அரசு:- விதியா! இல்லவேயில்லை. விதி விதி என்பதெல்லாம் கையால் ஆகாத கபோதிகள் பாடும் பல்லவி.

பிச்சைக்காரி:- உம். எனக்கும்தான் கைகள் இருக்கின்றன. இருந்தும் என்ன பயன்.

அரசு:- எதற்கும் பணம் வேண்டும்! அப்பொழுது தான் பயன்.

பிச்சைக்காரி:- ஆம்...ஆம்...பணம்... இருந்தால் நான் இந்த நிலைமைக்கு வருவேனா? பணம்... அதற்கு நான் எங்கு செல்லுவேன். திருடுவேனா? இல்லை, கொள்ளை அடிப்பேனா? ஹூம். பிச்சை யெடுத்துப் பிழைக்கவும் வழியில்லையே! இந்தப் பாழும் பொல்லாத உலகிலே, நாடோடியாகத் திரிந்து நாசமுறுவதற்காப் பிறந்தேன். என் தாய், தந்தைக்கு வந்த சாவே! எனக்கும் வரலாகாதா? அய்யோ! ஆண்டவனே... மனிதர்கள் வாழும் நாடா இது? இல்லவே இல்லை. பிறர் துயரம் உணராக்கடு நெஞ்சர் வாழும் காடுதான் இது? மிருகமாகப் பிறந்தால்கூட மனிதன் அதை வளர்த்து அதற்கு வயிறு நிறையத் தீனி போடுவான். நான் மிருகத்திலும் கேடு கெட்ட மிருகமானேன். உருவத்தில் மானிட உருவமாக இருந்து என்ன பயன்? மிருகமாக இருந்தாலும் மதிப்பு உண்டே. வயிருரச் சாப்பிடத்தான் எண்ணுகிறேன். வழியில்லையே... வேலையில்லையே உழைப்பதற்கு... திருடவும், கொள்ளை அடிக்கவும்தான் கற்றுக்கொடுக்கிறது இந்தப் பாங்கான சமூகம்...உம் ..செந்தமிழ் நாடு.

அரசு:- இந்த பாங்கான நாட்டிற்கு செந்தமிழ் நாடு என்ற பட்டம். உம். செந்தமிழ் நாடு, சேற்றிலும் கேடு கெட்ட நாடு, கெடுமதியே எண்ணும் நாடு, எண்ணத்திலே மண்ணைப்போடும் நாடு, மாண்டோர் மடத்தனமாக புகழ்ந்த நாடு, புவியில் புறக்கணித்த நாடு, புறம் பேசி வாழும் நாடு, வாழ்பவரை வாழவிடாத நாடு, வதைக்கும் நாடு. போயும் போயும்......

பிச்சைக்காரி:- இங்கு வந்து பிறந்தேனே... பிச்சைக்காரியாகிய நான் பிச்சையெடுப்பதைப் பார்த்து பல்லிழிக்கும் செந்தமிழ் நாடுதானே இது? (ராஜேந்திரம் வருதல்) உடலிருக்கிறது உழைக்க...... ஆனல் வேலையில்லை பிழைக்க...... வேலை கிடைத்தால் உழைப்புக்கு ஏற்ற ஊதியமில்லை. இந்த

நாட்டைப் புகழ்ந்து விட்டார்கள் அறிஞர்கள். செந்தமிழ் நாட்டின் புகழ்பற்றி. யாவும் உள்ள நாட்டில் இப்படிச் சட்டி தூக்கி ஏன் அலையவேண்டும். உம்... அவ்வறிஞர் களைப்பற்றிப் பேசி என்ன புண்ணியம். நாடு செய்த பாக்கி-யம் அவ்வளவுதான்.

ராஜேந்திரம்:- அப்படிச் சொல்லாதேயம்மா! இந்த நாட்டில் என்ன குறை?

பிச்சைக்காரி:- அய்யா! என்போன்று அலைகிறவர் களுக்குத்தான் குறைவே இல்லையே! நாடு செய்த நற்பயனில் நடுத்தெருவில் அலைகிறோம். இதைவிட வேறு என்னய்யா வேண்டும் நாட்டிற்கு.

ராஜேந்திரம்:- பயப்படாதே! எல்லாம் கூடிய சீக்கிரம் சரியாய்ப் போய்விடும். பாடு படுகிறார்கள் அரும்பெரும் தலைவர்கள். இனி நாட்டில் திருவோடு எடுக்காமலே செய்து விடுவார்கள். எப்படியும் நாடு கூடிய சீக்கிரம் சீர்திருத்தம் அடையும். இதை நீ நம்பம்மா!

பிச்சைக்காரி:- என் போன்றவர்களுக்கு வழி பிறந்-தாலே போதும் அய்யா!

ராஜேந்திரம்:- வேண்டுமானால் பாரேன். ஆமா! உன் பெயரென்னம்மா?

பிச்சைக்காரி:- செல்லம்.

ராஜேந்திரம்: செல்லமா! ஆகா! என்ன செல்லமான பெயர். நீ என்னுடன் வாம்மா! உன்னைப் பார்த்ததுமுதல் உன்னை என் வீட்டிலேயே வளர்க்க விரும்பி விட்டேன். வாம்மா வா. மகள் இல்லாத குறையை நீயாவது நிவர்த்தி செய்யம்மா...உம்...வாம்மா வா.

அரசு:- தங்கையே! போய் வாம்மா! இவர் மிகவும் நல்லவர். உன் ஆயுசு வரை காப்பாற்றுவார். உனக்கு ஒரு குறைவும் வராது பார்த்துக்கொள்ளுவார். இப்போப்

பட்ட அதிர்ஷ்டம் வேறு யாருக்குக் கிடைக்கும். போய் வாம்மா...போய் வா.

பிச்சைக்காரி:- எல்லாம் கடவுள் செயல்.

ராஜேந்திரம்:- கடவுளை நம்பியோர்க்கு ஒரு கெடுதலும் வராதம்மா? வாம்மா போகலாம். (இருவரும் போதல்) வருகிறேன் அரசு... (அரசு தலை அசைத்து வழி அனுப்புதல்)

அரசு:- (தனியே) ஆகா! என்ன இரக்கம், இந்தப் பெண்ணின்மேல். இவரல்லவா மனிதர். மனிதப்பிறவியெடுத்ததின் பயனை இன்றே அடைந்து விட்டார் இவரது அன்புக்கு இந்த உலகமே ஈடு ஆகுமோ? என்னமோ? ஆகா என்ன அன்பான வார்த்தைகள்...... பிச்சைக்காரியாக இருந்தாலும் என்ன அறிவு. என்ன பண்பட்ட பேச்சு என்ன அழகு... ஆகா...ராஜேந்திரம் பிள்ளைக்கு ஏற்ற மகள்தான் செல்லம். செல்லம் சேரவேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டாள். அதுவே போதும். என் மனம் மிகவும் சந்தோஷமடைகிறது. ராஜேந்திரம் பிள்ளை உண்மையிலேயே கடவுள்தான். ஆகா அவரை எப்படிப் புகழ்வேன். இப்படிப்பட்ட தியாக சிற்பியின் பாதங்களை நாம் வணங்கத்தான் வேண்டும். அந்த அவதாரப் புருஷருக்கு என் வணக்கம். (அரசு போகிறான். எதிர் எதிராக வருகிறார்கள் கொஞ்ச நேரம் கழித்து. முத்தையாப் பிள்ளையும், கமலாவும்)

முத்தையாப் பிள்ளை:- கமலா! எங்கேயம்மா போகிறாய்? என்ன அவ்வளவு அவசரம்.

கமலா:- (வெட்கத்தோடு) இல்லையப்பா! சும்மா! ஒரு அவசரவேலை. அவரைப் பார்க்கனும்...வரட்டுமாப்பா...

முத்தையாப் பிள்ளை:- என்னம்மா! இல்லை...சும்மா... அவசரம்......பார்க்கனும்...... ஒன்றுமே விளங்கவில்லையே! ஆமா, உன் அண்ணனை எங்கே? இருவரும் இப்படி ஊரைச் சுற்றினால்......

கமலா:- இல்லேப்பா! நாளைக்கு ஒரு பேச்சு இருக்கிறது. அண்ணுவும் பேசப்போகிருன். அவனைத் தேடித்-தான்

முத்தையாப் பிள்ளை:- சுந்திரம் வீட்டுக்குப் போகிருயா?

கமலா:- ஆமாம் அப்பா! அப்பா நாளைக்கு சுந்திரமும் பேசுகிருர்.

முத்தையாப் பிள்ளை:- அவன்தான் என்றும் பேசு-கிருன். ஆமா! குமார்கூடப் பேசுவதாகச் சொன்னுயே? இவனுக்கு என்ன பேசத் தெரியும்.

கமலா:- வந்து பாருங்களேன். வரேன் அப்பா! ஒரு அவசரம். வரட்டுமாப்பா!

முத்தையாப் பிள்ளை:- சுந்திரம் வீட்டுக்குப் போகனும் என்ருலே உனக்கு என்றும் அவசரம்தான். அவன் வீட்டில் என்னதான் இருக்கிறதோ...உம்...போய் வாம்மா...சீக்கி-ரமா அண்ணனையும் கூட்டிக்கொண்டு வந்து சேர்.

கமலா.- ஆகட்டுமப்பா!

(திரை)

---

## காட்சி 2.

இடம்:- பேச்சு மேடை. காலம்:- மாலை.

தேவை:- முத்தையாப் பிள்ளை, இராஜேந்திரம் பிள்ளை, சுந்தர், குமார், கமலா, செல்லம், நளினு, அரசு, மணி, விநாயக முதலியார்.

அரசு:- (எழுந்து) அன்புமிக்க பெரியோர்களே! தாய்-மார்களே. நம் ஊரிலேயே கடந்த இருபது வருடகாலமாக நம்மிடையே பழகி வரும் ஸ்ரீமான் இராஜேந்திரம் பிள்ளை

அவர்களை தலைமை தாங்கும்படி உங்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முத்தையாப் பிள்ளை:- அதை நான் ஆமோதிக்கிறேன்.

ராஜேந்திரம்:- (வந்து நின்று) அன்புமிக்க சபையோர்களே! வணக்கம்! எவ்வளவோ பெரியவர்கள் இருக்கையில் என்னைத் தலைவராக தேர்ந்தெடுத்தது பற்றி வருந்துகிறேன். இருந்தாலும் அதை நான் மிகவும் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறேன். அதிகம் பேச விரும்பவில்லை. இளைஞர்கள் பேச இருக்கிறார்கள். முதலில் எனது உயிர் நண்பரும், உறவுமான முத்தையாப் பிள்ளை அவர்களின் செல்வக் குமாரனாகிய குமார் "சமூக முன்னேற்றம்" என்பதுபற்றிப் பேசுவார். அமைதியாக இருக்க வேண்டுகிறேன்.

குமார்:- (எழுந்து) இங்கு கூடியுள்ள அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்!

"நம் தமிழ் நாட்டிலே கப்பலோட்டிய தமிழன், கற்சிலையும் உயிர்த்தெழப் பாடிய கவி பாரதி, எப்பொழுதும் தமிழன் வீரனே என்பதை நிலைநாட்டின கட்டபொம்மு, இவர்கள் தோன்றிய தமிழ்நாட்டில், இன்னும் எத்தனையோ அறிஞர்கள், பெரியோர்கள் தோன்றிய நாடு. ஏன்? இன்னமும் தோன்றும் நாடு? நம் தமிழன்னைகூட பொதியமலைச் சாரலில்தான் தோன்றினாள். நம்புவார்களா? மாட்டார்கள். ஏன்? காலம் மாற்றிவிட்டது இந்த சமூகத்தாரை ஆம். காலந்தான் காரணம்! அது எப்படியும் இருக்கட்டும். அப்பேர்பட்ட தமிழ்நாடு இன்னமும் முன்னேறவில்லை. ஏன்? காலச்சக்கரமும், சூழ்நிலையும் சேர்ந்து இந்த சமூகத்தை இவ்வாறு மாற்றி விட்டது. காலம் ஒரு சோதனைக் கட்டமாகும் ஆம். அதனால்தான் முற்கால ஆட்சிமுறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத்தோன்றும். இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக்குறிய பலமான அஸ்திவாரம் கோல வேண்டிய கடமைகள் ஆகிய எல்லாவற்றை

யும் நம் அரசாங்கம் ஏககாலத்தில் கவனிக்க வேண்டியதாயிற்று, இல்லையென்று சொல்லவில்லை. அதற்காக, "எம் கடன் மக்களுக்குப் பணி செய்து கிடப்பதே" என்ற உயர்ந்த கொள்கையை சொல்லிவிட்டு, இன்னும் சரியான முறையில் கடைப்பிடிக்கவில்லை அக்கொள்கையை. மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளைகளை நிறைவேற்றவும்தான் ஜனப்பிரதிநிதிகள் அரசாங்கப் பதவியை வகித்து வருகிறார்கள் என்பதை மக்களாகிய நாம் உணரவேண்டும். இன்றைய சர்க்கார் சீர்திருத்தங்கள் செய்தும், அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நீங்களே அறிவீர்கள். நாம் எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள் நிறைவேறவில்லை. நம்முடைய எதிர்கால சந்ததிகள் மிகுந்த நற்பயன் அடைய வேண்டுமானால், இப்பொழுது இருக்கிற சமூக அமைப்பு சற்று மாறவேண்டும். அந்த வகையில் சற்று புரட்சியும் வேண்டும். இந்நிலையிலேயே போய்க்கொண்டு இருந்தாலும், எப்படியும் கடைசியிலே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அப்பொழுது மூலசாதனங்களுக்கு முடக்கம் இருக்காது. அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். உணவு, உடை, நெருக்கடி இருக்காது. பொதுவாகப் பொருளாதாரத்துறையில் ஒரு முன்னேற்றம், நிலையான நிலைமை ஏற்படும். மேலும், நீர்ப்பாசனத்திட்டம், மின்சாரத்திட்டம் இன்னும் அநேக திட்டங்களுக்குக் குறைவிருக்காது. அவைகளில் குற்றம் குறையும் இருக்காது. இத்தனை சாதனைகளுக்கும் காரணம் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பே என்று மனமுவந்து நம் சர்க்கார் மகிழ்ச்சி அடையும். சாதித்த பெருமை நிச்சயமாக பொதுமக்களாகிய உங்களுக்கே உரியதாகுமென்று சொல்லச் சர்க்கார் தயங்காது. கூடிய சீக்கிரம் நம் சர்க்காரையே இந்நிலைக்குக்கொண்டு வந்து விடுவோம். பயம் வேண்டாம். அது உங்கள் கையில்தான் இருக்கிறது, இருந்தாலும் இதை அறிந்துகொள்ள வேண்டிய உரிமையும், இது

பற்றித் தீர்ப்பளிக்கும் பொருப்பும் உங்களுக்கே உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறேன். கடமையோடு ஒவ்வொருவரும் உழைத்தால் நம் நாடு நிச்சயம் மேன்மையடையும். ஒன்று சொல்லி என் சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன். நண்பர்களே! நமது பெரியாராகிய உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி......அவர்...... தான் மட்டும் வாழ விரும்பாது சமுதாயமே உய்ய வழி தேடினர். அந்த உத்தமர் வகுத்த கொள்கைகளை உணர்ந்து நடந்தால் நம் வாழ்வு துலங்கும். அத்துடன் நம் திருவள்ளுவரின் பொன் மொழிகளைப் போற்றி, இன்சொலால் இவ்வுலகனைத்தையும் கட்டுபபடுத்தலாம் என்பதை உணர்ந்தால் நாம் நிச்சயம் மனிதருள் மாணிக்கமாக விளங்கலாம், என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டுகிறேன். அதுவே மிகவும் முக்கியம் "சொல்வது எளிது, செயலில் காட்டுவது கடினம்" என்பார்கள். ஆனல் நீங்கள் கடினத்தைக் கருதாமல் செயலில் ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் முடிக்கிறேன் வணக்கம். (கைதட்டல்)

இராஜேந்திரம்:- அடுத்தபடியாக என் மகன் சுந்தரம் பேசுவான்.

சுந்தர்:- எல்லோருக்கும் என் நன்றி...... அன்பின் வணக்கம். "நண்பர் குமார் கூறியதுபோல் மக்களிடத்தில் கடமை உணர்ச்சி வேண்டும். மக்களிடத்திலே சமத்துவம் வேண்டும். சமத்துவம் இல்லையானலும், தனி மனிதனுடைய அத்தியாவசியமான சுய தேவையாவது நிறைவேற வேண்டும். சுயதேவை நிறைவு வராவிடில் வெறுப்பும், வெறியும் சமுதாயத்தில் வளரத் தொடங்கி, கலகங்களை விளைவித்து, கொலையைப் பெருக்க ஏதுவாகும். உலக வரலாற்றில் இத்தகு இரத்தக்கறை படிந்த நிகழ்ச்சிகள் பலவற்றைக் காண்கின்றோம். இதையெல்லாம் கண்டும் நம் தமிழ் நாடு எந்த நிலையில் இருக்கிறது. வளம் படைத்த நாட்டில் வறுமை தலைவிரித்தாடுகின்றது. இன்பம் பூத்துக் குலுங்கிய நாட்டில் துன்பச் சூறுவளி சுழன்றடிக்கிறது.

தாராளம் வாழ்ந்த நாட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. வாழ்வில் வறுமையோடு போராடும் கொடிய பாதகமான சூழ்நிலை—பசி, பசி என்ற ஈனக்குரல் எங்கும் கேட்கப்படுகிறது. உயர்ந்த அடுக்கு மாளிகையில் சிலர் வாழ்வு, அம் மாளிகையின் முகப்பில் சாக்கடை அருகில் நாயோடு நாயாக சண்டையிடும் பலர் வாழ்வு...ஏன்? இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? சிந்தித்துப்பாருங்கள்; தோழர்களே! இன்றைய சமுதாய அமைப்பும், பொருளாதார அமைப்பும் தக்க முறையில் இல்லை. ஆகையால் எத்தனையோ பேர் வாழ்வதற்கே வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறார்கள். உடம்பால் உழைக்கப் பலர் காத்திருக்கிறார்கள். ஆனால் வேலையில்லை. மூளையால் உழைக்கப் பலர் காத்திருக்கிறார்கள்; தொழில் இல்லை. ஒரு சிலருக்கு மட்டும் எப்படியோ இடம் கிடைத்து விடுகிறது. அவர்கள் மட்டும் காலூன்றி நிலைத்து விடுகிறார்கள்; மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை; தங்கள் மனைவி மக்களை மட்டும் காப்பாற்றிக் காலம் கழிக்கின்றார்கள். மற்றவர்கள் வாழ்வதற்கும் வயிறு வளர்ப்பதற்கும் வழி இல்லாமல் வாய்ப்பே இல்லாமல் தவிக்கின்றார்கள். அவர்களைப் பற்றி இரக்கத்தோடு எண்ணுவார் இல்லை. அந்த ஏழைகள் கேட்டு வந்தது அவ்வளவுதான், அவரவர்க்கு அன்று அளந்த படிதான் இன்று கிடைக்கும் என்று சோம்பேறிப் பேச்சைப் பேசித் தட்டிக் கழிக்கின்றார்கள். இவர்களாவது தொடர்ந்து இன்பமாக அமைதியாக வாழ்கிறார்களா என்றால் அதுவுமில்லை. உள்ள தொழிலில் ஏதேனும் வீழ்ச்சி ஏற்பட்டால், அதற்கு ஒரு முடிவு ஏற்பட்டால், வருவாய் வற்றினால், இவர்களும் நிலை கலங்குகின்றார்கள்; தடுமாறுகின்றார்கள்; தவிக்கின்றார்கள்; அப்போது இவர்களைப் பார்த்தும் இரங்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. சுருங்கச் சொன்னால், இன்றைய சமுதாயத்தில் வாழ்வு என்பது நூற்றுக்கு இருவர் மூவருக்கு மட்டுமே உரியகலையாக அமைந்துள்ளது. பெரும்பாலோர் தடுமாறியும் தவித்தும் நசுங்குகின்ற ஒரு சமுதாயம் நாகரிகமானது என்று சொல்ல நாக்குக் கூசுகின்றது.

பிறந்த பறவைகள் அத்தனையும் வாழ்கின்றன, பிறந்த விலங்குகள் அவ்வளவும் வாழ்கின்றன. ஆனால் மனிதர்கள் பிறக்கின்றார்கள். அவர்களில் ஒரு சிலர் மட்டுமே வாழ்கின்றார்கள் என்றால், அதைவிட அநாகரிக அமைப்பு ஒன்று உண்டா? எண்ணிப்பாருங்கள் தோழர்களே! எண்ணிப் பாருங்கள்! இவ்வளவு சீர்கெட்ட நிலை நம்மைச் சுற்றிலும் உள்ளபோது, நாம் ஆடம்பரத்தை நாடுவது தகுமா? இது நாகரிகமா? மனமாரச் சொல்கின்றேன். இன்றைய நிலையில், பாவங்களில் பெரிய பாவம், குற்றங்களில் முதல் குற்றம் எது என்று என்னைக்கேட்டால், விபசாரம், கொள்ளை, கொலை என்று எவ்வெவற்றையோ சொல்ல மாட்டேன். ஆடம்பர வாழ்க்கை என்ற ஒன்றைத்தான் சொல்வேன். ஏன்? தெரியுமா?

விபசாரம், கொள்ளை, கொலை முதலியவை ஒரு சிலரைத் தான் அழிக்கின்றன. ஆனால் ஒரு சிலருடைய ஆடம்பர வாழ்க்கை எத்தனை பேரையோ பாழ்படுத்தி அல்லல் விளை-விக்கின்றது. இப்படி பெரும்பாலான குற்றங்கள் நாட்டில் விளையும்போது, ஒரு சிலரின் ஆடம்பர வாழ்க்கையைத் தடுக்க ஆற்றல் இல்லாமல், உண்மைக் காரணத்தை எடுத்துச் சொல்லவும் ஆண்மை இல்லாமல், நாட்டில் லஞ்சம் பெருகி விட்டதே என்று அலறுகிறார்கள்; நேர்மை குன்றிவிட்டதே என்று கதறுகிறார்கள்; ஒழுங்கும் ஒழுக்கமும் குறைந்து விட்டனவே என்று கூக்குரலிடுகின்றார்கள். "சாக்கடைகளைத் தேக்கி அழுக விட்டு விட்டு, அவற்றின் பழமையையும் புகழ்ந்துகொண்டு, கொசுக்கள் பெருகி விட்ட-னவே என்று கூக்குரலிடுகின்றவர்கள் இவர்கள். ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல், உணவு உடை தொழில் கல்வி ஆகிய அடிப்படைத் தேவைகளை எல்லோர்க்கும் அமைத்துத்தருதல் இவைகளைச் செய்யக் காலம் ஆனாலும் ஆகட்டும். போட்டிக்கும் பூசலுக்கும் குற்றங்களுக்கும் வழி அமைத்துத் தருகின்ற இந்த ஆடம்பரங்களை

யாவது தடுக்கலாமே! இதற்கு ஒரு சட்டம் பிறப்பிக்க ஒருவர் துணிவாரானல், அவரைத்தான் நாட்டின் முதல் தொண்டர் என்று நான் போற்றுவேன். ஏன்? அவர்தான் சமுதாய அழிவுக்குக் காரணமாக வளரும் நோயைத் தீர்க்க முடியா விட்டாலும், வளராமல் தடுக்கவாவது துணிந்தவர் என்று போற்றுவேன். இந்த பரந்த நோக்கம் யாருக்கு வருமோ அவரே என் கடவுள்!

உலகப் படைப்பை மட்டும் அறிதலும், உலக வரலாற்றை மட்டும் படித்தலும், காவியங்களை மட்டும் கற்றலும், கடவுளை மட்டும் பூசித்தலும் இருந்துவிட்டால் பரந்த நோக்கம் வந்துவிடாது. ஏழைகளின் முன்னேற்றத்தை எண்ணவேண்டும். சுற்றுப்புறம் சீர்பெற வழிகோல வேண்டும்; ஆடம்பர மோகத்தை அகற்ற வேண்டும்; தம் குறையைத் தாமே உணரவேண்டும். மேற்சொன்னவற்ருேடு இந்த நான்கும் பொருந்தினல்தான், குறுகிய நோக்கம் ஒழிந்து உயர்ந்த வாழ்வு அமையும். விவேகாநந்தரின் வாழ்வையும், காந்தியடிகளின் வாழ்வையும் ஆராய்ந்து பாருங்கள். அப்பொழுதுதான் உண்மை தெரியும். சிந்திக்கத் தெரிந்தவர்கள்தானே தமிழர்கள், சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து பின் என் பேச்சில் குறை இருந்தால் சொல்லுங்கள்... சிந்திக்குமாறு வேண்டி என் சிற்றுரையாகிய பேர் உரையை முடிக்கிறேன். அனைவருக்கும் என் அன்பின் வணக்கம். (கைதட்டல்)

இராஜேந்திரம்:- கடைசியில் தலைவர் முடிவுரை என்று இருக்கிறது. எனக்கு முடிவுரை என்ன சொல்ல என்றே தெரியவில்லை. இருவருமே அரிய பெரிய சொற்பொழிவு நடத்தினர்கள். நான் அதிகம் விரும்பாது... செயலாளர் அரசைப் பேச விரும்புகிறேன்.

அரசு:- பெருமக்களே! தலைவர் அவர்களுக்கு நமது நன்றியுடன் இப்பூமாலையை உங்கள் சார்பில் அணிவிக்கி

றேன். (கைதட்டல்) "என்னுடைய வாழ்க்கை சமூகம் முழுதுக்குமே சொந்தமானது, உங்களுடைய வாழ்க்கையை வளமாக்கவே நான் வாழ்க்கையை நடத்த விரும்புகிறேன்," என்ற பெருவிருப்பினர் Mister Sundaram அவருக்கும் உங்கள் சார்பில் இந்த மலர் மாலையை அணிவிக்கிறேன். (கைதட்டல்) சுந்திரத்தின் இணைபிரியா நண்பர் குமார் என்றாலே அதிலே சகலமும் அடக்கம். அவருக்கும் உங்கள் சார்பில் இந்த மணம்மிகு மலர் மாலையை அணிவிக்கிறேன். (கைதட்டல். எல்லோரும் போகிறார்கள்)

செல்லம்:- (நகர்ந்து வந்து) அண்ணா ஒரு அவசர சோலி இருக்கு நான் வருகிறேன்... அக்கா நான் வரட்டுமா? (செல்லம், சுந்திரத்தைப் பார்த்தும் கமலாவை பார்த்தும் கேட்டு விட்டுப்போதல், கமலாவும் தலையை அசைத்து வழி அனுப்புதல்)

கமலா:- மிஸ்டர் சுந்தரம்; Very good. I appreciat the lecture very good idea. உனது lectureரைப் பற்றி நான் வேறு என்ன சொல்ல. Marveloess, wonderful, beautiful.

சுந்தர்:- Thank you கமலா! ஏதப்பா குமார்! உன் தங்கை ஒரே அடியாக புகழ்கிறாளே......?

குமார்:- இதில் என்ன இருக்கிறது. உண்மையைத் தான் சொல்லுகிறாள். உன்னுடைய பேச்சு என்றாலே மக்களுக்கு ஒரே ஆனந்தம். அப்படியிருக்க கமலா உன்னை புகழாமல் என்ன? என் வீட்டில் சதா உன்னைப்பற்றியே பேச்சு. உன்னைப்பற்றி அப்படிப்பேச உன்னிடம் என்னதான் இருக்-றதோ தெரியவில்லை.

கமலா:- சரி; சரி, போதும் அண்ணா! உனக்கு வேறு வேலையிருந்தால் போய்ப் பார்!

சுந்தர்:- கமலா! உடனே கோபந்தானா! குமார் என்ன சொல்லிவிட்டான்...... இதற்கெல்லாம் இப்படி கோபப் பட்டால்......

குமார்:- சுந்தரம்! எப்பொழுதும் உள்ளதை உள்ளபடி சொன்னாலே அப்படித்தான்.

கமலா:- சரி சரி...மிஸ்டர் சுந்தர்! தாங்கள் எப்பொழுதுமே சமூக சேவையில் ஈடுபட உத்தேசமா?

சுந்தர்:- ஆமா! சமூகத்தில் எல்லோரும் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதே என் லட்சியம். "முயற்சி திருவினை யாக்கும்" என்பதுபோல், என் முயற்சியினுல் எனக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

கமலா:- சுந்தர், அப்படியானுல் எங்களுக்கும் மகிழ்ச்சி தான். ஆனுல் தங்களுடைய சேவையினுல் சமூகம் சீர்திருந்தலாம். இல்லை, இல்லாமலும் போகலாம், சமூகத்தை...

குமார்: சீர்திருத்துவது என்பது சாதாரண காரியமல்ல; பலரின் ஒத்துழைப்பு, அவர்களின் விடாமுயற்சி, பின்பு மக்களின் ஒற்றுமை இவைகளைப் பொறுத்துத்தான் இருக்கிறது சுந்தர்...

கமலா:- சுந்தர்! ஒருவரால் ஆகாத காரியம். அப்படியே போய் வெற்றி அடைந்தால் பெருமை. இல்லாவிட்டால், உங்கள் முயற்சி, வாழ்நாள், எல்லாம் வீணுகும். வேண்டாம் சுந்தர் அவ்வெண்ணம். சரியாக அவரவர் வாழ்க்கையை நடத்த முடியாத காலத்தில், பிறரை நம்பி சமூக சேவை செய்ய முடியுமா? நாங்கள் இருக்கிறோம் என்று இருக்கலாம். இருந்தாலும், "Self help is the best help" என்ற மாதிரி, தன் கையே தனக்கு உதவி செய்யுமே தவிர பிறரை எவ்வளவு காலம் நம்புவது. இப்படி இருக்கையில் எப்படிப் பிரசாரம் செய்து பிழைக்க முடியும். சற்று சிந்தித்துப் பார் சுந்தர். ஏதோ? நான் ஒரு பெண் சொல்லுகிறேன் என்று எண்ணிவிடாதே... ஏதோ? படித்திருக்கிறுய்... அதைக் கொண்டு பாடுபட்டு, பணம் சேர்த்து, பண்பும் அன்பும் கொண்டு பாங்குடன் வாழ பாதை தேடுங்கள். வீணே ஊர் வம்புக்கெல்லாம் ஆள் ஆகாதீர்கள். இந்தக் காலத்தில் என்னதான் பிரசாரம் செய்தாலும் இந்த பாமர மக்களுக்கு மண்டையில் ஏறுது? ஏன் என்ருல் பிரசங்கத்தின்போது யார்? யார்! பேச்சு சற்று விரைவாகவும், உரத்த பேச்சும்,

சற்று அடுக்குமொழியும், அரசாங்கத்தை இரண்டு திட்டு, ஆண்டவனை இரண்டு திட்டு திட்டிவிட்டால் போதும், உடனே அப்ளாஸ்தான். எக்கட்சியாக இருந்தாலும் அப்படித்தான். பின் எதற்காகக் கைதட்டினோம் என்பதையும் மறந்து பழையபடி மேலும் மேலும் தங்களுக்கே உரித்தான பழைய மடமையிலேயே மடத்தனமாக மூழ்கிக் கிடக்கிறார்கள். எதற்கும் சற்று படித்து இருந்தால் இந்த நிலை வராது. பள்ளி பக்கமே ஒதுங்கியிராதவர்களிடையில் சென்று அவர்களை உயர்த்துவது என்பது ஒருவரால் ஆகக்கூடிய காரியமல்ல. சுந்தர்! வீண் பிடிவாதம் வேண்டாம். நான் சொல்வதை சற்று......

குமார்:- யோசனை செய்யவேண்டிதே இல்லை. கட்டாயம் உன் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். நான் சொல்வது என்னவென்றால்......

சுந்தர்:- போதும்! குமார், போதும். நீயும் கமலாவைப் போல் லெச்சர் அடிக்க ஆரம்பித்து விடாதே.

குமார்:- அப்படியானால் உன் முடிவு.

சுந்தர்:- மாற்ற முடியாது, வறுமையில் வாடினாலும் சரி. இல்லை என் உயிர் போனாலும் சரி.

குமார்:- உன்னை அந்த நிலைமைக்கு விடமாட்டோம் சுந்தர். அதிலும் நாங்கள் உயிருடன் இருக்கும்வரை.

கமலா:- பல வழிகளிலும் பணத்தைச் சேர்த்து வைத்து இருக்கிறார் எங்கள் father, எல்லாம் எதற்கு.

குமார்:- நமக்குத்தான்...... சுந்தர்! நேரம் ஆகிறது. வா போகலாம்.

சுந்தர்:- குமார்! ஏது இன்று விநாயக முதலியாரும், அவர் மகள் நளினாவும் வந்து இருந்தார்களே.

கமலா:- ஆமாம். ஆச்சரியமாக இருக்கிறது. எவ்வளவு பெரியவளாக வளர்ந்து விட்டாள்.

குமார்:- இவ்வளவு நாள் அவள் எங்கிருந்தாள்.

கமலா:- எங்கோ! அவளுடைய சித்தி ஊருக்கு; போயிருந்தாளாம்.

குமார்:- ஓகோ! அப்படியா! சின்ன வயதில் பார்த்தது. இப்பொழுது எவ்வளவு உயரம் வளர்ந்து விட்டாள்... பெண் வளர்த்தி பீர்க்கங்காய் வளர்த்தி என்று சொல்லு வார்கள்...அது உண்மைதான். இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிருள்.

சுந்தர்:- குமார்! கண் போட்டு விடாதே.

கமலா:- சுந்தர்! என் அண்ணு இதுவரை எந்தப் பெண்ணையும் அழகாகயிருக்கிருள் என்று சொன்னதே கிடையாது.

சுந்தர்:- ஓகோ! அப்படியா! அப்படியானுல், உன் அண்ணன் நளினுவின் அழகில் மயங்கி விட்டான் என்று சொல். குமார்...அப்படித்தானே...ஏன்? அவளையே கலியாணம் செய்துகொள்ளேன். என்னப்பா......உனக்கு இஷ்டம்தானே...சொல்லு...என்ன...உம்...

குமார்:- இதெல்லாம் என்ன பேச்சு......

சுந்தர்:- என்ன பேச்சா; கலியாணப் பேச்சப்பா, கலியாணப் பேச்சு...... (சிரிக்கிருர்கள்)

(திரை)

---

## காட்சி 3.

இடம்: கமலா வீடு. காலம்:- பகல்.

தேவை: ராஜேந்திரப், முத்தையாப் பிள்ளை, தபால்காரன்.

(அலங்காரமான சின்ன பெஞ்சு—அதன்மேல் பின்னல் வேலைப்பாடுள்ள ரோஜா நிறத்துணி—அதன்மேல் வெள்ளித் தட்டில் வெற்றிலை, பாக்கு, ஊதுவத்தி, ஆரஞ்சுப்பழம், மலைப்பழம்

சந்தனக்குப்பா முதலியவை வைத்துயிருத்தல். முத்தையாப் பிள்ளை சோபாவில் படுத்திருத்தல் அவருடைய பார்வைக்கு எதிரே காந்தி படம்—அவர் அதைப் பார்த்துக்கொண்டே ஏதோ சிந்தனையில் இருத்தல்)

ராஜேந்திரம்:- (வந்து நின்று) முத்தையா, மிஸ்டர் முத்தையா...

முத்தையாப் பிள்ளை:- உம். (திரும்பிப் பார்த்து) நீங்களா! இப்படி உட்காருங்கள் ராஜேந்திரம்...

ராஜேந்திரம்:- நான் கூப்பிட்டது கூட கேளாமல் என்ன யோசனையில்...

முத்தையாப் பிள்ளை:- ஒன்றுமில்லை... இந்த காந்தி படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேனே தவிர, வேறே யோசனை பண்ணலே எவ்வளவு பெரியவர்! எவ்வளவு பாடு பட்டார்! கடைசியில் ஒரு காசும் சேர்க்கவில்லை. சுட்டுப் போட்டு விட்டார்கள். பாவம். என்னத்தைக் கண்டார்?

ராஜேந்திரம்:- அதற்கு நாம் என்ன செய்யலாம்? அவர் கேட்டு வந்தது அவ்வளவுதான்.

முத்தையாப் பிள்ளை:- என்ன உலகம்! அட உலகமே! இப்போது அவருடைய பேரைச் சொல்லி எத்தனைபேர் எவ்வளவு பணம் சேர்க்கிறார்கள்? எவ்வளவு சுகமாக இருக்கிறார்கள்? எல்லாம் அவரால்தானே. அதனால்தான் நான் காந்தி பேரைச் சொல்லிக்கொண்டு யார் வந்தாலும் தருமம் செய்கிறேன். நேற்றுக்கூட, ஒரு சங்கத்துக்கு நூறு ரூபாய் கொடுத்தேன். பெரிய காந்தி படம்—இதைவிடப் பெரிய படம்—நிற்கிற மாதிரி காந்தி படம்—என்ன விலையானாலும் சரி—அவர்களுக்கு ஒன்று வாங்கிக் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறேன்.

ராஜேந்திரம்:- ஆமாங்க, ஏதோ இன்கம்டேக்ஸ், இன்னும், என்ன என்னவோ கணக்கு. என்னவோ

தகராறு இருப்பதாகப் போன வாரம் சொன்னீர்களே. அது என்ன ஆச்சு?

முத்தையாப் பிள்ளை:- அதுவா? அதற்காகத்தான் நேற்று அந்தக் காந்தி சங்கத்தாருக்கு நூறு ரூபாய் கொடுத்தேன். அந்தச் சங்கத்தில் இருப்பவர்களுக்கு ஆபீஸர்கள் தெரியுமாம். அதனால் அந்தப் படத்தைச் சீக்கிரத்தில் வாங்கிக்கொடுக்கப் போகிறேன். அதுவரையில் வழக்கு ஒத்திவைக்கும்படியாக வக்கீலுக்கு சொல்லியிருக்கிறேன்.

ராஜேந்திரம்: காந்திப் படம் கொடுத்தால் விட்டு விடுவார்களா? அப்படியானால்

முத்தையாப் பிள்ளை:- நீர் ஒரு பைத்தியம்! உமக்கு யார் சொல்லுவார்கள். உனக்கு ஒன்றுமே தெரியவில்லை இன்றைய சமூகத்தின் போக்கு. நீ சும்மா இரு.

ராஜேந்திரம்:- சரி! நான் வாயை மூடிக்கொள்கிறேன். இப்படியே கவலையை யெல்லாம் உங்கள் மனசிலேயே வைத்துக்கொண்டிருந்தால்.?

முத்தையாப் பிள்ளை:- இது ஒன்றும் கவலை இல்லை, தந்திரம். லஞ்சமாகக் கொடுத்தால் கை நிறையக் கொடுக்க வேண்டும் அதற்கு இப்படிச் செய்யலாம் என்று பார்க்கிறேன்.

ராஜேந்திரம்:- உம். எப்படியோ செய்யுங்கள். ஆனால் பையனுக்கு இதையெல்லாம்......

முத்தையாப் பிள்ளை:- அவனுக்கு எதற்கு இந்த வம்பெல்லாம் நன்றாகப் படிக்கிறான். இந்த வருஷமே அவனுக்கு கடைசி. இதை முடித்துவிட்டால், அவன் ஏன் வியாபாரத்துக்கு வரணும்? பெரிய உத்தியோகத்துக்குப் போனால், அவனுடைய கால் மாட்டில் எத்தனையோ வியாபாரிகள் விழுந்து கிடப்பார்களே! அவனுக்கு என்ன குறைச்சல்!

ராஜேந்திரம்:- உத்தியோகத்திலே அவ்வளவாகச் சம்பாதிக்க முடியாது என்று பையன் சொன்னுனே!

முத்தையாப் பிள்ளை:- யார் சொன்னது? அவனே சொன்னுனு? குமாரா?

ராஜேந்திரம்:- ஆமாம்! பையன்தான் சொன்னுன்.

முத்தையாப் பிள்ளை:- அட தெய்வமே! இதற்காகவா அவனை இவ்வளவுக்குப் படிக்க வைத்தேன். அங்கங்கே நாற்பது ரூபாய் குமாஸ்தா நாலாயிரம் ஐயாயிரம் என்று சேர்த்து வைக்கிறுன். இவனுக்கு இப்போதே கையாலாகாத பேச்சா?

ராஜேந்திரம்:- ஏன்? பையன் விருப்பம்போல வியாபாரமே செய்யட்டுமே! நமக்கு என்ன? உங்களுக்குப் பின்னுல் மண்டிக்கு ஆள் வேண்டுமே! உங்களுக்கும் துணை வேண்டுமே!

முத்தையாப் பிள்ளை:- ஐயோ ஐயோ! வியாபாரத்தில் நானும் சம்பாதித்தேன். என்னைப்போல் திறமை இவனுக்கு வருமா? உத்தியோகத்தில் கண்ணுக்கு மறைவாக நாலு காசு வாங்கிக் கை நிறையச் சேர்க்கத் தெரியாதவன், இவனு வியாபாரம் செய்ய முடியும்? வியாபாரம் என்ருல் சும்மாவா? தலை போகிற வேலை ஆச்சே? போன மாதத்தில் சர்க்கரைப் பஞ்சம் வந்தது திடீரென்று. நூறு மூட்டையைப் பதுக்கி வைத்தேன். எங்கே வைத்தேன், எப்படி வைத்தேன், எந்த வகையில் செலவு செய்தேன், எத்தனை ஆயிரம் எனக்கு லாபம் வந்தது. இதெல்லாம் யாருக்காவது தெரியுமா? உனக்குச் சொல்லியிருப்பேனு? யாருக்காவது மூச்சுதான் விட்டிருப்பேனு? தெரிந்திருந்தால் என்ன ஆயிருக்கும்? தலை போயிருக்கும் வீடு, வாசல், மானம் எல்லாம் போயிருக்குமே! எத்தனை பேருக்கு என்னென்ன லஞ்சம் கொடுத்தேன். இந்தக் காசுக்கெல்லாம் ஒரு துண்டுக் காகிதத்தில்

கணக்கு உண்டா? எல்லாம் இங்கேதான். (தன் நெற்றியை சுற்றிக்காட்டி)

ராஜேந்திரம்:- ஏனுங்க இவ்வளவு பயமான வேலே?

முத்தையாப் பிள்ளே:- நீ சும்மா இரு! என்னவோ நடுங்குகிருயே!

ராஜேந்திரம்:- அப்படியானல், தங்கள் பையன் குமாருக்கு இந்த வியாபாரம் வேண்டவே வேண்டாம். (தபால்காரன் வருதல். இவனைப் பார்த்து முத்தையாப் பிள்ளே வரவேற்றல்)

முத்தையாப் பிள்ளே:- வாங்க... தபால்கார அய்யா!

தபால்காரன்:- வணக்கம் ஐய்யா! ஒரு வி. பி. பி. இருக்கிறது. உங்கள் பையன் பேருக்கு வந்திருக்கிறது. (புத்தகக் கட்டை எடுத்துக் காட்டல்)

முத்தையாப்பிள்ளே:- சரி, நல்லது. எவ்வளவு பணம் கட்டவேணும்? நானே கட்டுகிறேன்.

தபால்காரன்:- ஒன்பது ரூபாய் பத்தணுங்க.

முத்தையாப்பிள்ளே:- அப்படியா, இந்தாரும் (பர்ஸைத் திறந்து ரூபாய் கொடுத்தல். தபால்காரர் கையெழுத்துக்கு இடம் காட்டுகிருர். முத்தையாப்பிள்ளே கையெழுத்துப் போடுகிருர். புத்தகக்கட்டைக் கொடுத்துவிட்டு தபால்காரர் போகிருர்).

தபால்காரன்:- வ...ரேனுங்க.

முத்தையாப்பிள்ளே:- ஐயா தபால்காரரே! ஒரு சின்ன உதவி.

தபால்காரன்:- என்னங்க? சொல்லுங்க.

முத்தையாப்பிள்ளே:- இந்த வாரத்தில் மண்டித் தெருவில் யாருக்காவது கல்கத்தாவிலிருந்து ஏதாவது பாஸ் வந்திருக்குமா?

தபால்காரர்:- உம் நேற்று சனு, முனு, கனு, தானுவுக்கு ஒன்று வந்தது. அது என்னவோ தெரியாதுங்க.

முத்தையாப்பிள்ளை:- பம்பாயிலிருந்து...?

தபால்காரர்:- நினைவு இல்லைங்க, இனிமேல் வந்தால் சொல்லுகிறேன்

முத்தையாப்பிள்ளை:- கொஞ்சம் நினைவு இருக்கட்டும்; வியாபாரம் லாட்டரிச்சீட்டு மாதிரித்தான். உங்கள் உதவியெல்லாம் இருந்தால்தான் நாங்கள் பிழைக்க முடியும். உதவியை மறக்கமாட்டோம்.

தபால்காரர்:- அதற்கென்னங்க! போய் வ...ரேனுங்க.

முத்தையாப்பிள்ளை:- (புத்தகக்கட்டை பிரித்தபடியே) சரி போய்வாங்க, போய்வாங்க. (ஒவ்வொன்ருக எடுத்துப் படித்தல்). 1. உத்தம வாழ்க்கை, 2. சத்தியசோதனை. 3. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் 4. காந்தி அண்ணல். 5. அனுசக்தி யோகம். 6. மாணவர்க்குக் காந்தியடிகள். அட தெய்வமே! ராஜேந்திரம்! இது என்ன தொல்லை! என்னவோ என்று பார்த்தால், இந்தப் பையன் எல்லாம் காந்தி - காந்தி - காந்தி என்று புத்தகங்களைத் தருவிக்கிருன். இதற்குவேறே ரூபாய் தண்டமா? இதுதான் கல்லூரியில் படிக்கிற அழகா? சரிதான் என்ன பாடுபட்டாலும் அவன் போக்கு இப்படிப் போகிறதே! சரிதான் - சரிதான் சீச்சீ இவனு என் மகன்.

ராஜேந்திரம் :- முத்தையா! ஏன் இவ்வளவு கோபம். நீ சிறு வயதில் எப்படியிருந்தாய்? எல்லாம் காலக்கிரமத்தில் சரியாகப்போய்விடும்.

முத்தையாப்பிள்ளை:- உம் பார்ப்போம்! எல்லாம் என் தலைவிதி உம் எப்படியும் நல்ல நிலைக்கு வந்தால் போதும் (மணி 9-30 அடித்தல்) ராஜேந்திரம் நீ ஆபீஸிற்குப் போக வேண்டாமா? ஆமா செல்லம் என்ற பெண்ணை அழைத்து வந்துயிருக்கிருயே? போயும் போயும் ஒரு பிச்சைக்காரியை...

ராஜேந்திரம்:- முத்தையா! அவள் என் மகள்; பிச்சைக்காரி இல்லை......! உனக்கும் ஒருவகையில் மகள். இனி இப்படி......

முத்தையாப்பிள்ளை:- சொல்லமாட்டேன்.....மன்னிக்க வேண்டும்.

ராஜேந்திரம்:- பரவாயில்லை, தங்களையா நான் மன்னிப்பது? என்னையல்லவா தாங்கள் மன்னிக்கவேண்டும்.

முத்தையாப்பிள்ளை:- அதெல்லாம் சரி, நேரம் ஆகிறது போய்வா. ஆமா எங்கே வந்தாய்! என்ன வேண்டும்?

ராஜேந்திரம்:- ஒரு இருநூறு ரூபாய் வேண்டும்.

முத்தையாப்பிள்ளை:- முன்பு வாங்கிய கடனையே கொடுக்கவில்லை. உம். உன் சம்பளம் எல்லாவற்றையும் என்னதான் செய்கிறாய்? அப்படி என்ன செலவு? காணவில்லையா?

ராஜேந்திரம்:- எங்கேங்க காணுது! நானும் இந்த வயசிலே எவ்வளவோ பார்த்திட்டேன் எனக்கு சம்பளமும் பஞ்சப்படியும் சேர்ந்து வருவது மாதம் நூற்று இருபத்து மூன்று ரூபாய்தாங்க. இதிலே வீட்டுவாடகை, பால் கடன், தயிர்க்கடன், மருந்துச் செலவு, பையன் படிப்புச் செலவு எல்லாம் கொடுத்து பாதியும் மீதியாவதில்லை. அந்தப் பாதியில் மாதம் முப்பது நாளும் அரிசி வாங்கிப் புளி மிளகாய் வாங்கிச் சாப்பிடவே போதவில்லை. என்ன படித்தும் பயன் இல்லை. சம்பளம் வாங்கி மிகவும் சிக்கனமாகத்தான் செலவுசெய்கிறேன். ஆனாலும் என்ன பயன்?

முத்தையாப்பிள்ளை:- இதில் வேறு அந்தச் செல்லத்தையும் அழைத்து வைத்துக்கொண்டாய்?

ராஜேந்திரம்:- அவளால் ஒன்றும் எனக்கு கவலை இல்லை. அவள் வந்தபிறகுதான் என் மனம் கவலையற்று நிம்மதியாக இருக்கிறேன். சுந்திரமும் - செல்லமும் எவ்வளவு அன்யோன்யமாக இருக்கிறார்கள் தெரியுமா? ஏன் கமலாவிற்கும் - குமாருக்கும்தான் எவ்வளவு மகிழ்ச்சி அவளைப் பார்த்தால்!

முத்தையாப்பிள்ளை:- அப்படியா! ரொம்ப சந்தோஷம். கொடுத்துவைத்தவள் தான் செல்லம்......

ராஜேந்திரம்:- சரி நேரமாகிறது வருகிறேன். பிறகு பேசலாம்.

முத்தையாப்பிள்ளை:- சரி வாருங்கள்! பணம் தருகிறேன் (போதல்)

( திரை )

**காட்சி 4.**

இடம்:- நளினா வீடு. காலம்:- மாலை

தேவை:- விநாயக முதலியார், நளினா, குமார், செல்லம்.

பாட்டு.

(நளினா பூ கட்டிக்கொண்டு இருத்தல், விநாயக முதலியாரும் குமாரும் வீட்டிற்குள் வருவதைப் பார்த்து, எழுந்து போகப் பார்த்தல் நளினா).

விநாயக முதலியார்:- அம்மா! நளினா! என்ன வெட்கம்! சும்மா இங்கே வாம்மா! படித்தவள் இப்படி வெட்கப்படலாமா? நளினா? இவர் யார் தெரியவில்லை! அன்று முதலில் பேசினாரே அவர்தான்...உனக்குத்தான் தெரியுமே...அம்மா நளினா! சீக்கிரம் டிபன் தயார் ஆகட்டும்... உம்... போய் சீக்கிரமாக......

நளினா:- அப்படியே செய்கிறேன் அப்பா! (போதல்)

விநாயகம்;- குமார் இப்படி உட்காருங்கள். (நளினா திரும்பிப் பார்த்ததைப் பார்த்தல்) நளினா என்னம்மா?

நளினா:- (வெட்கத்தோடு) ஒன்றுமில்லையப்பா! (ஓடி விடுதல்)

விநாயகம்:- (உட்கார்ந்துகொண்டே) உம்...நல்ல காலம் என்று வருமோ? என்று கடவுள் கண் திறக்கிறாரோ? உம்...

(அமைதி. இச்சமயம் குமார் சுற்றுமுற்றுப் பார்த்துவிட்டு விநாயக முதலியார் முகத்தைப் பார்த்தல்)

குமார்:- ஏன்? ஒரு மாதிரியாகயிருக்கிறீர்கள். வாட்டத்திற்குக் காரணம்.

விநாயகம்:- வாட்டமில்லாமல் என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்! என்று கடவுள் கண் திறக்கிருரோ? அன்றுதான் என் மனக்கவலை தீரும்.

குமார்.- உங்கள் மனக்கவலைக்கு அப்படியென்ன நடந்து விட்டது.

விநாயகம்:- எல்லாம் என் விதி.

குமார்:- விதியா! "விதியையும்மதியால் வெல்லலாம்" மாமா! மதியால் வெற்றியடையாததே இந்த உலகத்தில் இதுவரை ஒன்றுமில்லை மாமா! Oh! I am sorry...ஸார்! என்னை மன்னிக்க வேண்டும். மாமா, மாமா என்று என்தாய் மாமாவைக் கூப்பிட்டுப் பழக்கம். அதனுற்ருன் அடிக்கடி என் வாயில் மாமா என்று......

விநாயகம்:- பரவாயில்லை...இதற்கென்ன... நானும் உனக்கு ஒரு வகையில் மாமா என்றுதான் வைத்துக்கொள்ளேன். அப்படியே சும்மா கூப்பிடு. என்னைப் பார்த்தால் தாத்தா மாதிரியாயிருக்கு.

குமார்:- அதெல்லாம் ஒன்றுமில்லை... ஆமா... உங்களுக்கு என்ன குறை! விதி என்றீர்களே... "விதியையும் மதியால் வெல்லலாம்" மாமா!

விநாயகம்:- ஆனுல்! என் வாழ்க்கையில் நடந்ததைக் கேட்டால்? இப்படிச் சொல்ல மாட்டாய்?

குமார்:- அப்படி என்ன நடந்தது... சொல்லுங்கள் மாமா?

விநாயகம்: குமார்! நான் பள்ளியில் படிக்கையில் பகுத்தறிவு இயக்கத்தில் தணியாத தாகம் கொண்டேன்.

ஆகையினுல் வேற்று சாதிப்பெண் என்ற பேதத்தையும் மூட நம்பிக்கையையும் தீயில் போட்டு பொசுக்கிவிட்டு, காதலித்த கட்டழகி கற்பகத்தைக் கைப்பற்றினேன். காதலர்களாகிய நாங்கள் கதிகலங்காமல் காலம் தள்ளினேம். ஆனுல் அந்த ஆனந்தத்தை ஆண்டவன் அழித்து விட்டான். நளினு பிறந்து மூன்று வருடத்தில் வியாதியால் வீழ்த்தப்பட்டு விடுபடா தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள் என் அருமைக் காதலி கற்பகம். உம்...என்ன மனித வாழ்க்கை...

குமார்:- வருத்தம் வேண்டாம் மாமா! நடந்தது நடந்து விட்டது. கடந்த காலத்தைப்பற்றி கவலைப்பட்டு என்ன பயன்.

விநாயகம்:- அப்படிச் சொல்லாதேயப்பா? கடந்த காலம் நெருப்பு என்ருல் நிகழ்காலம் அதன் புகையாகும். சிலருக்குக் கடந்த காலம்தான் இன்பமூட்டுவதாக இருக்கும். அதை நினைத்துத்தான் சந்தோஷப்படுவார்கள். நான் அந்த ரகத்தைச் சேர்ந்தவன்தான். என் கடந்த காலத்தில் என் காதலி கற்பகத்தோடு இருந்ததை நினைத்தால்தான் எனக்கு மகிழ்ச்சி தருகிறது. இப்படியிருக்க, கடந்த காலத்தைப்பற்றி கவலைப்படாதீர்கள் என்ருல் என்னுல் இருக்க முடியுமா? உம். எப்படியோ காலத்தைக் கடத்தி வருகிறேன் ஆனுல் இரண்டாம்தாரம் மணம் செய்துகொள்ள மட்டும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. எப்படியோ பல ஆண்டுகள் அண்டி ஓடின – ஆனுல் இப்பொழுதுதான் பெரும் வேதனை அடைகிறேன். எவ்வளவுதான் மன ஆறுதலோடு இருந்தாலும், மனம் மட்டும் சந்தோஷப்பட வழியில்லை. என் செல்வம் நளினுவிற்காகத்தான் நான் இன்னமும் உயிருடன் இருக்கிறேன். இல்லையென்ருல்......

குமார்:- அப்படிச்சொல்லாதீர்கள், உங்களுக்கு என்ன குறை.

விநாயகம்:- உம்...ஊருக்கு உபதேசி, ஆனுல் வீட்டில் பரதேசியின் கதியிலும் மோசம்... குமார்! நீ கோபப்பட்டுக்

கொள்ளாதே! நீயே சொல்லு, நாளுக்கு நாள் ஊருக்கு உபதேசம் செய்பவர்கள் பெருகுகிறார்களே தவிர, சொன்னதை தங்கள் வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களின் எண்ணிக்கை தேய்ந்து கொண்டே வருகிறது என்பது மட்டும் உண்மை. என்ன? நான் சொல்வது......?

குமார்:- ஆம், மாமா! நீங்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை.

விநாயகம்:- இப்படிப்பட்ட நிலையிலிருக்கிறது இன்றைய சமூக சீர்திருத்தங்கள்... உம்... என்னமோ... நாடு நலமாயிருந்தால் போதும்.

குமார்:- என்ன மாமா! சதா வாழ்க்கையை வெறுத்தவர்கள்போல பேசுகிறீர்கள். உங்கள் மனம்தான் அப்படி என்ன யோசனை பண்ணுகிறது.

விநாயகம்:- என்ன யோசனை! எல்லாம் என் மகளைப் பற்றித்தான்.

குமார்:- ஆமா! அவளுடைய வாழ்க்கையைப்பற்றித்தானே! இதற்கு என்ன யோசனை வேண்டியிருக்கிறது. அவளை நன்றாக படிக்க வைத்துவிட்டால் போகிறது. படித்தால், ஏதாவது ஒரு வேலை கிடைக்காமலா போகிறது? இதற்கு என்னமோ பெரிய யோசனை பண்ணுகிறீர்கள். ஏன்? மேலும் படிக்கவைக்க உத்தேசமில்லையா உங்களுக்கு.

விநாயகம்:- இல்லை குமார்! படிப்புக்கு வேறு பணம் வேண்டும். எங்கு போக... மேலும் பெண்களுக்கு அதிகப் படிப்புக் கூடாது. ஆனால் நளினி படிக்கவேண்டும் என்று தான் சொல்லுகிறாள்... எனக்கு என்னமோ அதில் இஷ்டமில்லை... காலாகாலத்திலே இவளுக்கு கலியாணத்தை முடித்துவிட்டால், நிம்மதியாகச் சாவேன்... குமார்...! அதற்கும் ஒரு வழி வகுத்துவிட்டேன் உங்களைப் பார்த்ததுமே... என் மனதில் உள்ளதைச் சொல்கிறேன்...குமார்! உங்கள் இருவரில் ஒருவருக்கு என்று......

குமார்:- என்ன?

விநாயகம்:- குமார்! நீ ஆச்சரியப்படலாம். பெண்ணைப் பெற்ற தகப்பனுரா இப்படிப் பேசுகிருரென்று. குமார்! என் மன நிலையை அறிய அதிக நாள் பிடிக்காது. நீயே அறியலாம். இன்று உன்னுடன் இவ்வளவும் ஏன் சொல்ல வேண்டும். நீயே யோசித்துப் பார். என் மனம் அமைதி அடைய வேறு வழியில்லை. அடக்கி வைத்து, அடக்கி வைத்து என் மனம் வெடித்துவிடும் நிலையிலிருந்தது... இன்று உன்னைக் கண்டதுமுதல் எனக்கு அமைதி காண்பது போல தோன்கிறது. என் மனதில் தோன்றியதை எதுவும் ஒழிவு மறைவின்றி உன்னிடம் சொல்லிவிட்டேன். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. என் மகளின் வாழ்க்கையே இனி என் வாழ்க்கை. அவள் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி. ஆனல் எங்கள் நிலைமையெல்லாம் உனக்குத் தெரியுமென நினைக்கிறேன். குமார்! எனக்கு எவ்வளவோ கஷ்டம். எனக்கு இருக்கும் கடனையெல்லாம் நினைத்தால்... ஐயோ! நான் எப்படித்தான் கொடுக்கப் போகிறேனே? தெரிய வில்லை... உம்... கடவுளே நீதான் கதி......

குமார்:- நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்... எல்லாம் காலக்கிரமத்தில் சரியாகப் போய்விடும். (நளினு வருதல்) அததற்கு நேரம் வரனும்...

நளினு:- அப்பா! டிபன் ரெடி, வாருங்கள்

விநாயகம்:- குமார்! உம்... புறப்படு... சாப்பிடப் போகலாம். (செல்லம் வருதல்) வாம்மா செல்லம், ஏது? இன்று இவ்வளவு நேரம்......

குமார்:- செல்லம், தினமும் இங்கு வருவாயா?

செல்லம்:- ஆமாம் அண்ணு;...... அண்ணு? உங்களை அண்ணு தேடிக்கொண்டிருந்தார்.

குமார்:- அப்படியா! அப்படியானுல் நான் அவசரமாகப் போகவேண்டும்.

விநாயகம்:- அதற்கென்ன, சாப்பிட்டவுடன் போங்கள்... உம்... வாருங்கள்... (போகிறார்கள் உள்ளே)

( திரை )

## காட்சி 5.

இடம்:- கமலா வீடு. காலம்:- பகல்.

தேவை:- முத்தையா, ராஜேந்திரம், கமலா, குமார், சுந்தர்,

(முத்தையாப் பிள்ளை கணக்குப் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருத்தல்)

ராஜேந்திரம்:- (மெதுவாக உள்ளே வந்து நின்று) வணக்கம் ஐயா!

முத்தையா:- யாரு! ராஜேந்திரமா! வாருங்கள்... வாருங்கள் இப்படி உட்காருங்கள்...

ராஜேந்திரம்:- (உட்கார்ந்தவாரே) ஏதோ! வேலையாக இருக்கிறீர்கள். நான் வந்தது தடையோ, என்னவோ?

முத்தையா:- என்ன வேலை! எங்கள் பிழைப்புத் தெரியாதா? நாய் படாதபாடு. நிற்க நேரமில்லை, குடிக்கத் தண்ணீரில்லை என்ற கதைதான். எங்கள் பிழைப்பைவிடத் தெருவில் திரிகிற பிச்சைக்காரன் பிழைப்பே மேல், அவனாவது கவலை இல்லாமல் தூங்குகிறான். எங்களுக்கு எந்த நேரமும் இந்தக் கவலைதான்...உம்... (பேரேடு புத்தகத்தில் பக்கத்தைத் திருப்புதல்)

ராஜேந்திரம்:- கணக்குப் பார்க்கிறீர்களா?

முத்தையா:- கணக்குத்தான். இந்தக் கணக்கெல்லாம் எத்தனையோ ஆபீஸ்களுக்குப் போகவேண்டிய கணக்குகள். கொஞ்சம் பக்குவமாக, முன் பின் பார்த்து, தக்கபடி, ஒரு வகையாக, திறமையாக, யாரும் சந்தேகப்படாதபடி,

அறிவாக எழுதவேண்டும். இந்தக் கணக்குப்பிள்ளைக்கும் மற்றவர்களுக்கும் எத்தனைமுறை சொல்லிக் கொடுத்தாலும் பயன் இல்லை. மூளையில்லாத முண்டங்கள்! நான் பாடுபட்டுச் சேர்த்துத் தரும் பணத்தைச் சம்பளமாக வாங்கிக்கொண்டு போய்ச் செலவு செய்வதற்குக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது ஒன்றுதான் தெரியும் அவர்களுக்கு... நமக்கு வாய்த்த பெண்ணும், பிள்ளையும் அதற்குமேல்... சொன்னபடி கேட்குதுகளா?... உம்... எல்லாம் யாருக்காக... உம்... என் தலைவிதி... இதுகளை கட்டி அழவேண்டியிருக்கிறது... அது போகட்டும்... எங்கே வந்தீர்கள்?

ராஜேந்திரம்:- உங்களைப் பார்த்துட்டுப் போகலா மென்றுதான் வந்தேன். உங்களால் ஒரு உதவி.

முத்தையா:- என்ன அப்படி?

ராஜேந்திரம்:- உங்களால் ஒன்று ஆகவேண்டும் எனக்கு!

முத்தையா:- என்னாலேயா! உமக்கா! வேடிக்கையாக இருக்கிறதே!

ராஜேந்திரம்:- அது உங்களால்தான் ஆகும். வேறு யாராலும் ஆகாது.

முத்தையா:- அப்படியா! அப்படி ஒன்றும் எனக்குச் செல்வாக்கு இல்லையே! வேண்டுமானால் அரிசி பருப்புக் கேளுங்கள். பங்கீட்டுக் கடையில் இருப்பதுபோல் இல்லா-மல் கொஞ்சம் நல்ல சரக்காகப் பார்த்து அனுப்புவேன். எவ்வளவு வேண்டும்.

ராஜேந்திரம்:- அதற்கெல்லாம் பணம் வேண்டுமே...!

முத்தையா:- உங்களைப்போல் சம்பளக்காரரே அப்படி சொன்னால், எங்களைப்போல வியாபாரிகள் என்ன சொல்வது?

ராஜேந்திரம்:- என்ன தலைகீழாய்ச் சொல்கிறீர்களே!

முத்தையா:- உண்மையைத்தான் சொல்கிறேன்...... நீங்களே சொல்லுங்கள் எங்கே என்ன விளைந்தாலும் - விளையாவிட்டாலும், வியாபாரம் நடந்தாலும் நடக்காவிட்டாலும், யார் செத்தாலும் பிழைத்தாலும், தேர்தலில் யார் வந்தாலும் வராவிட்டாலும், சர்க்கார் ஆபீசில் உள்ள உங்களுக்குச் சம்பளம் மட்டும் நிற்கப்போவதில்லை. எங்களுக்கு அப்படி இல்லையே...... இரண்டு வாரம் வியாபாரம் மந்தமாக நடந்தால்போதும்; நாங்கள் இன்சால்வெண்ட் பாரத்தைத் தேடிக்கொண்டிருக்க வேண்டுமே... சொன்னால் நம்பமாட்டீர்கள்......பணத்துக்காக இப்போது நாங்கள் படுகிறபாடு, எங்களைப் படைத்த பிரமன்கூடப் பட்டிருக்க மாட்டான்......

ராஜேந்திரம்:- உண்மைதான். தாங்களைப் பார்த்தாலே தெரியுது... என்னமோ நீங்கள் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை.

முத்தையா - நான் சொன்னதை என்றுதான் நீங்கள் நம்பினீர்கள், ஆமா... என்ன உதவி!

ராஜேந்திரம்:- பையன் சுந்தரம் வேலையில்லாமல் இருக்கிறான். அவனுக்கு ஒரு வேலை (கமலா கையில் புத்தகங்களுடன் வருதல்).

முத்தையா:- ஏன்? சுந்திரத்தை மேலும் படிக்கவைக்கவில்லையா? என்னய்யா? பெண்ணாய்ப் பிறந்த கமலாவே இன்னும் படிக்கனும் என்கிறாள்! ஆனால் இவளை மேலும் படிக்கவைக்க எனக்குத்தான் இஷ்டமில்லை.

கமலா:- அப்பா! நான் கட்டாயம் படிக்கவேண்டும் மாமா! கட்டாயம் சுந்தரையும் படிக்கவையுங்கள்.

ராஜேந்திரம்:- பார்த்தீர்களா! சுந்திரத்தின் மேல் கமலாவிற்கு உள்ள அக்கரையை...!

முத்தையா:- இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது! பிறந்ததுமுதல் ஒன்றாகவே இருக்கிறார்கள்; ஒன்றாகவே படிக்

இருர்கள்; ராஜேந்திரம்! சதா சுந்தரைப்பற்றித்தான் பேச்சு கமலாவிற்கு......உம்.

கமலா:- போங்களப்பா...! (வெட்கம்)

முத்தையா:- இவ்வளவு பழகியும் அத்தானுக்காக பரிந்து பேசமாட்டாளா? என்ன? கமலா! நீ படித்தது போதும்......சுந்தரம் படிக்கட்டும். நீ பேசாமல் வீட்டில் உள்ளதைக்கொண்டு காலத்தைத்தள்ளு.

கமலா:- (கோபம்) காலத்தைத்தள்ள வீட்டிற்குள் இருந்தால் போதுமா?

ராஜேந்திரம்:- முத்தையா! கமலா படிக்கட்டும்...... இந்தக்காலத்தில் பெண்கள் படித்து என்னென்ன வேலையி லிருக்கிருர்கள் தெரியுமா? அதைப்போல நம்ம கமலாவும் ஒரு நல்ல பதவியில் இருந்தால் நமக்கும் நம் குடும்பத்திற்கும் எவ்வளவு கௌரவம்... மேலும் உங்களுக்கு பணம் அனுப்பு வாள். என்ன நான் சொல்லுவது.

முத்தையா:- உம்...பணம்...பணம் அனுப்புவாள் இல்லை யென்று சொல்லவில்லை. உம்...அதெல்லாம் நமக்கு எதற்கு. போதும் நமக்குள்ள பணம். ராஜேந்திரம்! பெண்களுக்கு அதிகம் படிப்புக்கூடாது. படித்தது போதும்! எதற்காக அதற்கு வேறே செலவு. வீட்டில் ராஜாத்திமாதிரி இருக் கலாம். வேலை பார்த்து நமக்கு என்ன வேண்டிக்கிடக்கிறது. பையன் குமார் படிக்கிருன். அவன்மட்டும் வேலைக்குப் போனுப்போதும். பெண்களுக்கு எதற்கு வேலையெல்லாம்... என்ன? வேலைபார்க்கிற இடத்தில் உள்ளவர்கள் எப்படி எப்படி இருப்பார்களோ? யார்கண்டது? ஒரு பெண் தன்னந் தனியே வழியேபோனுல் அவளை வாய்க்கு வந்தமட்டும் பேசி கேலி செய்கிருர்கள். உம்... தங்கள் வீட்டில் உள்ள தாய், தங்கைகளையும் இப்படி ஒருவன் கேலி செய்தால் எப்படி இருக்கும் என்பதை சற்றும் சிந்தித்துப்பாராமல்தானே கேலி செய்கிருர்கள்? இதே கதிதான் நாலு படித்த பெண்களின் மத்தியில் அகப்பட்ட ஒரு ஆணின் கதியும். இதற்குத்தான்

பெண்கள் அதிகம் படிக்கக்கூடாது என்கிறேன். காலமோ வரவர கலியுகம் ஆகுது? இந்த சமூகம் எப்படி உருப்படுமோ தெரியலே...... கமலா! நீ படித்தது போதும்! நீ என்னம்மா சொல்லுகிருய்.

கமலா:- நான் சொல்வதைக் கேட்கக்கூடியவர்களா தாங்கள்!

முத்தையா:- கமலா! உன் பேச்சைக்கேட்காமல் என்ன? கமலா! பெண்கள் படித்து இருக்கவேண்டியதுதான். ஏதோ! வந்த காகிதத்தைப் பார்க்க, அதற்குப் பதில் போட, ஒரு வண்ணுன் கணக்கு எழுத - வந்ததை சரிபார்க்க; கொஞ்சம் உலக நடப்புத் தெரிந்துகொள்ளப் படித்தால் போதும். பெண்களுக்கு அதிகப்படிப்பு கூடாது. இப்போ ரொம்ப படித்துவிட்டு ஒவ்வொருத்தி அலைகிற அலேச்சலேப்பாரு. நம்ம தமிழ்நாட்டுக் கலாசாரமே போச்சு. எதற்கெடுத்தாலும் மேல்நாட்டு நாகரீகம், மேல்நாட்டு நாகரீகம் என்று சொல்லுருங்க. அது அவங்க நாட்டிற்கு சரி. அடுப்பு ஊதவேண்டியவர்கள்தானே நம்மநாட்டில், அதற்கு இவ்வளவு படிப்பு எதற்கு? என்ன நான் சொல்லுகிறது (குமார், சுந்தர் வருதல்).

ராஜேந்திரம்:- சொல்ல என்ன இருக்கு எல்லாம் அவரவர் தலேயெழுத்துப்படி நடக்கும்.

குமார்:- மாமா! நீங்க ஒன்னு, தலேயாவது யெழுத்தாவது, அதெல்லாம் அவரவர்களுடைய முயற்சி, அறிவு, சூழ்நிலே இதற்குத்தக்கபடிதான் அவர்களுடைய வாழ்க்கை அமையும்.

ராஜேந்திரம்:- நீ சொல்வது சரிதான் அதற்காக சுந்திரம்போல் பிரச்சாரம் செய்து பிழைக்க முடியுமா என்ன? சொல்லு குமார்!

முத்தையா:- அப்பா சுந்தர்! உன் அப்பா படுகிற கஷ்டத்தைப் பார்த்தாவது ஏதாவது ஒரு வேலேக்கு வழி

தேடாமல் இப்படி ஊர் ஊராய்ப் பிரசங்கம் செய்யப்போனல் எப்படி? அதில் என்ன வரும்படி கிடைக்கும்? தொண்டை வலியைத்தவிர வேறு என்ன? அது ஒரு வாழ்க்கையாப்பா!

சுந்தர்:- நான் என்ன செய்வது? உலகம் அப்படி இருக்கிறதே. சமுதாயம் சிலரைத் திருடர் ஆக்குகிறது; சிலரைப் பித்தலாட்டக்காரர் ஆக்குகிறது; சிலரை அரசியல் சூதாடிகள் ஆக்குகிறது. இதில் நான் கடைசி ரகம். அதற்கு நான் என்ன செய்வது.

முத்தையா:- ராஜேந்திரம்! உன் மகன் பேசுகிறதைப் பார்த்தாயா! மேடையிலே பேசுகிறமாதிரியின்ஞ பேசுகிருன்? கையில் என்னப்பா புத்தகம். (சுந்தர் கொடுக்க வாங்கிப்பார்த்து) "அறமும் அரசியலும்" அப்படியா...நல்ல அரசியல்......! (திருப்பி) "தனியே நின்று ஒத்த இருவர்" என்ன...எங்கே? இதைப் படியுங்கள்......

ராஜேந்திரம்:- (வாங்கிப்பார்த்துப் படித்தல்) தனியே நின்று ஒத்த இருவர் செய்யும் பழங்காலத்துப் போர் போன்றது. அந்தக்காலத்து ஊழ்வினை விளைவு - கூடிநின்று பலர் செய்யும் போர்போன்றது. இந்தக்காலத்து ஊழ்வினை விளைவு - தனியே விதைத்து தனியே அறுப்பது அந்தக் காலத்து முறை. கூட்டாகக் கூடி விதைத்துக் கூடி அறுப்பது இந்தக்காலத்து முறை. இன்று ஒவ்வொருவர் எண்ணத்திற்கும் செயலுக்கும் அவருடைய சூழல்-சுற்றுப்புற உலகம் - காரணமாக இருக்கிறது. ஒவ்வொருவர் செய்யும் நன்மை தீமையிலும் உலகம் முழுமைக்கும் பங்கு இருக்கின்றது. எங்கோ விளையும் மண்ணெண்ணெய் உலகம் முழுமைக்கும் பயன்படுவதுபோல, எங்கோ நடக்கும் போர் உலகம் முழுமைக்கும் அல்லல் விளைவிப்பதுபோல எவரோ எந்த நாட்டிலோ செய்யும் நன்மை தீமைகள் எல்லோர்க்கும் எல்லா நாட்டுக்கும் உரியவை ஆகின்றன. இட்லர் செய்த செயல்களும் உலகத்தைத் தாக்கின; காந்தியடிகள் ஆற்றிய தொண்டுகளும் உலகத்தைத் தாக்கின. இவர்கள் செல்

வாக்கு மிகுந்தவர்கள். ஆகையால் ஆற்றல் மிக்க தீமை நன்மைகளை விளைவித்தார்கள். செல்வாக்குக் குறைந்த வேறு வேறு நாட்டு உழவர்களும் தொழிலாளர்களும் தத்தம்மால் இயன்றதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் செயல்களும் ஓரளவு நன்மை தீமைகளை உலகத்திற்குப் பொதுவாக விளைவித்துக்கொண்டிருக்கின்றன.

இன்னும் தனிமனிதனாய் ஒருவன் செய்யும் செயல் அவனுக்கே தனியாக விளைந்து நன்மை அல்லது தீமை செய்கிறது.

“நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்” என்பது இன்றைக்கும் உண்மையாகவே உள்ளது. அதுபோலவே, குடும்பத்தைச் சார்ந்து குடும்பத்திற்காக ஒருவன் செய்யும் வினை அந்தக் குடும்பத்தைத் தாக்குகின்றது. இனத்தைச் சார்ந்து இனத்திற்காகச் செய்யும் நல்வினை தீவினையும் இவ்வாறே அந்த இனத்தைத் தாக்குகின்றன.

கமலா:- உண்மை மாமா! உண்மை! உம்...உலகம் என்று சீர்படுமோ? யார்கண்டார்கள்...

ராஜேந்திரம்:- உன்னைப்போல் உள்ள பெண்கள் பொன்னையும் வைரத்தையும் மதிக்கும் வரையில் உலகம் சீர்ப்படாது, அம்மா! சீர்படாது...அம்மா கமலா! போன மாசம் நம்மூர் திருவிழாவுக்குப் போயிருந்தீர்களே! அம்மன் கழுத்தில் உள்ள வைர நகையைப் பார்த்துத்தானே உங்களுக்குப் பக்தி அதிகம் ஆச்சு! வீட்டுக்கு வந்த பிறகும் அந்த வைரம் சொலித்த சொலிப்பையும் அதன் விலைமதிப்பையும் பற்றித்தானே பேசிக்கொண்டிருந்தீர்கள்? சாமி எல்லாம் ஆனவர், எங்கும் உள்ளவர், என்றும் உள்ளவர் என்ற உண்மைகளை நீங்கள் நினைக்கவும் இல்லை பேசவும் இல்லையே. போகட்டும், கன்யாகுமரிக்குப் போனபோது அந்த மூக்குத்தியின் பெருமையையும் மதிப்பையும்பற்றித்தானே பேசினீர்கள்? உங்கள் பக்தி எல்லாம் பட்டு, தங்கம், வைரம்,

பணம் இவைகளைப்பற்றித்தானே இருக்கிறது. நான்இப்படிச் சொல்கிறேனே என்று கோபித்துக்கொள்ளாதீர்கள்.

முத்தையா:- இல்லிங்க... உலகம் கெட்டுப்போச்சு!

ராஜேந்திரம்:- முத்தையா! உலகம் கெட்டுப்போச்சு! உலகம் கெட்டுப்போச்சு என்று யார்மேலேயோ பழியைப் போடப் பார்க்கிறீர்களே! உலகத்தைக் கெடுத்ததில் உங்களுக்குப் பங்கு இல்லையா? ஓடும் செம்பொன்னும் ஒன்ருகக் கருதிய பெரியவர்கள் போய் வழிபட்ட கோயில்களில் நீங்கள் பொன்னையும் வைரத்தையும் வழிபட்டு வருகிறீர்கள் கோயிலிலேயே இப்படி இருந்தால், வீட்டிலே, தெருவிலே, கலியாணப் பந்தலிலே, விருந்திலே எப்படி இருக்கும் பாருங்கள். பட்டு இல்லாமல், வைரத்தோடு இல்லாமல் முப்பது ரூபாய்த் தோடும், எட்டு ரூபாய்ப் பருத்திப் புடவையும் உடுத்துக்கொண்டு ஓர் அம்மா உங்கள் வீட்டுக்கு வந்தால் நீங்கள் மதிக்கிறீர்களா? அந்த அம்மா படித்தவளாக இருக்கலாம், பண்பு உடையவளாக இருக்கலாம், இருந்தாலும் நீங்கள் மதிப்பதில்லை. ஒழுக்கம் கெட்டவளாய், கணவனுக்கு அமையாதவளாய், படிப்பும் பண்பும் இல்லாதவளாய் இருந்தபோதிலும், வைரத்தோடும் வைர அட்டிகையும் வைர மோதிரமும் பட்டும் அணிந்து ஆடம்பரமாக ஒருத்தி வந்தால், எழுந்து நின்று மரியாதை செய்து வணக்கமாகப் பேசுகிறீர்களே! அந்தத் தீவினைதான் இப்படி விடிகிறது?

கமலா:- போதும் மாமா! போதும்...நாங்கள் என்றைக்கும் அப்படி மதிப்பதில்லை, தெரியுமா?

ராஜேந்திரம்:- நீ மதிக்காமல் இருக்கலாம். ஆனால் பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர் எதை மதிக்கிருர்கள்? கேட்டுப்பார், ஒரு சிலர் நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் தலைமுறைகளாகப் பெண்கள் பொன்னையும் பட்டையும் வைரத்தையும் மதித்த மதிப்பு விடாது. தீவினை விடாது? நான் ஒரு எறும்பைக்கொன்ருல்,

மறு பிறப்பில் அந்த எறும்பு மனிதனுகி, நான் எறும்பாகி, அது என்னைக் கொல்லும் என்று சொல்கிற சிறுபிள்ளைப் பேச்சு அல்ல இது. நான் சொல்வது பெரிய ஊழ்; உண்மை யான ஊழ்; அனுபவம் சொன்ன ஊழ்; உண்மையான ஊழ் தனி மனிதரை மட்டும் தாக்குவது அல்ல. இனம் இனமாக, நாடு நாடாகத் தாக்கவல்லது அது. பழங்காலத்தில் உயர்ந்த வகுப்பார் சிலர் தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்திருக்கலாம். அந்தத் தீவினை இப்போது விளையும். இப்போது உயர்ந்த வகுப்பு முழுவதை யும் தாக்கும். இப்போது நல்லவர்கள் பிறக்கலாம்; அவர்-களையும் அது விடாது. பழங்காலத்தில் மதத்தின் பெயரால் சிலர் சில தீமைகள் செய்திருக்கலாம். இப்போது உள்ள அந்த மதத்தார் அதற்குக் காரணம் அல்ல. என்றாலும், மதத்தின் பெயரால் பூசலும் குழப்பமும் ஏற்படும்போது இப்போது உள்ளவர்கள் நலிந்து துன்பப்படவில்லையா? அதுபோலதான் இதுவும். பெண் இனம் தீவினை செய்தது? செய்து வருகிறது. ஊழ் வலியது; இப்போது வினை விளையும் காலம். இளம் பெண்கள் படிப்பு பண்பு எல்லாம் இருந்தும் வாழ்க்கைக்கு வழி இல்லாமல் வாடுகிறார்கள். பொன்னும் வைரமும் காணுத மிக்க ஏழைக் குடும்பங்களில் உள்ள பெண்கள் அவற்றைப்பற்றி எண்ணியதில்லை; மதித்ததும் இல்லை. இன்று அந்த ஏழைக் குடும்பப் பெண்கள் திருமணத்-திற்கு ஏங்குவதும் இல்லை. அவர்களுக்குக் கஞ்சிப்போராட்-டம் எவ்வளவு இருந்த போதிலும் கலியாணப் போராட்டம் இல்லை. அந்தத் தீவினையில் அவர்களுக்குப் பங்கு இல்லை. அன்று தவருக எண்ணி மதித்ததும் இல்லை; இன்று தீவினை-யால் ஏங்கிக் கலங்குவதும் இல்லை.

முத்தையா:- எல்லாப் பெண்களும் கஸ்தூரியாய் ஆகிவிட முடியுமா?

ராஜேந்திரம்: ஆண்களே இன்னும் திருந்தவில்லையே! காந்தியடிகளை யாரும் நம்பவில்லை. பட்டு உடுத்தால்தான்

பூசைசெய்ய உரிமை உண்டு என்றும், அப்போதுதான் சாமியை நெருங்க உரிமை உண்டு என்றும் ஆண்கள் எண்ணுகிறார்களே இந்த நாட்டில் தெய்வங்கள் அணிந்த நகைகளைப்பற்றித்தானே புலவர்களும், அடுக்கடுக்காக வருணித்திருக்கிறார்கள்? காந்தியடிகள் சொன்னார்......தம் கருத்தின்படி சீதை ஒரு நகையும் அணியவில்லை என்று சொன்னார். அவர் சொன்னதை யார் எண்ணிப்பார்க்கிறார்கள்? மேன்மேலும் தீவினையே செய்கிறார்கள். துன்பமே படுகிறார்கள்...உம்...

குமார்:- ஏது? மாமா! மேடையிலே சுந்தர் பேசுவது போல் பேசிவிட்டீர்களே... கமலா! வேர்த்து வெடவெடத்துப் போய்விட்டாள். பாவம்! அவளுக்கு ஒன்றுமே விளங்காது பயந்துவிட்டாள்......

ராஜேந்திரம்:- நான் சொன்னதில் தவறு ஒன்றும் இல்லையே!

முத்தையா:- தவறு இல்லை. ஊமைப்பற்றி ஓர் அடி அடித்துவிட்டாயே... ஆனால் யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

ராஜேந்திரம்:- அதைப்பற்றிக் கவலை இல்லை. என் மனதில் பட்டதைச் சொன்னேன்.

குமார்:- மாமா! உங்ககிட்டே நாங்கள் அறிய வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கு என்று நினைக்கிறேன். ஆனால் எங்களுக்குத்தான் நேரம் கிடைக்கவில்லை.

சுந்தர்:- எங்க அப்பா! பேச உட்கார்ந்தால் பொழுது போவதே தெரியாது...

ராஜேந்திரம்:- நேரம் ஆகிறது... சுந்தர் வா போகலாம்... நாங்கள் வருகிறோம். (சுந்தர் தலையை அசைத்துக் காட்டல். கமலா, குமாரிடம் அவர்களும் பதிலுக்கு தலையை அசைத்து வழி அனுப்புதல்) (இருவரும் போகிறார்கள்)

(திரை)

## காட்சி 6.

இடம்:- நளினு வீடு. காலம்:-

தேவை:- நளினு, விநாயக முதலியாா, செல்லம், பையன்.

(பாட்டு)

(விநாயக முதலியார் ஈசிச்சேரில் சாய்ந்தவாறு பேப்பர் படித்தல், நளினு பக்கத்தில் நின்றுகொண்டு அதைப் பார்த்தல், அச்சமயம் ஒரு பையன் ஒரு கலியாணக் காகிதத்தைக்கொண்டு வந்து கொடுத்தல்)

பையன்:- தாத்தா...தாத்தா...இந்தாருங்கள்.

விநாயகம்:- (வாங்கிக்கொண்டே) யாருடா...தம்பி... வா. யாருக்கடா கலியாணம்.

பையன்:- எங்க அக்காளுக்கு.

நளினு:- உங்க அக்கா லீலாவுக்காடா?

பையன்:- ஆமாக்கா!...தாத்தா! உங்களை எங்கப்பாக் கூட்டிவரச் சொன்னு? ஏதோ! உங்களிடம் கேட்க வேண்டுமாம்.

விநாயகம்: அப்படியா! சரி! வருகிறேன்.

பையன்;- அப்போ நான் வருகிறேன் தாத்தா.

விநாயகம்:- (தலை அசைத்து) உம் போய்வா... (பிரித்துப் பார்த்துவிட்டு, நளினுவைப்பார்த்து) நளினு! உன்னேடு படித்த லீலாவுக்கெல்லாம் கலியாணம் உம்...உனக்கும் காலா காலத்திலே கலியாணத்தை நடத்தவேண்டியதுதான்... ஆனல் கையில் பணத்தைத்தான் காணேம்.

நளினு:- போங்கப்பா! எனக்கு இப்போ......

விநாயகம்:- நளினு! உனக்கும் வயது வந்துவிட்டது உன்னைவிட வயதில் சிறியவங்களுக்கெல்லாம் கலியாணம் ஆகிறது. உனக்கு என்னம்மா! வெட்க்கம் எத்தனை நாட்களுக்குத்தான் இந்த கன்னி வாழ்வு, நீயாவது சந்தோஷமாக

வாழவேண்டும். அதைப்பார்த்தாவது இந்த பாவியின் மனம் சந்தோஷப்படட்டும், என் பேரன் பேத்திகளைப் பார்த்தாவது என் மனம் சந்தோஷப்படட்டும். அம்மா! நீயே சொல்! காலாகாலத்தில் நடக்கவேண்டியதெல்லாம் நடந்து தான் ஆகணுமம்மா! இப்படி சும்மா இருந்தால் எப்படி? நளினு! இந்த மாதமே கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யட்டுமாம்மா! நளினு என்ன? சொல்லம்மா! சும்மா சொல்லம்மா! இதில் என்ன வெட்கம், படித்த பெண்களே இப்படியிருந்தால்...சொல்லம்மா! உம் (நளினு பேசாதிருத்தலைப்பார்த்து) சும்மா! சொல்லம்மா! நீ படித்தது போதும்! சந்தோஷமாய் வாழவேண்டும் நீ. அதற்கு நீ யாரையம்மா தேர்ந்து எடுத்து இருக்கிறுய். வெட்கம் என்னம்மா வெட்கம்... மற்றத்தகப்பனுரைப்போல் அல்ல நான். தன் மகளுடைய மணத்தைத் தாங்களே பேசி முடித்துவிடுகிறுர்களே பலர்; அந்த ரகத்தைச் சேர்ந்தவனல்ல நான். வாழவேண்டியவள் நீ. உன் வாழ்க்கைக்கு ஏற்றவரைத் தேர்ந்தெடுக்கவேண்டியது உன் பொறுப்பு. அதை நடத்தி முடிக்கவேண்டியது என் கடமை. ஆனுலும் இடம், பொருள், பையனுடைய குணம் இவைகளை இளம் பெண்கள் அவ்வளவாகத் தெரிந்து இருக்கமுடியாது. அம்மா நளினு! நீ யாரையம்மா விரும்புகிறுய்! மனம்விட்டுச் சொல்லம்மா! வெட்கப்படவேண்டிய விஷயம் இதுவல்ல! காரியத்திலே கண்ணுய் இருக்கவேண்டிய கட்டமம்மா இது. சொல்லம்மா!

நளினு:- அப்பா! நான் என்னத்தைச் சொல்ல!

விநாயகம்:- என்னத்தைச் சொல்லவா! அம்மா நளினு! நான் நினைத்து இருக்கிறதைச் சொல்லுகிறேன். குமார்! சுந்தர் இவர்களில் யாருக்காவது ஒருவருக்குக் கொடுக்கலாமென்று நினைக்கிறேன். ஓகோ! அதுகூட முடியாதே! சுந்தர்! கமலாவையல்லவா கட்டுவான்... அவனுடைய மாமா மகள் ஆயிற்றே கமலா! அம்மா! உனக்குக் குமாரைப் பிடித்து இருக்கிறதா? இல்லை வேறு யாரையாவது நீ விரும்பியிருந்தால் சொல்லம்மா! யோசித்து வைத்திரு நான் ராஜ

கோபால் பிள்ளையைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். (போதல்) (அசந்தார்போல் ஈசிச்சேரில் சாய்ந்து இருத்தல்; யோசனையில் இருப்பவள்போல். செல்லம் வருதல்).

செல்லம்:- அம்மா! நளினு...உம் நான் கூப்பிடுவதுகூட கேட்கவில்லை. நானும் இரண்டு நாட்களாகப் பார்க்கிறேன். உன் போக்கே சரியில்லை.

நளினு:- ஆம் செல்லம்... என் மனநிலை சரியில்லை.

செல்லம்:- (சிரித்து) உம். மனநிலை சரியில்லையா? எப்படி இருக்கும்?

நளினு:- கேலியா செய்கிறுய்!

செல்லம்:- அம்மா நளினு! கேலிசெய்யவில்லை. உண்மையைத்தான் சொல்லுகிறேன். அங்கே அந்த அய்யாவுக்கு மனது சரியில்லை. இங்கே இந்த அம்மாவிற்கு மனது சரியில்லை.

நளினு:- எந்த ஐய்யாவுக்கு......

செல்லம் - மூன்று நாளைக்கு முன்னே, இங்கே உன் அப்பாகூட வந்தாரே அவருக்கு......குமாருக்கு.....

நளினு:- என்னவாம்!

செல்லம்:- என்னிடம் கேட்டால் இந்தக் கேள்வியை அந்த அண்ணுவிடம் அல்லவா கேட்கவேண்டும். அதை விட்டுவிட்டு என்னிடம் கேட்டால். நளினு! உங்கள் இருவருக்கும் மனநிலை சரியாக நான் ஒன்று சொல்லுகிறேன். அதாவது உன் அப்பாகிட்டே சொல்லி ஓங்க இரண்டு பேருக்கும் மேளம் தட்டச் சொன்னுல் போதும்.

நளினு:- சரிசரி...பேசாமல் இரு! அது எனக்குத் தெரியும்...செல்லம்! உம்...ஒன்றுமில்லை......

செல்லம்:- சொல்லு நளினு?...என்னிடம்கூட மறைக்க வேண்டுமா?

நளினு:- செல்லம்! அப்பாவே என்னிடம் சொல்லியிருக்கிறுர்.

செல்லம்:- எதைப்பற்றி......

நளினு:- என்...வெட்கமா இருக்கு...என்...

செல்லம்:- கலியாணத்தைப்பற்றியா?

நளினு:- உம்...செல்லம்! எங்க அப்பாவே என்னிடம் கேட்டார்! எங்க அப்பா. உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் ஆள் இல்லே செல்லம். இது உனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்.

செல்லம்:- நளினு! இதை நீ சொல்லித்தானுத் தெரியனும். "அகத்தின் அழகு முகத்திலே தெரியும்" என்பதுபோல, உங்க அப்பா முகத்தைப் பார்த்தாலே கபட மறியா உள்ளம் உடையவர் என்பது தெரியுதே......நளினு! உங்க அப்பா என்ன சொன்னுர்...அதை முதலிலே சொல்லு நளினு?

நளினு:- செல்லம்! யாரிடமும் சொல்லமாட்டாயே!

செல்லம்:- நளினு! இதுவரை என்னிடம் பழகுகிருயே என்னைப்பற்றி அறிந்தது இவ்வளவுதானு? சொல்லமாட்டேன் என்ருல் நிச்சயம் சொல்லமாட்டேன். சும்மா சொல்லு நளினு!

நளினு:- உன்மேல் எனக்கு நம்பிக்கை தாண்டி... செல்லம்! என் திருமணத்தைப்பற்றித்தான்...... செல்லம்! எங்க அப்பா என்னிடம், ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லி என்னுடைய அபிப்பிராயத்தையும் கேட்டார். ஆனுல் நான்தான் ஒன்றுக்கும் பேசாமல் இருந்தேன்.

செல்லம்:- போ நளினு! இப்பேர்ப்பட்ட அப்பா ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைத்தால் நம்ம நாடு இந்நிலேயில் நிச்சயம் இருக்கவே இருக்காது. இந்தசமூகத்தின் பெருமையே தனி அலாதியாகத்தான் இருக்கும். நளினு! உனக்கு இப்படிக் கேட்க வாய்புக் கிடைத்திருந்தும் நீ யேன் சும்மா இருந்தாய்...இன்றைய சமூகத்திலே ஒவ்வொரு வீட்டிலும்

உள்ள பெண்களிடம் அவரவர்கள் அப்பா இப்படிக்கேட்டால் சும்மாவா இருந்துவிடுவார்கள்?

நளினு:- சும்மா இல்லாமல், உடனே அவரைப் பிடித்திருக்கிறது என்று சொல்லிவிடுவார்களாக்கும்... போடி போ! இப்படி கேட்கவே மாட்டார்கள்... ஏதோ என் அப்பா...

செல்லம்:- நளினு, உங்க அப்பாவைப்போல் நான் இதுவரை யாரையும் பார்த்ததே இல்லை. பிள்ளைகளின் மனநிலை இன்ன இன்ன வயதில் இப்படி இப்படி இருக்குமென்பதை நன்கு உணர்ந்தே உன்னிடம் துணிந்து கேட்டிருக்கிறார்... ஆமா! உன் மனதில் என்ன தான் நினைத்து இருக்கிறாய்? என்னிடமாவது சொல்லக்கூடாதாடி...... அப்பாவிடம் சொல்லத்தான் வெட்கமா இருக்கும்...என்னிடமாவது சொல்லு... பிறகு நான் உன் அப்பாவிடம் சொல்லி உன் மன ஆசையை பூர்த்தி செய்கிறேன்...சொல்லுடி......

நளினு:- செல்லம்! உன்னிடம் ஏன் ஒழிக்கவேண்டும். உண்மையாகவே நான் அதற்காகத்தான் ஒரு முடிவு தேடிக் கொண்டு இருக்கிறேனடி.

செல்லம்:- எதற்கடி முடிவு. அண்ணுவுக்கும் உன்னைப் போல் மன நிலை சரியில்லை... என்பதிலிருந்தே தெரியவில்லையா?

நளினு:- இருவரில் ஒருவரைத் தேர்ந்து எடுக்க வேண்டும். இவரில் எவரடி நல்லவர் என்று தோன்றுகிறது உனக்கு.

செல்லம்:- இருவரா?...ஓகோ! என் அண்ணுவையும் சேர்த்துக்கொண்டாயா! முதலில் எவர் அழகு என்று தீர்மானித்து விட்டாயா? பின்பு அல்லவா நல்லதையும் குணத்தையும் பார்க்கவேண்டும்.

நளினு:- செல்லம்! இருவரில் எவரடி அழகு சொல்லேன்?

செல்லம்:- ஏண்டியம்மா! கேலியா செய்கிருய்? மணந்து கொள்ளப்போவது நீயா அல்லது நானு...உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது என்று கேட்டால்......

நளினு:- செல்லம்! அழகில் யாரைச் சொல்வது என்பதே முடியாத காரியம், இருந்தாலும் எனக்கு......

செல்லம்:- எப்படிச் சொல்வது என்ற யோசனை! அப்படித்தானே? என்னிடம் கேட்டால்......இதைத்தான் சொல்லுவேன்...நம்முடைய கண்களில் எது நல்லது என்று சொல்ல முடியுமா? அதுபோல் அவர்கள் இருவரும் இரட்டைக் குழந்தைகள் மாதிரி இருக்கும்பொழுது என்ருல் எப்படிச் சொல்ல முடியும்?... மேலும் எனக்குப் பிடித்தால் போதுமா? உனக்கல்லவா பிடிக்கவேண்டும். உனக்குப் பிடித்தவரைச் சொல்லடி...

நளினு:- உம்...வந்து...எனக்கு உம்கும் மாட்டேன்...

செல்லம்:- நளினு! ஒன்று... நீ என் அண்ணு சுந்தரை விரும்பினுலும் அது நடக்காத காரியம்... அவனை நீ மறந்து விட வேண்டியதுதான். அவனை கமலா உயிருக்குயிராய் நேசிக்கிருள். என் அண்ணுவும்...அவளைவிட்டுப் பிரியவே மாட்டான்... சிறு வயதிலிருந்தே அப்படி... ஆதலால் நீ குமாரை......

நளினு:- செல்லம்! அவரை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆனுல் அவருக்குத்தான் என்னைப் பிடிக்கிறதோ என்னமோ?

செல்லம்:- என்ன இப்படிப் பேசுகிருய்! அவர் மனநிலை சரியில்லை என்பதிலிருந்தே தெரியவில்லையா?... நீ இருக்கிற அழகிற்கு உன்னை யாருக்குத்தான் பிடிக்காது, உன்னைப் பிடிக்காமலா, அன்று வந்தவர், தினமும் ஏதாவது சாக்கு வைத்துக்கொண்டு வருகிருர்...... (குமார் வருதலைப் பார்த்து) வா...அண்ணு...வா...! உனக்கு நூறு வயது... உன்னைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்.

குமார்:- அப்படியா! ஆமா! என்னைப்பற்றி உங்களுக்கு என்ன பேச்சு!

செல்லம்:- என்ன பேச்சா! நளினா என்னிடம் உன் அண்ணன்மார்கள் இரண்டுபேருமே எப்படி... இங்கு தினமும் வந்தால் என்ன......

குமார்:- (சிரித்துக்கொண்டே) எதற்கு?

செல்லம்:- போ அண்ணா! உனக்கு எதற்கெடுத்தாலும் சிரிப்புத்தான். இங்கு சாயங்காலவேளையில் நேரம் போக ஒரு சீட்டுக் கீட்டு விளையாட; கேரம் விளையாட வரக்கூடாதா என்ன.

குமார்:- ஓகோ! அப்படியா? அதற்கென்ன. நாளைமுதல் தினமும் வந்தால் போகிறது...சரி; மாமாவை எங்கே?

செல்லம்:- ஏது அண்ணா! பெண்ணைக் கொடுக்கிறதுக்குள்ளேயே மாமா என்று சொல்ல ஆரம்பித்து விட்டாயா! அதுவும் சரிதான்...அண்ணா! நானும் வந்ததிலிருந்து உங்க மாமாவைக் காணோம்...எங்கே நளினா உங்க அப்பா?

நளினா:- (தலை குனிந்தவாறே) அடுத்த தெருவிற்குப் போயிருக்கிறார்... இப்போ வந்துவிடுவார்...

குமார்:- சரி; பிறகு வந்து பார்த்துக்கொள்ளுகிறேன். நான் வரட்டுமா?

நளினா:- இல்லை......இப்போ வந்துவிடுவார்......சற்று இருங்கள்...இதோ வருகிறேன். (உள் சென்று காப்பி கொண்டு வருதல்)

செல்லம்:- அண்ணா! தாங்கள் இங்கு தினமும் வந்தால் எங்களுக்கும் பொழுதுபோக்காக இருக்கும்...என்ன நான் சொல்வது...

நளினா:- (காப்பி கிளாசை நீட்டி) முதலில் இதைச் சாப்பிடுங்கள்...

குமார்:- (வாங்கி குடித்துவிட்டு) தேங்ஸ் நளினா! நான் வருகிறேன். உன் அப்பா வந்ததும், நான் வந்ததாகச் சொல்... ஒரு அவசரம்...வருகிறேன். (போதல்) தலையை அசைத்து வழி அனுப்பிவிட்டு அவன் போன திக்கையே பார்த்து அசைவற்று நிற்கிறாள் நளினா! இதைப் பார்த்து செல்லம் பேசு. கிறாள்)

செல்லம்:- ஏது நளினா! நான் நிற்பதையும் மறந்து அங்கேயே பார்க்கிறாயே! அண்ணா போன பிறகும் அந்த திசையில் என்ன இருக்கிறது.

நளினா:- போடிபோ! (கை நீட்டி தோள்பட்டையில் அடித்தல்)

செல்லம்:- உம்...அடிக்காவா செய்கிறாய்... அடிப்படி, அடிப்ப... உம்... இன்னும் என்னென்ன செய்வாயோ? யாரு கண்டா... நளினா! எனக்கும் நேரம் ஆகிறது...போகிறேன்.

நளினா:- அடி உரைத்துவிட்டதோடி! என் அடியெல்லாம் தாங்க முடியுமா? உன்னால் அரசு அடி என்றால் தாங்க முடியும்.

செல்லம்:- போடிபோ! உன் வேலையைப் போய்ப் பார்.

நளினா:- வேலையைத்தான் பார்க்கப் போகிறேன். வா போகலாம்.

(திரை)

---

(இரண்டு மாதங்களுக்குப்பின்)

## காட்சி 7.

இடம்:- பேச்சுமேடை. காலம்:- மாலை 6–30.

தேவை:- மணி, குமார், அரசு, சுந்தர், கமலா, நளினா.

(தலைவர் ஸ்தானத்தில் மணி இருத்தல்)

மணி: பெரு மக்களே! இப்பொழுது சுந்தர் அவர்கள் பேசுவார்கள்,

சுந்தர்: (எழுந்து நின்று) நண்பர்களே! நான் சொல்வது பலருக்கு வேம்பாக கைக்கலாம். ஆனால் எப்பொழுதும் உண்மையைப் பச்சையாகச் சொல்வதே என் வழக்கமாகி விட்டது. இப்போதும் அப்படித்தான் என்னால் பேச முடிகிறது. நான் பேசாமலே இருக்கவேண்டும் என்று எண்ணி வந்தேன், உண்மையாகவே. ஆனால் என்னால் இருக்கமுடியவில்லை. பேசும்படியான நெருக்கடியும் ஏற்பட்டுவிட்டது. நீங்கள் சொல்வன எல்லாம் மிக நல்ல வழிகள். மக்கள் இனம் முன்னேற வேண்டுமானால் கட்டாயம் வேண்டிய வழிகள் இவை. மக்கள் கூடி வாழ்ந்தால்தான் வாழமுடியும் என்ற அடிப்படையோடு உங்கள் திட்டம் உருவாகி இருக்கிறது. ஆனால், நான் குறுக்கே சொல்ல விரும்புவதெல்லாம் ஒன்றுதான். அறிவு படைத்த மனிதன் பறவைகளைவிட விலங்குகளைவிடக் கீழ்த்தன்மையாக வாழக் காரணம் என்ன? மனிதன் அவைகளைவிடத் தன்னலம் மிகுந்தவனாக, பொறாமை மிகுந்தவனாக, அழிவு வேலை மிகுந்தவனாக, இருப்பதற்குக் காரணம் என்ன என்று எண்ணிப்பாருங்கள். மக்களின் வாழ்க்கைக்கு ஆகாத ஒன்று நஞ்சுபோல் புகுந்து வாழ்க்கையின் நல்ல போக்கைக் கெடுத்துவிட்டிருக்கிறது.

உடலில் உள்ள இரத்த ஓட்டமே கெட்டுவிட்டிருக்கிறது. இரத்தம் தூய்மை இழந்துவிட்டிருக்கிறது. இதை மறந்துவிட்டு, மேல் தோலுக்கு மருந்து பூசுவதால் பயன் உண்டா? மருந்து பூசலாம், வேண்டாம் என்று சொல்லவில்லை. அடியோடு பயன் இல்லை என்றும் சொல்லவில்லை. ஆனால் இரத்தம் கெட்டிருப்பதை மறந்துவிடக் கூடாது. வெறும் பேச்சுப் பேசிக் காலம் கழிக்க விரும்பவில்லை. ஒரே ஒரு உண்மை. சுருங்கச் சொல்லிவிடுகிறேன். மனித இனம் பண்பாட்டை நம்பி வாழவேண்டியது; ஆனால் இன்று பணத்தையே நம்பி வாழும் கதி நேர்ந்திருக்கிறது. உழைப்-

புக்கு அடையாளமாக, அளவுக் கருவியாகத் தோன்றியது பணம். இன்று அதுவே உழைப்பை விழுங்கும் பேயாக வளர்ந்துவிட்டது. பேய் சாதாரண வளர்ச்சியில் நிற்கவில்லை. அரசு செய்யும் அளவுக்கு வளர்ந்து விட்டது... "பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று பாரதியார் கூறியது உங்களுக்கு நினைவிருக்கும். ஆகவே, நம் திட்டம் இன்றைய சமூகநிலையில் தக்கபடி பயன் தராது என்பது நினைவில் இருக்கவேண்டும். இதுதான் நான் சொல்ல விரும்பியது. முடிக்கிறேன். வணக்கம்.

குமார்:- (எழுந்து) நானும் இதுபற்றி ஒன்று கூற விரும்புகிறேன். தோழர் சுந்திரம் கூறியதை நான் ஒப்புக் கொள்ளவில்லை.

சுந்தர்:- சுந்திரம் சொல்வது இன்றைக்கு விளங்காது...

குமார்:- பொறுத்துப் பாருங்கள்... அனுபவம்தான் உண்மையை விளக்கிவிடும். "பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று பாரதியார் எதற்கோ? எங்கோ! பாடியதை மிஸ்டர் சுந்தர்! இங்கே எடுத்துக்காட்டுவது பொருந்தவில்லை. தவிர, நம் நாட்டில் அரசியல் வாணிகம் முதலியன எவ்வளவு சீர்கேடு அடைந்திருந்தாலும், லஞ்சமும் ஊழலும் கள்ளமும் கரவும் எவ்வளவு பெருகி இருந்தாலும், இந்த நாட்டு மக்களிடையே சமய உணர்ச்சி இன்னும் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு நாம் எவ்வளவோ முன்னேற முடியும். காந்தியடிகள் இந்த உண்மையை அறிந்தவர். அதனால்தான் வெற்றி பெற்றார். ஆகவே, நம் பிரச்சாரங்களில் நாம் கடவுள் நெறியை எடுத்துரைக்க வேண்டும். மக்களுக்கு உதவியாக வாழ்வதே கடவுளுக்கு உகந்த தொண்டு என்று உணர்த்த வேண்டும். "வாழும் உயிர்களே நடமாடும் கோயில்கள்" என்று திருமூலர் உணர்த்திய உண்மையை எடுத்துரைக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் கட்டாயம் வெற்றி பெறுவோம். ஆகவே சோர்வு அடைய வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

அரசு:- மிஸ்டர் சுந்தர்! உம்மிடம் சில கேள்விகள் கேட்க ஆசைப்படுகிறேன்.

சுந்தர்:- தாராளமாய்க் கேட்கலாம்.

அரசு;- இன்றைய நிலை எப்படி இருக்கிறது?

சுந்தர்:- புல்லர்களின் போலிப் பிரசங்கத்தால் அறியாமை என்னும் அமாவாசை இருட்டிலே, சிக்கி இன்று ஆயிரக்கணக்கான சாதிகளாய், பல நூறு மதத்தினராய், பகுத்தறிவற்ற கருத்தினராய், பாமரராய், பஞ்சைகளாய், படிப்பு வாசனையற்ற தற்குறிகளாய்த்தான் இருக்கிறது இன்றைய நிலை.

அரசு:- மதம் என்பது எப்படி இருக்கவேண்டும்?

சுந்தர்:- மதம்...ஒரு தனி மனிதனுக்காக அல்ல—மதம். மக்களுக்காக மதம். தெரிகிறதா? மதத்தால் மக்கள் அழிந்து விடக்கூடாது. அறிவுபெற வேண்டும். பயன்பெற வேண்டும். ஆராய்ச்சிக் கூடமாக வேலை செய்ய வேண்டும். பயம் தெளிய வேண்டும். மரணமே வருவதானாலும், மக்களுக்குத் தைரியம் வேண்டும். நீதிக்காகப் போரிட வேண்டும். நேர்மையை நிலைநாட்ட வேண்டும். சபைக்கு முன் ஒன்று, சாதாரண மக்கள் முன் ஒன்று என்று புறம் பேசித் திரிபவரை ஒழிக்க வேண்டும். பயந்தவரை மிஞ்சி, பகைவரைக் கெஞ்சி வாழும் நிலையை அடியோடு மாற்ற வேண்டும். மக்களுக்கு நல்லொழுக்கத்தை வளர்க்க வேண்டும். தன் தவற்றைத் தானே உணர்ந்து, மனம் திருந்தி நடக்க சக்தியை அவர்களுக்கு அளிக்கவேண்டும். இந்த இடம், அந்த இடம், சொந்த இடம் என்ற பேதமில்லாமல், எந்த இடத்திலும், அதாவது "At all times and at all places, I am ready to work for the people". அதாவது "எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நான் மக்களுக்காக வேலை செய்யத் தயாராக இருக்கிறேன்" என்ற பரந்த மனப்பான்மை வளர அவர்களை பண்படுத்த வேண்டும் மதம். அப்படியில்லாமல், என்னமோ தாயீன்றாள், தந்தை படிக்க வைத்-

தார் என்று இருக்கக்கூடாது. மதம் அவனை மனிதனுக்க வேண்டும். ம த ம் ஒ ரு வியாபாரப் பொருளல்ல, தனி உடமையும் அல்ல! அல்ல!

அரசு:- சுந்தர்! கடவுளை அறியலாம் என்கின்றனர் சிலர். சிலர் முடியாது என்கின்றனர். எப்படி?

சுந்தர்:- சாதாரண அறிவைக்கொண்டு கடவுளை அறியலாம் என்பது முடியாத காரியம. அறிவைவிட நம்பிக்கையே மேலானது. உண்மை என்பதே என் கடவுள்.

அரசு:- குலம், கோத்திரம், சாதி, ம த ம் என்பன என்ன?

சுந்தர்:- மனித சமுதாயத்தின் ஒற்றுமையைக்குலைத்து, வேற்றுமையைப் பெருக்கி அன்பு வாழ்வை, அவதிக்குள்ளாக்கும் விஷ வித்துக்கள்.

அரசு:- விதி என்பது...

சுந்தர்:- ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்பட்டவர்கள், கொதித்தெழாதிருக்கச் செய்த சதி...

அரசு:- ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன என்ன?

சுந்தர்:- தலைமுறை தலைமுறையாக பின்பற்றி வரும் பழக்க வழக்கங்கள்.

அரசு:- முற்பிறப்பு என்பது?

சுந்தர்:- யூகம்!

அரசு:- நரகம், சொர்க்கம் என்பன.

சுந்தர்:- கற்பனை.

அரசு:- பக்தி என்பது?

சுந்தர்:- மனப் பிராந்தி.

அரசு:- தேர் திருவிழா?

சுந்தர்:- ஆடம்பரப் பொழுது போக்கு.

அரசு:- ஆண்டவன்?

சுந்தர்:- நம் அறிவுக்கு அப்பால் பட்டவன்.

அரசு:- உம்...கோயில்?

சுந்தர்:- சிற்பியின் கைத்திறம்.

அரசு:- கோயில் என்றால் கடவுள் இருக்கும் இடம் தானே?

சுந்தர்:- கோயில் என்றால் கடவுள் இருக்கும் இடம் என்று யார் சொன்னது. கடவுள் கோயிலில் மட்டும்தானா இருப்பார்? அவர் எங்கும் இருப்பார்?

அரசு:- உண்மைதான் சுந்தர்! இறந்த காலம் ஒரு தேய்ந்த ஓவியம், நிகழ்காலம் ஒரு எரியும் விளக்கு, வருங் காலம் ஒரு நீழ்கடல்.

சுந்தர்:- உண்மைதான். இறந்த காலத்தை நினைவின் துணை கொண்டு எண்ணிப்பார்க்கலாம். நிகழ்காலத்தை நேரிடையாகக் கண்டு தெளியலாம். ஆனால் வருங்காலத்தை ஒரு வறையறை என முடிவால் தீர்மானித்துவிட முடியாது. அதாவது நீழ்கடல்,நீரின் நிறத்தை நிர்ணயிக்கவோ, அல்லது அக்கடலின் அடிமட்டத்தில் அழுந்திக் கிடக்கும் எண்ணத் தொலையாத இயற்கைப் பொருளையோ, திட்டவட்டமாகக் கூற முடியாமல் இருக்கிறதே அதுபோல, மனிதனின் மனதையும் நாம் காணமுடியாது. எல்லாவற்றிற்கும் அவ-ரவர் மனமே காரணம்.

அரசு:- மனம் எப்படிப்பட்டது சுந்தர்!

அரசு:- மனம்...உம்...அது ஒரு பெரிய உலகம். அந்த மன உலகில் அந்தியின் அழகும் உண்டு, காலையின் கவர்ச்சி-யும் உண்டு, நள்ளிரவின் குளிர் மயக்கமும் உண்டு; நன்பக-லின் கொதிப்பும் உண்டு. அந்த மன உலகில் கருமுகில்களும் உண்டு, வெண்முகில்களும் உண்டு, உயர்ந்த மலைகளும் உண்டு, ஆழ்ந்த கடல்களும் உண்டு. அந்த மன உலகில் வெயில் பரப்பும் கதிரவனும் உண்டு, வெண்ணிலாப் பொழி-யும் திங்களும் உண்டு, வெப்பமும் உண்டு, தட்பமும் உண்டு, மழையும் உண்டு, பனியும் உண்டு, வளமும் உண்டு, வறட்-சியும் உண்டு. அந்த மன உலகை அல்லவா காணவேண்டும்;

ஆராய வேண்டும், பாடவேண்டும், பண்படுத்த வேண்டும். (அரசு எழுந்து கேள்வி கேட்கும் பாவனை, இடையே தலைவர் மணி எழுந்து)

மணி:- போதும், அரசு! இன்று இத்துடன் நிறுத்திக் கொள்வோம். சுந்திரத்தின் திறமைபற்றி நமக்கு தெரியாதா என்ன? இத்துடன் கூட்டம் முடிவடைகிறது. (மற்றவர்கள் போகிறார்கள்)

சுந்தர்:- (குமார் பக்கம் வந்து) குமார்! உன் அப்பாவிற்கு எப்படியப்பா இருக்கிறது காய்ச்சல்... ஆமா! நீ வீட்டிற்கே வருவதில்லையாமே? கமலா சொன்னாளே! உம்... எனக்கு அதிகம் வேலையிருக்கிறது. பிறகு பேசிக்கொள்ளலாம்... நீ என்னைக் கட்டாயம் பார்... (சுந்தர் போதல்)

குமார்:- (தனியே) கண்டதும் காதல் என்று சொல்லுவார்களே! அது என் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்டது. ஒரு பெண் என்னை அடிக்கடி பார்ப்பதிலிருந்து நான் என்ன நினைப்பது...நளினா? ஆஹா! என்ன அழகான பெயர்!... நளினா! ஆஹா என்ன அருமையான பெயர்...பெயருக்கேற்ற அழகு. (சற்று அமைதி) மாந்தளிர் மேனியாள்...தந்தத்தைக் கடைந்தெடுத்த வடிவம், மயிலைப் பிழிந்தெடுத்த சாயல், கயல்மீனைப்போல துள்ளித்திரியும் கருவிழிகள், துவளும் கொடிபோலும் சரீரம், மோகனப் புன்னகை பொழியும் மெல்லிய உதடுகள். இன்று மலர்ந்த தாமரை மலரைப்போலல்லவா இருக்கிறாள்...நளினா!...உன்னை வர்ணிக்கவே வார்த்தைகள் இல்லை... என் தங்கை கமலா! சுந்தரை எவ்வளவு அன்புடன் விரும்புகிறாளோ? அதைப்போல் நளினாவும் என்னை விரும்புகிறாள் என்பது உன் கடைக்கண் பார்வையிலேயே தெரிகிறது. இல்லையென்றால் அன்று எனக்கு காப்பி கொண்டு வருவாளா! இவளை அடைவதில் என்ன தவறு. தினமும் சந்தித்தால் முடியாமல் போகுமா! மலர் மொட்டும், வண்டும் தினமும் சந்தித்தால், மலர் மொட்டு எத்தனை நாட்களுக்கு மொட்டாக இருக்கமுடியும். என்றாவது ஒரு நாள் மலர் மொட்டு மலராக மலர்ந்துதானே ஆகும்... அப்போது

இந்த வண்டு சும்மாவா விட்டுவிடும்... நளினு!...உனக்-காகவே என் உயிர் உடலில் இருக்கிறது. என் வாழ்வில் உன்னையே வேண்டுகிறேன் நளினு!... ஆகா...

(திரை)

## காட்சி 8.

இடம்:- பார்க்கு. காலம்:- மாலை 5 மணி.

தேவை:- மணி, அரசு, சுந்தர், குமார்.

(அரசு புத்தகத்தைப் படித்துக்கொண்டு உலாவுதல்)

மணி:- (வந்து நின்று) அரசு! அரசு! ஏது? இன்று இவ்வளவு நேரத்திலேயே பார்க்குக்கு வந்து விட்டாய்! அடே! ரூமில் புதிதாக ஒரு பெட்டியிருக்கிறதே? யாராவது ஊரிலிருந்து வந்தார்களா?

அரசு:- இல்லை'ப்பா, நம்ம குமார் இருக்கிறுனே, அவனுடையது.

மணி:- ஆமாம். அவனுக்கு என்ன இங்கே பெட்டி பேழை! அருமையான வீடு. நல்ல மாடி வீடு இருக்கிறது... பெரிய பணக்காரன் என்று சொல்லுகிறுர்கள்... உள்ளூரா-னுக்கு இங்கே என்ன வேலை? என்னப்பா அது? குடும்பத்தில் ஏதாவது சண்டையா? ஒரே பிள்ளை ஆயிற்றே!

அரசு:- ஒரே பிள்ளையோ எத்தனை பிள்ளையோ, மனம் வேறுபட்டால் சண்டை தோன்ற எவ்வளவு நேரமாகும்?

மணி:- அப்படியா செய்தி? அந்த அளவுக்கு வந்து விட்டதா கதை? (சட்டைப் பையைத் தேடிக்கொண்டு சிகிரெட்டை எடுத்து) அடே நெருப்புப்பெட்டி கொடு.

அரசு:- அடே நம் ரூமில்...

மணி:- புகைபிடிக்கக்கூடாது என்று ஒரு அட்டையில் எழுதி மாட்டியிருக்கிறதே! அது உன்வேலையா? வெட்கமாக

இல்லையா உனக்கு? நீ ஒரு கல்லூரி மாணவனாக நடந்து கொள்ளவில்லையே?

அரசு:- நான் இல்லேப்பா.

மணி.- அப்படியானால் வேறு யார்? ஓகோ, குமார் வேலையா? வந்ததும் வராததற்குமுன் தொடங்கிவிட்டானா காந்தி பைத்தியத்தை! காந்தி கூட இப்படி யாரையும் வற்புறுத்த மாட்டாரே!

அரசு:- அவனும் வற்புறுத்தவில்லை. என்னைக் கேட்டான் சரி செய்யலாம் என்றேன். உடனே எழுதி மாட்டி விட்டான்.

மணி:- நீதான் கோழை! ஏன்? முடியாது என்று சொல்வதுதானே?

அரசு:- அவன் யோசனை எனக்குச் சரி என்று பட்டது.

மணி:- போதும் நிறுத்தப்பா! நீயும் ஒரு காந்தி பைத்தியம்... அரசு! இதெல்லாம் பைத்தியக்காரத்தனம். Practical life-வாழ்க்கை வேறு. Ethics-நீதி வேறு இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்க்கக்கூடாது. நாம் பரீட்சைக்குப் படிக்கிறோம். அதனால் அறிவு வளர்கிறதா? அறிவு வளர்வதற்கு வேறே வழி தேடிக்கொள்ள வேண்டும். அதுபோல்தான் இதுவும். குமார் இருக்கிறானே அவன் பைத்தியக்காரன். சென்ற ஆண்டில் தமிழ்மன்றத்தில் அவன் பேசினானே. அப்போதே நான் சொல்ல வில்லையா? அவன் உருப்படியாக மாட்டான் என்பது அவன் பேச்சாலேயே தெரிந்துவிட்டது. திருக்குறளும் சத்தியசோதனையும் படித்துவிட்டால், அப்படியே நடக்க வேண்டுமா, என்ன? படிக்கிறவர்கள் எல்லோரும் நடக்கிறார்களா? நமக்கு என்னப்பா தொல்லை! Eat, live and Be Merry, உண்க, வாழ்க, களிக்க, இதுதான் நம்ம வேதாந்தம்.

அரசு:- Eat, Smoke and Be Merry, உண்க, புகைக்க, களிக்க என்று சொல்லப்பா!

மணி:- அப்படிச் சொல்லப்பா! நம்ம கட்சியில் எப்படியோ சேர்ந்துவிட்டாயே! அதுவே போதும். ஆமா! குமார் இனிமேல் இங்கேயே இருக்கப்போகிறனு எப்படி? அது ஒரு தொல்லையப்பா? நாமே வீட்டில் தொல்லை பொருக்காமல் இங்கு வந்திருக்கிறோம். இவன் வேறே இங்கு வந்து... தொல்லை கொடுக்க வந்துவிட்டானு?

அரசு:- இல்லை, இல்லை! வார்டனைக் கேட்டுக்கொண்டு வேறே அறைக்கு ஏற்பாடு செய்துகொள்ளப் போகிறனும்.

மணி:- தொலையட்டும்! Intelligent fool, Educated idiot. ஆமாம் அப்பனுக்கும் மகனுக்கும் என்ன சண்டையாம்.

அரசு:- கேட்டால் சரியாகச் சொல்லமாட்டேன் என்கிறன். ஆனல் வீட்டைவிட்டு வந்து ஒரு மாதம் ஆகிறதாம். இன்றுதான் இங்கு வந்து இருக்கிறன். அவனுடைய தெருவிலிருந்து வருகிறனே, மிஸ்டர் கந்தசாமி... அவனிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

மணி:- என்ன? என்ன?

அரசு:- அப்பா பெரிய கள்ள மார்க்கெட் பேர்வழி... அது இவனுக்குப் பிடிக்கவில்லை. அதிலேயிருந்து வளர்ந்திருக்கிறது.

மணி:- அட பைத்தியமே. சர்வம் கள்ளமார்க்கெட் மய்யம் ஜகத். இவனுக்கு ஏன் இந்த மூளைக்கோளாறு? இவனு செய்கிறன்? எவனே அப்பன் சம்பாதிக்கிறன். அந்தக் கிழம் சம்பாதித்துச் சேர்த்து வைத்துவிட்டுச் சாகட்டுமே. இவன் ஜம்மென்று பிற்காலத்தில் அனுபவிக்கலாமே.

அரசு:- அதுதானே குமாரால் முடியாது. அவனுக்கு மனச்சாட்சி Conscience என்று ஒன்று இருக்கிறதாமே...

மணி:- அடடா! அது என்ன பண்ணுகிறதாம்! குடைகிறதா!

அரசு:- வேதனை பண்ணுகிறதாம்.

மணி:- வேதனை பண்ணினால் என்னிடம் உபதேசம் கேட்டுக்கொள்ளட்டும். ஒரு மணிக்கு ஒரு பாக்கெட் சிகரெட்—அப்புறம் வந்தால் கேளு!

அரசு:- புத்தருக்கு அசுவமேதயாகம் உபதேசம் செய்தாலும் செய்யலாம், காந்திக்கு அணுகுண்டு உபதேசம் செய்தாலும் செய்யலாம், குமாருக்கு இந்த உபதேசம் முடியாதப்பா!

மணி:- கேட்காவிட்டால் போகட்டும். (குமார் வருதல்)

அரசு:- (பார்த்து) உஸ் உஸ்......அதோ அவன்...... (குமார் இவர்களைக் கவனிக்காது வந்து ஒரு பெஞ்சில் அமர்ந்து படித்தல். உத்தம வாழ்க்கை என்ற புத்தகத்தை, இருவரும் பக்கம் வருதல்)

மணி:- குமார்! எப்பொழுது பார்த்தாலும் படிப்புத்தானா? என்னப்பா புத்தகம்...

குமார்:- வாருங்கள்... இப்படி உட்காருங்கள்... 'உத்தம வாழ்க்கை' என்ற புத்தகம்... படிக்கிறேன்... கேளுங்கள்... கவனமாகக் கேளுங்கள் — (பார்த்துப் படித்தல்) "ஒருவனுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு ஒரு சாமானை வாங்கிக்கொண்டபோதிலும் அந்தச் சாமானுக்கு நம்மிடம் உபயோகம் இல்லாவிட்டால் அதையும் திருடு என்றே கூற வேண்டும். ஆகவே தேவைக்கு மிகுதியாகப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாகாது. உணவுப்பொருள்களை பொறுத்த வரையில் இத்தகைய திருடுகள் நடப்பது உண்டு. எனக்குத் தேவையில்லாத பழத்தை நான் பெற்றுக்கொள்வதும், என் தேவைக்குமேல் அதிகமாகப் பெற்றுக்கொள்வதும் 'திருடு' தான்... இந்தச் சட்டத்திலிருந்து தவறுகிறவர் பலர் உலகத்தில் இருப்பதால்தான் உலகத்தில் தாங்க முடியாத வறுமை நிறைந்திருக்கிறது. (பக்கத்தைத் திருப்பி) திருடாதிருப்பதும் சேமிக்காதிருப்பதும் ஒன்று என்று நான் கருதுகின்றேன். தேவையில்லாதபோது ஒருவன் ஒரு பொருளைத்

தன்னிடம் சேமித்து வைத்திருந்தால் அதையும் திருட்டுச் சொத்தாகவே எண்ணவேண்டியிருக்கிறது. பணக்காரர்களிடம் ஏராளமான பொருள்கள் தேவைக்கு மிஞ்சிக் கிடக்கின்றன. அவைகள் வீணுகின்றன. அதே சமயத்தில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்வுக்குவேண்டிய பொருள்கள் இல்லாமல் பட்டினி கிடந்து சாகின்றுர்கள். (புத்தகத்தை மூடி) ஆமாம்! உண்மைதான்! திருடு, திருடுதான்... என்ன அழகான உண்மை...

அரசு:- உலகத்தின் வறுமைக்குக் காரணம் இந்தத் திருடுதான். ஏழைகளின் பட்டினிக்கும் காரணம் இந்தத் திருடுதான். போருக்கும் பஞ்சத்துக்கும் காரணம் இந்தத் திருடுதான். இதுவரையில் உலகத்தில் எந்த ஞானியும் சொல்லாத பெரிய உண்மை இது. காந்தியடிகள் ஒருவர்தான் இதைத் தெளிவாக்கிய உத்தமர்!

குமார்:- (பெருமூச்சு) சொல்லிவிட்டேனே! என்ன சொல்லியும் அப்பா கேட்கவில்லையே...உம்...

மணி:- நீ சொன்னதில் தவறு என்ன? உண்மையைத் தானே சொன்ருய்? உன் தந்தையார் காந்தி பக்தரா? காந்தி படத்தை வீட்டில் மாட்டிவிட்டால் போதுமா? சங்கங்களுக்குக் காந்தி படத்தைப் பெரிய அளவில் வாங்கிக்கொடுத்தால் போதுமா? காந்தி பிறந்த நாளில் நூறு ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்து விட்டால் போதுமா? உன் வீட்டில்–நீ வளரும் வீட்டில்–காந்தி வெறுத்த திருடு நடக்கிறதே, இதை நீ கண்ணுல் பார்த்துக்கொண்டு காதால் கேட்டுக் கொண்டு, வயை மூடிக்கொண்டு இருக்கவேண்டுமா? (குமார் பெருமூச்சு! தலையை அசைக்கிருன், கையை நொடிக்கிருன்) நீ கோழை... வாயை மூடிக்கொண்டிருந்தால் — படிப்பது காந்தி புத்தகம். பார்ப்பது காந்தி படம். நம்புவது காந்தி நெறி. பேசுவது காந்தி புகழ். தின்பது திருட்டுச் சோறு – சீ! சீ! இந்தத் துரோக வாழ்க்கை; உள்ளொன்று வைத்துப் புறம் பொன்ருக வாழும் வாழ்க்கை, ஏமாற்றும் வாழ்க்கை,

ஏழைகளை உறிஞ்சும் வாழ்க்கை — இந்தச் சீர்கெட்ட வாழ்க்கையில் உனக்கும் பங்கு இருக்கவேண்டுமா? குமார்!

குமார்:- (பரபரப்பாக உலாவுவதை விட்டு) போதும் மணி போதும்... நிறுத்து... நான் அப்படிச் செய்தால் உலகம் என்னைப் பழிக்கும். என்னை நன்றி கெட்டவன் என்று சமூகம் பழிக்கும், பெற்ற தகப்பனுக்குத் துரோகம் செய்தவன் என்று இந்த சமுதாயம் பழிக்கும். நான் துரோகியாக வேண்டுமா?

அரசு:- துரோகியாக வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், தகப்பனைவிட, குடும்பத்தைவிட அறம் பெரியது அல்லவா? பெற்ற தாயின் பசியைக் கண்டாலும் காணலாம். சான்றோர்களின் அறநெறியை விட்டு அப்பால் செல்லக் கூடாது என்று திருவள்ளுவர் வற்புறுத்தவில்லையா? காந்தியடிகள் காட்டிய அறம் பெரியது அல்லவா? தந்தைக்கு அடங்கி வாழ்வதா பெரியது? தங்கையின் கண்ணீரா பெரியது? திருவள்ளுவரை வணங்கும் நீ, திருக்குறளைப் படிக்கும் நீ; அறத்தையே கடவுளாகக்கொண்ட தமிழரின் மரபில் பிறந்த நீ தங்கையின் கண்ணீருக்காகத் தயங்குவதா? தந்தையின் ஆத்திரத்துக்காக அஞ்சுவதா? திருவள்ளுவரைப் படித்த தமிழனாகிய நீ காந்தியைப் போற்றவிட்டால், காந்தி நெறியில் நடக்காவிட்டால், உலகத்தில் வேறு எந்த நாட்டார் போற்றுவார்கள்? வேறு எந்த நாட்டார் நடப்பார் கள்? குமார்...நீயே சொல்லு குமார்!

மணி:- குமார்! உன் படிப்புக்கு அவர் பணம் தரமாட்டார் என்று பார்க்கிறாயா? போகட்டும் பணம் தராமலே போகட்டும்... இன்னும் பாக்கியுள்ள ஆறு மாதத்திற்கு நான் பணம் கட்டுகிறேன்.. குமார்! என்ன ஒன்றும்...

குமார்:- என்ன ஆனாலும் ஆகட்டும்! இனி அந்த வீட்டு வழியே எட்டிப் பார்க்கக்கூடாது. கள்ளமார்க்கெட்டும் காந்தி நெறியும் ஒன்றாக வாழவே முடியாது... என்னை யார் என்ன சொல்லிப் பழித்தாலும் பழிக்கட்டும். பூசை அறை, அதற்குள்ளே கள்ள வியாபாரம் — பிளாக்

மார்க்கெட் கணக்கு — கடவுளுக்குத் துரோகம், அறத்துக்குத் துரோகம், மனித சமூகத்துக்குத் துரோகம், தமிழினத்துக்கே துரோகம். (சுந்தர் வருதல்) எனக்கு நானே துரோகம் செய்துகொள்ள வேண்டுமா? சீ! சீ! இனி அந்த வீட்டு வாசற்படியில் கால்வைக்கவே மாட்டடேன், என் படிப்புக்கு, என் வாழ்வுக்கு — இன்றோடு முற்றுப்புள்ளி வைத்தாலும் சரியே! என்ன வந்தாலும் வரட்டும்.

சுந்தர்:- அப்படியானால்—? இனி வீட்டிற்கே......

குமார்:- இந்தப் பேச்சே வேண்டாம்... இதில் நீ தலையிட வேண்டியதில்லை. சொல்லுகிறேன் கேள் சுந்தர்... நம்முடைய நட்பு வேறு, இது வேறு... என்னுடைய பெற்றோர் தவறு செய்வார்களானால், அதைத் திருத்த எனக்கு உரிமை இல்லையா?

சுந்தர்:- உரிமை இல்லையென்று யார் சொன்னார்கள்! உரிமையைத் தவருகப் பயன்படுத்த வேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

குமார்:- தவறு என்ன, தவறு! குற்றத்தை எடுத்துக் காட்டுவது ஒரு குற்றமா?

சுந்தர்:- குற்றத்தை எடுத்துக் காட்டுவதற்கும் குறை கூறுவதற்கும் ஒரு பட்டதாரி வேண்டியதில்லை. ஒரு காந்தியன்பர் வேண்டியதில்லை. தெருவில் போகின்றவர் அந்த வேலையைச் செய்ய முடியும். குற்றத்தை எடுத்துக்காட்டினால் போதுமா? திருத்துவதற்கு முயற்சியும் செய்யவேண்டும். என்னவோ நேராக வீட்டை விட்டு மூட்டையைச் சுருட்டிக்கொண்டு விடுதிக்கு வந்துவிட்டாயே... இதுதான் காந்தி நெறியா? மனைவி மக்களை வீட்டுவிட்டுக் கமண்டலத்தை எடுத்துக்கொண்டு பழங்காலத்தில் காட்டுக்கு ஓடிப் போய் விடுவார்களாம் சில ஆசாமிகள். அந்தக் கதையாக இருக்கிறதே இது! (குமார்! பெருமூச்சு, அமைதி)

மணி:- அப்படி ஓடிப்போக வேண்டும் என்று உங்கள் காந்தி சொல்லவில்லையா?

குமார்:- (கோபம்) உங்கள் காந்தி! உங்கள் காந்தி!...

சுந்தர்:- (குமாரின் தோளின்மேல் கை வைத்து) இதற்கெல்லாம் கோபித்துக்கொள்ளாதே'ப்பா. சும்மா சொல்லுகிறேன். நம் காந்திதான், போகட்டும். பகைவரையும் திருத்த வேண்டும் என்பதுதான் காந்தி நெறி, திருவள்ளுவர் நெறி. உன்னைப்போல், பெற்றோரையும் பகைவராக்கிக் கொள்வது காந்தி நெறி ஆகுமா?

குமார்:- உனக்கு ஒன்றும் தெரியாது... சும்மா இரு'ப்பா. மனச் சான்று என்பது இல்லாத ஆள் நீ... உனக்குத் தெரியாது.

சுந்தர்:- (சிரிப்பு) உம்...சரி...அப்படியே இருக்கட்டும். ஒத்துக்கொள்கிறேன். நான் மனச் சான்று இல்லாதவன்-தான் இருக்கட்டும். ஆனால் ஒன்று கேட்கிறேன். நீ யாரை ஆதரிக்கிறாய்? மனச்சான்று அடியோடு இல்லாதவர்களையா? அரைகுறையாகவாவது மனச்சான்று கொஞ்சம் உடையவர்களையா? என்னப்பா! சொல்... (குமார் பேசாதிருத்தல்) சரி! என்னோடு பேசவும் உனக்கு விருப்பம் இல்லை என்று தெரிகிறது. நான் புறப்படுகிறேன். ஆனால் போவதற்கு முன் ஒன்று மட்டும் சொல்லிவிட்டுப் போகிறேன். நான் போன பிறகு எண்ணிப்பார். என் பேச்சு, பைத்தியக்காரத்தனமாக இருந்தால் விட்டுவிடு. ஆனாலும் சொல்லிவிட்டுப் போகிறேன். நீ! உன் தகப்பனார் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடப்பதை அடிக்கடி போய்ப் பார்க்கிறாய். தங்கை கமலாவின் கண்ணீரைப் பார்த்து நீயும் கண்ணீர் விடுகிறாய். அதெல்லாம் சரி. ஆனால் வெந்த புண்ணில் வேல் எறிவது போல், துன்பப்படுகிறவர்களை மேலும் மேலும் துன்பப் படுத்துகிறாய் என்பதை மறக்காதே. நீ வீட்டை விட்டு

விடுதிக்கு வந்தது தப்பு. ஆனால் பலர் பலவாறு உன் குடும்பத்தாரைப்பற்றிப் பேசுகிறார்கள். உன் தந்தை, தங்கை அதை நினைத்து நினைத்து மனம் வருந்துகிறார்கள். நீ செய்ய வேண்டிய சீர்திருத்தத்தைக் குடும்பத்தில் உள்ளிருந்தே செய்திருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. தகப்பனாருக்கும் இந்த அரைப்பைத்தியம் பிடித்திருக்காது. குமார்! நான் கேட்கிறேன். மனச்சான்று உனக்கு மட்டும் கடவுள் கொடுத்த சரக்கு என்று நினைக்கிறாயா? உன் தகப்பனாருக்கும் அது இருக்கிறது. மனச்சான்று இருப்பதால்தான் அவர் இந்த நிலைக்கு ஆளானார். நோய்வாய்ப் பட்டார்; அறிவு கலங்கி வருந்துகிறார், வாய் பிதற்றுகிறார்... மனச்சான்று இல்லாத ஆளாக இருந்தால், அவர் என்ன செய்திருப்பார் தெரியுமா? கவலை இல்லாமல் கேளிக்கைகளுக்குப் போய் எந்த வகையிலாவது உன் கவலையை மறந்துவிட்டிருப்பார்... திருக்குறள் முதலான உயர்ந்த நூல்களைப் படித்துவிட்டு எத்தனையோ பேர் அருமையாகக் கள்ள வியாபாரம் செய்து காலத்தைக் கழிக்கவில்லையா? மேலும் மேலும் இன்ப வாழ்க்கைக்கு வழி தேடிக்கொண்டு பிறருடைய துன்பத்தை எள்ளளவும் எண்ணிப் பார்க்காமல் பொழுது போக்க வில்லையா? அவர்களைப்போல் உன் தகப்பனார் வாழமுடிய வில்லை என்பதை எண்ணிப்பாரப்பா...காரணத்தையும் எண்ணிப்பாரப்பா...எண்ணிப்பார்...மற்றவர்களுக்கு மனச்சான்று அடியோடு மரத்துவிட்டது... உன் தகப்பனாருக்கு அது இன்னும் மரத்துப்போகாமல் இருக்கிறது. அதன் பயன்தான் இப்போது அவர் படும் துன்பம்! நீ என்ன செய்கிறாய் தெரியுமா? அவரை முழுப் பைத்தியமாக்கி அல்லல்பட வைக்கப்போகிறாய்...அல்லது அவருடைய மனச்சான்றும் மழுங்கிப்போகும்படி செய்கிறாய். சரி! இனிமேல் உன்னிடம் பேச்சு இல்லை. நான் வருகிறேன். (சுந்தர் விரைந்து போக...உடனே குமார் அவனைக் கூப்பிடல்)

குமார்:- சுந்தர்! சுந்தர்........ (அமைதி)

அரசு:- குமார்! சுந்தர் சொல்லியது யாவும் உண்மை தான்... இந்த உலகத்தில் உள்ள முழு அயோக்கியர்களைப் பற்றி நீ கவலைப்படவே இல்லை. அவர்களைக் குற்றம் கூற ஆண்மை இல்லாமல் கோழையாக அடங்கியிருக்கிறாய். ஆனால் சிறிதளவு குற்றம் செய்கிறவர்களை — அடியோடு வெறுக்கிறாய்; பழிக்கிறாய்; துன்பத்துக்கு ஆளாக்குகிறாய்; நச்சுப் பாம்பைப் பார்த்துக் கல் எறிகிறாய். கோழைத் தன்மை, வடிகட்டின கோழைத்தன்மை! உன் தகப்பனார் மற்றவர்களைவிட எவ்வளவோ நல்லவர்! அவருடைய வாழ்க்கை கெடுகிறது; கெடுவதற்கு நீதான் காரணம். திருத்த முடியாதபோது கெடுக்க முயல்வது குற்றம். கல்லைச் சிற்பமாக்க வேண்டியது உன் கடமை. ஆனால் சிற்பமாக்கத் தெரியாத உனக்குக் கல்லை உடைத்தெறிய உரிமை உண்டா? சொல் குமார்! சொல்...

மணி:- உன்னைப் பெற்று வளர்த்து, உனக்காகவே பொருளும் சேர்த்து, தியாகம் செய்துள்ள தந்தையார் அரைப்பைத்தியமாய் அலறுகிறார். நீ காந்தி நெறியில் வாழும் தொண்டன் என்று உன்னை நீயே ஏமாற்றிக்கொள்கிறாய். ஆக்கவேலையா செய்கிறாய்? அழிவு, அழிவு வேலை. குடும்பத்தை அழிக்கும் வேலை செய்துவிட்டு இங்கே இந்தப் பூங்காவில் திரிகிறாய்...ஓடப்பா! ஓடு...

குமார்:- உணர்ந்தேன்...உணர்ந்து விட்டேன். ஆனால்—! மனச்சான்று! நல்ல மனச்சான்று! அன்று அது என்னை வீட்டை விட்டு விடுதிக்குப் போகும்படி துரத்தியது. இன்று மறுபடியும் வீட்டிற்கே போகும்படி தூண்டுகிறது...! என் செயல் எனக்கே வெட்கமாக இருக்கிறது...

அரசு:- வெட்கப்பட என்ன இருக்கிறது... தன் வீட்டிற்குப் போவதற்கா வெட்கம்... போப்பா! போ... குமார்...! போய் வா.

(திரை)

## காட்சி 9.

இடம்:- நளினா வீடு. காலம்:- மாலை நேரம்.

தேவை:- குமார், நளினா, நாயகம், பையன்.

(பாட்டு)

(நளினா புத்தகம் படித்துக்கொண்டு இருத்தல். குமார் வந்து)

குமார்:- நளினா!...நளினா...

நளினா:- குமார்! நீங்கள் கூப்பிடுவதே ஒரு கலையாகத்-தான் இருக்கிறது.

குமார்:- இதில் சந்தேகம் என்ன நளினா? நீ கலைக் கோயிலில் வீற்றிருக்கும் கலா சிற்பம்.

நளினா:- அப்படியா! குமார்!

குமார்:- ஆம் நளினா, நீயே உன் நடையைப்பார்... ஆஹா அதிலேதான் எவ்வளவு நளினம். நளினா...நீ நளின-மான தமிழ் நடையில் நடக்கிறாய்... ஏன்? கொடியிலே கூத்தாடும் மலரைப் போலல்லவா நடக்கிறாய்? அது மட்டுமா! சிரிப்பில் சிங்காரி! சிரித்தால் முத்து சிந்தும், உன் கன்னங்களிலே.

நளினா:- என்ன? குமார்!...

குமார்:- அதிலே பார் என் முகம் தெரிவதை...

நளினா:- ஏது! காதல் உலகமே அதிரும்படி செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே?......அப்பா! (நாயகம் முதலியார் வருதல்)

குமார்:- ஆங்......இங்கே......

நாயகம்:- ஏன் பயப்படுகிறீர்கள்... நான் இல்லாத போது நளினாவோடு என்ன பேச்சு என்று கடிந்துகொள்வார் என்றுதானே. அவ்வாறு கடிந்துகொள்ளும் மடையன் அல்ல...காதல் கீதம் கேட்டு அறியாத கழுதை அல்ல...

இளம் வயதில் ஏற்படுவது இயற்கை. நானும் உன்னைப் போல் சிறு குழந்தையில்...இப்படித்தான் இருந்தேன்... இதில் என்ன தவறு. (பையன் வருதல்) இருவருடைய மனமும் ஒன்றுபட்ட வாழ்வே நல்வாழ்வாகும்... (பையனை ப்பார்த்து) என்னப்பா தம்பி...

பையன்:- தாத்தா! எங்க அப்பா உங்களை கையோட அழைத்து வரும்படி சொன்னார்! ஏதோ! ஒரு முக்கிய காரியமாகப் பேசவேண்டுமாம்.

நாயகம்:- குமார்! சென்று வருகிறேன். உங்களுக்கே என் மகளைக் கொடுக்கப்போகிறேன். அப்படியிருக்க நீங்கள் பேசுவதைப் பார்த்து கோபம் கொள்வேனா...பேசிக்கொண்டு இருங்கள் வந்துவிடுகிறேன்... வா...போகலாம் தம்பி... (இருவரும் போனபிறகு)

குமார்:- நளினா! எங்கே உன்னப்பா......

நளினா:- அவ்வாறு பயப்பட வேண்டாம். என் அப்பாவின் போக்கே ஒரு தனி அலாதி. அப்படியில்லையென்றால் என்னிடம்கூட இவரைப் பிடித்து இருக்கிறதா? என்று கேட்பாரா?

குமார் - இவரையா! அப்படியா! மகளிடமே இப்படி...

நளினா:- கேட்டால் என்ன?

குமார்:- ஒன்றுமில்லை, இப்படிப்பட்ட மனப்பான்மை எல்லாத் தகப்பனாருக்கும் வந்துவிட்டால்... ஆஹா... நம் நாடு...

நளினா:- அதற்கு உங்களைப்போல் எல்லோரும் இருக்க வேண்டுமே! எல்லோரும் அப்படி இருக்கமுடியுமா?

குமார்:- இல்லாமல் என்ன? மனம்தான் காரணம்.

நளினா:- எல்லார் மனதையும் கண்டவர்போல் பேசாதீர்கள்.

குமார்:- நளினு! நீ சொல்வதும் சரிதான்... "கடல் ஆழம் கண்டாலும் நெஞ்சாழம் காணமுடியாது" என்பார்-கள்

நளினு:- ஏது! பாட்டிகள் மாதிரி பழமொழிகள் உதாரணங்கள் தருகிறீர்கள்... சுயமாக வேறு ஒன்றும் சொல்லத் தெரியாதோ?

குமார்:- ஏது! வர வர வாய் ரொம்பத் துடுக்காகப் பேசுகிறதே.

நளினு:- வாய் மட்டும் என்ன? கைகூட (என்று சொல்லிக்கொண்டு குமாரின் முகத்தை தன் வலக்கையால் தட்டி விட்டு ஓடுகிருள். அவள் கையைப் பிடிக்க முயல்வதுபோல் பின் ஓடுகிருன் குமார்)

(திரை)

## காட்சி 10.

இடம்:- கமலா வீடு. காலம்:- பகல் நேரம்.

தேவை:- சுந்தர், கமலா, குமார், ராஜேந்திரம் பிள்ளை,

(பாட்டு)

(கமலா வருத்தத்தோடு இருத்தல், சுந்தர் வந்து அவளைத் தேற்றுதல். கமலா தன் தகப்பனுரின் படத்தைப் பார்த்துக் கொண்டு இருத்தல்)

சுந்தர்:- கமலா! இப்படிப் படத்தைக் கண் கொட்டாது பார்த்துக்கொண்டே இருந்தால் என்ன பயன்... கமலா! கழிந்த இரவு மீளுவதில்லை... மாய்ந்த பேரலை மீண்டும் எழுவதில்லை.

கமலா:- உதாரணங்கள் எதற்காக சுந்தர்.

சுந்தர்:- நடந்ததைக் குறித்து வருந்த வேண்டாம் என்பதற்காகவே...

கமலா:- மனப்போக்கிற்கு வேறு வழியே தென்படவில்லையே சுந்தர்.

சுந்தர்:- கமலா! நீ கவலைப்பட்டு என்ன செய்ய முடியும்...? போனதைப்பற்றி கவலைகொள்ளுவது சரியில்லை.

கமலா:- சுந்தர்! அப்பா இறக்கும்போது, என்னவெல்லாமோ பிதற்றிக்கொண்டிருந்தார்... அதிலிருந்து அவருக்கு மன நிம்மதியான இறப்புக் கிடைக்கவில்லையென்று எண்ணுகிறேன் சுந்தர்! அதனால்தான் என் மனம் சரியில்லை...

சுந்தர்:- கமலா! வருத்தப்பட்டு என்ன செய்ய? உன் அப்பாவின் மனநிலை இறக்கும்பொழுது எப்படி இருந்ததோ? யார் கண்டார்கள்! கமலா! கவலைப்பட்டு பயன் இல்லை. இனி நடக்கவேண்டியதைப் பார்க்கவேண்டும்.

கமலா:- என்ன சொன்னாலும் என் மனதிற்கு நிம்மதியில்லையே சுந்தர்! இந்த நிலையில் அண்ணா வேறு படிக்கப் போக வேண்டுமா?

சுந்தர்:- கமலா! உனக்கு ஏன் கவலை... குமார் படிக்கட்டும்... (குமார் வருதல்) நம் குடும்பத்தில் அவன் ஒருவனாவது நன்ருகப் படிக்கட்டும்... கமலா! நீ தனியாக இருக்க வேண்டும் என்ரு?

குமார்:- சுந்தர்! அவள் ஏன் தனியாகஇருக்கவேண்டும். உங்கள் வீட்டிலேயே இருக்கட்டும் அல்லது நீ இங்கு வந்து இரு... சுந்தர்! என் அப்பா இறக்கும்போது சொன்னதையெல்லாம் மறந்துவிட்டாயா! என் தங்கையின் வாழ்வு இனி உன் கையில்தான் இருக்கிறது சுந்தர்! அவளை நீ கைவிட மாட்டாய் என்றே நினைக்கிறேன்... சுந்தர்! நானோ படிக்கப் போகவேண்டும்... படிப்பு முடித்து வந்த பிறகு உங்கள் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம். (ராஜேந்திரம் வருதல்) அதுவரை அவள் உன் வீட்டிலோ, அல்லது இங்கேயோ இருக்கட்டும்... என்ன மாமா!

ராஜேந்திரம்:- குமார்! ஏன்? கமலா இங்கு இருக்க வேண்டும்! இனி அவள் எங்கள் வீட்டுப் பெண்...அங்கேயே இருக்கவேண்டியவள்... சுந்தர்! கமலாவை அழைத்துக் கொண்டு வா! கமலா! வாம்மா!...

குமார்:- மாமா! இவர்கள் திருமணம்...

ராஜேந்திரம்:- உன் படிப்பு முடிந்து... இன்னும் இரண்டு வருடங்கள்தானே... ஆமா! நீ நாளைக்குத்தானே போக வேண்டும்...

குமார்:- ஆமா! மாமா!......

(திரை)

---

(இரண்டு மாதங்களுக்குப் பின்)

**காட்சி 11.**

இடம்:- பார்க்கு. காலம்.- மாலை 5 மணி.

தேவை:- அரசு, மணி, செல்லம்.

(மணியும் அரசும் பார்க்கில் உள்ள ஒரு பெஞ்சில் இருத்தல்)

மணி:- அடே அரசு! ஆட்டத்திலே ஆட்டம் பெரிய ஆட்டம் எந்த ஆட்டம் தெரியுமா!

அரசு:- சூதாட்டம், இல்லை இல்லை... கொண்டாட்டம்... No No. திண்டாட்டம்... Oh! I am sorry... உனக்கு ஹாக்கி என்றால் பிடிக்கும். அதனால் பெரிய ஆட்டம் ஹாக்கி...

மணி:- சேச்சே! ஹாக்கியாவது பாட்டியாவது! இரண்டாவது சொன்னாயே அதுதான் சரி... கொண்டாட்டம்... ஆனால் அந்தக் கொண்டாட்டமெல்லாம்

அரசு:- நமக்கு எங்கேப்பா! எல்லாம் அந்தப் பணக்காரர்களுக்குத்தான்.

மணி:- டேய் அரசு! அப்படிச் சொல்லாதே! முயற்சி-யினுல் கிட்டாததே கிடையாது. "முயற்சி உடையார்...

அரசு:- இகழ்ச்சியடையார்," ஆனுல் நம்ம இரண்டு பேருக்குத்தான் முயற்சி என்பதே கிடையாதே... (மணி தன்னுடைய வாச்சில் மணி பார்த்து)

மணி:- டேய் அரசு! அதெல்லாம் சரி... நேரம் ஆச்சு... வா... காப்பி சாப்பிடப் போகலாம்.

அரசு:- டேய்! எங்கேடா?

மணி:- அங்கேதாண்டா... பரம்பரையாகக் காப்பிக் கிளப் நடத்தும்...

அரசு:- ஓகோ! அங்கா... நான் வரலேப்பா!

மணி:- அரசு! அவர் பழைய காலத்து மெட்டிக்-குலேஷன். அவருடைய பலகாரத்தைவிட பேச்சு மிக இனிமையாக இருக்கும். மேலும் அவர் வீட்டில் ஒரு பெண்...

அரசு:- அதனுலேதான் நான் வரலே என்றேன்' உனக்கு ஏண்டா இந்த கெட்ட எண்ணம்!

மணி:- அடே! யாருடா இவன்... உலகத்தை வெறுத்-தவன் போல பேசுகிருன்.

அரசு:- மணி! நான் சொல்வது இப்போ காதில் ஏருது... உன் மனதில் கொஞ்சம்கூட இரக்கம் என்பதே இல்லையா... ஐயோ! பாவம்... மணி... பாரு வேண்டா-மென்று சொல்லவில்லை... ஆனுல் கடை சிவரை காப்பாற்ற வேண்டும்... அந்தப் பெண்ணைப் பார்த்தால் எனக்கு இரக்கமாகத்தான் இருக்கு!

மணி:- அட நீ ஒன்னு! இரக்கத்தோடு வாழ நமக்-கெல்லாம் இங்கே இடமில்லை... இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு எத்தித்தான் பிழைக்க வேண்டும்.

அரசு:- டேய் மணி! என் பேச்சு இப்போ புரியாது... வெளி உலகத்துக்குப் போனுத் தெரியும்.

மணி:- வெளி உலகத்தைக் கண்டமாதிரியே பேசுகி-ருயே...அப்பா!...அரசு! என்னப்பா கண்ட வெளி உலகத்-திலே, அதைத்தான் கொஞ்சம் சொல்லேன். எல்லாம் தெரிந்ததுமாதிரி Rule பேசுகிருன்...போடாபோ! உன்னை மாதிரி பேசுகிறவர்கள் எத்தனையோ பேர்களைப் பார்த்து இருக்கிறேன்.

அரசு:- சரிதாண்டா... பெரிய சாமர்த்தியசாலிமாதி-ரித்தான்...போட.

மணி:- சாமர்த்தியமிருந்தால் போதுமா அரசு!

அரசு:- பின்னே!

மணி:- சாமர்த்தியத்தைவிட சந்தர்ப்பம்தான் ஒரு மனிதனை தூக்கி விடுகிறது?

அரசு:- உண்மைதான்!

மணி:- இல்லையென்ருல் இந்த சுந்தரம் இப்படிப் பேர் வாங்க முடியுமா? இல்லே, இவ்வளவு சௌகரியம் கிடைக்-குமா! என்னமோ? முத்தையாப் பிள்ளை இறந்தாரு... குமாரும் படிக்கப்போயிருக்கிருன்...கமலாவைக் கைக்குள்ள போட்டுக்கொண்டான்... சாலியாக காலத்தைத் தள்ளு-கிருன்... சீர்திருத்தவாதியின்னு இப்படியில்ல இருக்கணும்!

அரசு:- இப்போ உள்ள சீர்திருத்தவாதிகளே இப்ப-டித்தானே இருக்கிருர்கள். முதலாளிகளை ஒழிக்கணும், விபச்சாரத்தை ஒழிக்கணும், அதை ஒழிக்கணும், இதை ஒழிக்கணும் என்று சொல்லிக்கொண்டே, பணக்காரப்பெண்களை மணந்து கொண்டும், விபச்சாரத்தைப் பெருக்கிக் கொண்டும் இருக்கிருர்கள். கேட்டால் இது காதல் விஷயம்... இது தனிப்பட்டது என்று சொல்லிவிடுகிருர்கள்.

மணி:- எல்லாம் பணமிருப்பதால் தான்... பணமில்லை என்ருல்...

அரசு:- ஒன்றுமே இல்லை... மணி! பணம் என்ருல் அதற்கு ஒரு தனி மதிப்பு. உலகத்தில் உள்ளவரையில்,

அதைச் சும்மா விடக்கூடாது. விட்டால், புத்தர், ஏசு, திருநாவுக்கரசர், காந்தி இவர்களைப்போல் அடியோடு விட்டுத் தொலைக்க வேண்டும். இல்லையானால், பணத்திற்கு நாம் அடிமையாகாமல் நமக்கு அதை அடிமை ஆக்கிக்கொண்டு ஆட்டிப்படைக்க வேண்டும். பெண்ணாசை தனியாட்களைக் கெடுக்கும், தவிர அது இயற்கையாகவே கடவுளால் மனிதனுடைய நாடி நரம்புகளில் சேர்த்துப் படைக்கப்பட்டது... பொன்னாசை தனியாட்களைக் கெடுப்பதோடு நிற்கிறதா? குடும்பம் குடும்பமாக, சமூகம் சமூகமாக, உலகத்தையே கெடுத்து வருவது பண ஆசைதானே? அது மனிதர்களே ஏற்படுத்திக் கொண்ட வம்பு. மனிதனைப் பார்த்துப் பணத்தைப் படைத்து, பின்பு பணத்தைச் சேர்ப்பதற்கு என்று மனத்தைக் கொல்கிறான்.

மணி:- அரசு! நீ சொல்வதெல்லாம் சரி! அதுதானே-யப்பா இந்த உலகத்தை ஆட்டி வைக்கிறது. உலகம் பண மயம். பணம்தான் பேசுகிறது, பணம்தான் ஆளுகிறது. பணம்தான் பதவி கொடுக்கிறது! பணம்தான் சட்டம் செய்கிறது. பணம்தான் வழக்காடுகிறது. பணம்தான் தீர்ப்பளிக்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் நீ என்னடா என்றால் பணத்தைப் பழிக்கிறாய். அது இல்லையென்றால் வாழ வேறு வழியில்லையே. அறிவால், அழகால், அன்பால், பண்பால் கூட வாழ முடியவில்லையே எல்லாம், படிப்பால், பணத்தால், பதவியால்தானேயப்பா வாழ முடிகிறது

அரசு:- அறிவா! பரீட்சை எழுதிமுடித்த அன்றைக்கே போச்சு. அழகோ! பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கிய அப்பொழுதே போச்சு!

மணி - உண்மையை அழகாகச் சொன்னாயப்பா! (அரசுவின் கையைக் குலுக்கி) அழகும் போச்சு, அறிவும் போச்சு, உண்மை... பெரிய உண்மை... கல்லூரிகளில் படிக்கிற பெண்களில் அழகைக் கண்டுபிடிக்கவேண்டுமானால் ஸஹாராவில் நீரூற்றைக் கண்டுபிடிப்பதுபோல்தான்.

அரசு:- என்ன செய்வார்கள், பாவம்! இயற்கைக்கு மாருன பரீட்சைச் சுமை... பரீட்சைச் சுமை... பரீட்சைப் பேய்... கொலே; கொலேயப்பா கொலே... அழகுக் கொலே...

மணி:- சொல்வது உண்மைதானப்பா! ஆனல் பரீட்சை இல்லாவிட்டால்—?

அரசு:- பரீட்சை அடியோடு வேண்டாம் என்று கண்மூடித்தனமாகக் கண்டிக்கவில்லே. இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒரே சுமையாக வைக்கும் முடிவுப் பரீட்சையால்தான் தீமை; அதனுல்தான் ஆண் பெண்களின் அழகும் அழிகிறது... பெண்களின் அழகும் உடையளவில் வந்து நிற்கிறது.

மணி:- அதற்கு அடிப்படையாக உள்ள இந்தப் பரீட்சைச் சுமையைக் குறைக்க முடியாதா?

அரசு:- ஏன் முடியாது? வாரந்தோறும் நடந்த பாடங்களில் வாரந்தோறும் பரீட்சை வைத்து முடித்து விட்டால், சுமை குறைந்து போகும்.

மணி:- இப்போதும் வாரந்தோறும் பரீட்சை வைக்கிருர்களே!

அரசு:- வைக்கிருர்கள், ஆனுல் வைத்து முடிப்பதில்லே.

மணி:- அப்படி என்ருல்?

அரசு:- வாரந்தோறும் வைத்த பரீட்சைகளுக்கு மதிப்புக் கொடுத்து, அவற்றைக் கணக்கில் எழுதிச் சேர்த்து முடிவில் வெற்றி தோல்வி மதிப்பிட வேண்டும். அந்த வாரத்துப் பாடத்தை அடுத்த பரீட்சைகளுக்குச் சேர்த்துக் கொண்டு, சுமையை வளர்த்துத் தொல்லே கொடுக்கக் கூடாது.

மணி:- அப்போது படிக்கும் மாணவர்களுக்குச் சுமையும் துன்பமும் இல்லாமற் போகும், உடல் நலம் கெடாது, அழகு இருக்கும்.

அரசு:- மூளை நலம் கெடாது; அறிவு இருக்கும்.

மணி:- ஏன்? மனநலம் கெடாது; பண்பு இருக்கும் என்று சொல். ஆமா! இப்படி நடத்த முடியுமா?

அரசு:- முடியாமல் என்ன? அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பல பல்கலைக் கழகங்களில் இப்படி நடக்கிறதே.

மணி:- எதையெல்லாமோ? காப்பி அடிக்கிற இவங்க இதையேன் கையாளவில்லை. உம்! இப்போ இருக்கிற பாடத் திட்டப்படி படித்தவர்களுக்கே வேலை இல்லை. ஆமா! நீ வேலைக்காக எழுதிப் போட்டதாகச் சொன்னுயே! பதில் வந்து விட்டதா?

அரசு:- இல்லையே மணி! இன்னும் வரவில்லையே! எத்தனை நாளாயிற்று...

மணி:- எங்கிருந்து வரணும்?

அரசு:- டெல்கியிலிருந்து...

மணி:- எதுக்குப் போட்டு இருக்கே?

அரசு:- டெரல் செர்விஸ் கமிஷன் விண்ணப்ப பாரம் வேண்டும் என்று எழுதிப் போட்டிருந்தேன். பதிலைக் காணுமே; ஒரு வேளை போய்ச் சேர்ந்ததோ! என்னவோ.? தெரியவில்லையே.

மணி:- பாரமே இன்னும் வரவில்லையா? சரி சரி!... சரியான வேலையப்பா... வேலை கேட்பதற்கு விண்ணப்பம், விண்ணப்பம் போடுவதற்கு ஒரு பாரம், பாரம் வேண்டும் என்று எழுதிக் கேட்பது, எழுதிக் கேட்பதற்குப் பதில் இல்லாமல் ஏமாறுவது. போதும், போதும். படிப்பும் பட்டமும்.

அரசு:- ஆமாம் அப்பா! என்ன படித்து என்ன புண்ணியம். வேலை கிடைக்கமாட்டேங்கு... படித்துப் படித்து என்னத்தைக் கண்டோம்...

மணி:- அரசு! நம்ம ஊரிலேயே ஒரு வேலையிருக்கு... கிளார்க்கு வேலைதான். ஆனால், அதற்கு...அந்த பிளேசுக்கு அடிபிடியாகத்தான் இருக்கு. சிவாரிசு இருந்தால்தான் முடியும். நம்ம ஊர் பெரிய மனிதர்கள் நினைத்தால் முடியும். அவர்களைப் பார்த்தால் காரியத்தைச் சாதிக்கலாம். நான் உதவி செய்கிறேன்... வா உடனே போய்ப் பார்க்கலாம்.

அரசு:- அவங்களைப் பார்த்துவிட்டுத்தானப்பா வர்றேன். அவங்கெல்லாருமே சேர்ந்தாப்பலே திருச்செந்தூருக்குப் போயிருக்காங்களாம். நாளைக்குத்தான் வருவாங்களாம்...

மணி:- இவங்க வேறே கடவுளை கும்பிடுகிறுங்களா! இதற்காக திருச்செந்தூர் வேறே போயிருக்காங்களா... ஆமா! நீ கூட மூன்று நாளைக்கு முன் எங்கோ? ஊருக்குப் போவதாகச் சொன்னுயே!

அரசு:- ஆமாம்... போன வேலை ஆகவில்லை. உடனே திரும்பிவிட்டேன்.

மணி: என்ன, பெண் பார்க்கப் போயிருந்தாயோ! போன வேலை ஆகவில்லை, உடனே திரும்பிவிட்டேன் என்கிருயே...

அரசு;- ஆமாம் அப்பா! ஆமா... சதா பெண்ணைப் பற்றி ஞாபகம்... பெண் பார்ப்பது, திருமணம், குடும்பம், அவன் இவளோடு போவது, இவள் அவனேடு வாழ்வது· இவைகளே பேச்சாப் போச்சு! உனக்கு! உலகத்திலே இவற்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லையா?

மணி:- இருந்தால் சொல் பார்க்கலாம். உலகத்தில் பணம் எப்படியோ, அப்படித்தான் பெண்ணும். பணம் இருப்பதால் சிலபேருக்குக் கவலை. இல்லாததால் பலபேருக்குக் கவலை. அப்படித்தான் பெண்ணேடு ஒழுக்கமாக வாழ்வதைப்பற்றிச் சிலருக்குக் கவலை; ஒழுக்கமாக வாழ முடியாததைப்பற்றிப் பலருக்குக் கவலை. பணமும், பெண்ணும் இல்லையானல், உலகத்தில் வேறு என்ன பேச்சு இருக்கிறது.

பணத்தின் மதிப்பாவது ஒரு காலத்தில் போய்விடும் என்று சொல்கிருர்கள். ஆனுல் பெண்ணைப்பற்றிய பேச்சுக்கு ஒரு முடிவே இல்லையப்பா. உலக வாழ்க்கையில் மட்டும் அல்ல, கலைகளில் பார்க்கலாமே. சினிமா, இசை, ஓவியம், காவியம், கதை எதிலாகட்டும். பெண்ணை நீக்கிவிட்டுப் பார் என்ன இருக்கிறது உலகத்தில். (திரும்பிப் பார்த்துவிட்டு) ஓ! I am sorry அரசு! நீ இவ்வளவு நேரம் இங்கு எதற்காக நிற்கிருய் என்பது இப்பொழுதுதான் விளங்குகிறது... அதோ! உன் காதலி வருகிருள். நான் கண்ணியமான முறையில் விலகிக் கொள்கிறேன்... வரட்டுமா அரசு! Good by!... (அரசு! கையை ஆட்டிக் கூப்பிடுகிருன். செல்லம் வருகிருள்)

அரசு:- செல்லம்! உனக்காக நான் எவ்வளவு நேரம் காத்து நிற்பது. உன்னைப் பார்த்துப் பார்த்து என் கண்களே பூத்துப்போச்சு போ...

செல்லம்:- ஓ! அப்படியா! இன்று கொஞ்சம் நேரம் ஆனதிற்கு மன்னிக்க வேண்டும்... என் அண்ணுவோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டேன். அரசு! நான் என்ன சொன்னுலும் அண்ணு நம்பவில்லை. ஆண்கள் இப்படித்தான் சொல்வார்கள், நீ நம்பாதே என்கிருர். அதிலும் கல்லூரிப் பிள்ளைகளை நம்பவே கூடாது என்கிருர். தவிர, நாங்கள் ஏழைகள்.

அரசு:- எனக்கு என்னவோ உன் பேச்சைக் கேட்டால் ஆத்திரமும் வருகிறது; சிரிப்பும் வருகிறது. ஆமா! நான் மட்டும் பணக்காரனு?

செல்லம்:- உங்களைப்பற்றிச் சொன்னதாக நீங்கள் வருத்தப்படக் கூடாது.

அரசு:- இவ்வளவு ஏன்? உன் அண்ணு இப்போது வீட்டில் இருந்தால் சொல்... நானே பேசுகிறேன். நானே உறுதிமொழி சொல்கிறேன்.

செல்லம்:- அண்ணு எங்கேயோ அவசரமாகப் போயிருக்கிருன்... இல்லே இல்லே பக்கத்து ஊருக்குப் போயிருக்கிருன், பிரசங்கத்திற்காக.

அரசு:- நாம் இப்படி தினமும் சந்திப்பது அவனுக்குத் தெரியுமா?

செல்லம்:- தெரியும். நான்தான் சொன்னேன்.

அரசு:- ராஜேந்திரம் பிள்ளேக்குத் தெரியுமா?

செல்லம்:- இதுவரையில் அப்பாவுக்குத் தெரியாது. இனிமேல் அண்ணு சொல்லக்கூடும்.

அரசு:- நீ உன் அண்ணன் சுந்திரத்திடம் என் உண்மையையும் உறுதியையும் சொல்...செல்லம்!

செல்லம்:- சொன்னேன் அரசு!

அரசு:- சொல்லியும் நம்பவில்லேயா?

செல்லம்:- நம்பவில்லே.

அரசு;- நம்பிக்கை வருவதற்கு நான் வேறு என்ன செய்ய வேண்டும். (சற்று அமைதி) சரி, நீயாவது நம்புகிருயா? செல்லம்!

செல்லம்:- நம்புகிறேன்.

அரசு:- எனக்கு அது போதும்

செல்லம்:- ஆனுல், இனிமேல் நான் உங்களே இங்கே காண முடியாது?

அரசு:- ஏன்?

செல்லம்:- கூடாது.

அரசு:- ஏன்? செல்லம்.

செல்லம்:- அண்ணுவின்—

அரசு;- கட்டளேயோ?

செல்லம்:- அல்ல, அறிவுரை.

அரசு:- ஏன், அப்படி?

செல்லம்:- அனுபவத்தால் கூறுவதாகச் சொல்லு-கிறான். என்மேல் உண்மையான அன்பு உடையவன். அத-னால் அவன் சொல்லை மீறக்கூடாது என்று எண்ணுகிறேன்.

அரசு:- அப்படியானால் நம் காதல் இவ்வளவுதானா?

செல்லம்:- காதல் இல்லை என்று யார் சொன்னது!

அரசு:- காதலாக இருந்தால், அது இன்னொருவரின் கட்டுப்பாட்டுக்குத் தலை வணங்குமா?

செல்லம்:- அன்புக்கு பணிவது அதற்கு அழகுதான்.

அரசு:- ஓர் உயிரின் அன்புக்குப் பணிவதுதான் காதல். உலகத்தார்க்கு அடிமையாவது காதல் அல்ல.

செல்லம்:- சரி! நீங்கள் அப்படி நடக்கலாம். ஆண் மகன்; உலகத்தை எதிர்க்க முடியும்; போராடி வெல்ல முடியும். நான் ஒரு பெண்; அதிலும் ஏழைப்பெண்; அவ்வ-ளவு அஞ்சாமையும் கவலையில்லாத தன்மையும் என்னிடம் எதிர்பார்க்கக்கூடாது.

அரசு:- எனக்கு வியப்பாக இருக்கிறது. நான் ஒருக்-காலும் இன்னொருவர் இதில் தலையிடுவதற்கு இடம் தர மாட்டேன்.

செல்லம்:- அதுதான் காரணம்; உலகமும் இயற்கையும் உங்கள் பக்கம் இருக்கின்றன. உலகமும் எங்களை வஞ்சம் தீர்க்கிறது. இயற்கையும் எங்களைக் காட்டிக் கொடுக்கிறது. ஒரு பெண்ணின் ஒரு நாள் பிழை, வாழ் நாள் மாசாக முடிகிறது; ஒரு நாள் ஏமாற்றம், வாழ் நாள் சுமையாக வளர்கிறது; ஒரு நாள் குற்றம், வாழ் நாள் தண்டனையாக ஏற்படுகிறது. ஆண்களுக்கு இந்த மாசு, சுமை, தண்டனை ஒன்றுமே இல்லை. அதனால்தான் இந்த அஞ்சாமை உங்க-ளுக்கு இயற்கையாக இருக்கிறது.

அரசு:- செல்லம்! நீ படித்த பெண்; அறிவுள்ள பெண். இந்தத் தாழ்வு மனப்பான்மை உனக்கு எப்படி வந்ததோ தெரியவில்லை.

செல்லம்:- தாழ்வு மனப்பான்மை அல்ல; உண்மை விளக்கம் என்று சொல்லுங்கள். காதலின் போதையிலே கிடந்தபோது எனக்கு உண்மை விளங்கவில்லை. தெளிவாக எண்ணிப்பார்த்தபோது என் நிலைமை—பெண்களின் பொதுவான நிலைமை—எனக்குத் தெரிந்தது.

அரசு:- காதல் உயிராக இருந்ததுபோய்; போதையாக மாறிவிட்டதோ?

செல்லம்;- அது போகட்டும் அரசு! தவருக இருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள். ஆனல் ஒன்று கேட்கிறேன். உங்கள் பெற்றேர்கள் நம் திருமணத்துக்குக் குறுக்கே நின்று பிடிவாதமாகத் தடுத்தால் என்ன செய்வீர்கள்?

அரசு:- மீறுவேன்! செல்லம்!

செல்லம்:- உண்மையாகவா? அரசு!

அரசு.- கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் திரும்பத் திரும்பச் சொல்லியும், மறுபடியும் புதிய கேள்வியாகக் கேட்கிருயே. மனம் வந்து, "உண்மையாகவா?" என்று கேட்கிருயே. நான் இதைவிட வேறு என்ன சொல்வேன் செல்லம்!

செல்லம்:- ஏதோ! தவறுதலாகக் கேட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள்.

அரசு - செல்லம்! முந்தாநேற்று நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். கேள். அப்பா ஊரிலிருந்து வந்தார். அம்மாவுடன் பெண் பார்ப்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நான் நேராகப் போனேன். தயவு செய்து என் திருமணம் பற்றி நீங்கள் எந்தவகையிலும் தலையிட வேண்டாம் என்றேன். அப்பா பேசாமல் போய்விட்டார்.

செல்லம்:- பேசாமல் போய்விட்டார். அவ்வளவு தானே? தலையிடமாட்டேன் என்று வாய் திறந்து சொல்லவில்லையே. நெருக்கடி நேரும்போது தலையிட்டால் போதும், இப்போது வேண்டாம் என்று உணர்ந்துதான் போய்விட்டார். சரிதான்...

அரசு:- சொல்வதற்கெல்லாம் இப்படித் தவருகப் பொருள் செய்தால் நான் என்ன செய்வது செல்லம்!... சரி... சரி... உன் இஷ்டம்...

செல்லம்:- என்மேல் வருத்தம் வேண்டாம். இந்த சமூகமும் இயற்கையும் எனக்கு அவ்வளவு அச்சமாக இருக்கின்றன. உண்மையாகவே உணர்ந்து சொல்கிறேன் அரசு! என் உள்ளம் கவலைப்படுகிறது. அஞ்சுகிறது, தயங்குகிறது... பிச்சைக்காரியாக இருந்தவள்தானே என்று தள்ளிவிடாதீர்கள் அரசு! **என் உயிரெல்லாம்** உங்கள்மேல்... இந்த ஏழை மீது...

அரசு:- செல்லம்! உன் அண்ணுவின் உபதேசம்தான் நீ இப்படிப் பேசுவது. உன்னை நான் பிச்சைக்காரியாக நினைத்து இருந்தால், இவ்வளவு நாள் உன்னிடம் பழகியிருப்பேனு? இவ்வளவு நாள் என்னுடன் நீ பழகியும் இன்னும் என்னுடைய உள்ளத்தை உணராமல் இருப்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது செல்லம்! இதைவிட உன்னிடம் நான் வேறு என்ன சொல்லவென்றே தெரியவில்லை...

செல்லம்:- தவருக எண்ணுதீர்கள். உங்கள் உள்ளத்தில் எனக்கு நிலையான இடம் கொடுத்துவிட்டீர்களானுல் போதும்! எனக்கு அது ஒன்றுதான் வேண்டும். உங்களை விட்டு நான் வாழப்போவதில்லை...ஆனுல்...

அரசு:- இந்த 'ஆனுல்' இனி எப்போதும் வேண்டாம் செல்லம்! உன் அண்ணன் சுந்தரும், கமலாவும்... கமலாவின் அண்ணன் குமாரும், நளினுவும் எவ்வளவுக்குப் பிரியப்படுகிருர்களோ! அதைவிட பன்மடங்கு நான் உன்மேல் பிரியப்படுகிறேன் செல்லம்! இதில் என் தாயின் அன்பும் என் தந்தையின் அதிகாரமும் சேர்ந்தாலும், என்னை உன்னிடமிருந்து பிரிக்கமுடியாது செல்லம் பிரிக்கமுடியாது... இதை நீ உறுதியாக நம்பு செல்லம்!... நான் நாளை மறு நாள் வருகிறேன்...

வராமல் இருந்துவிடாதே... வரட்டுமா செல்லம்! (என்று செல்லத்தின் கன்னத்தைத் தட்டிவிட்டுப் போதல்)

( திரை )

———

(இரண்டு வருடங்களுக்குப் பின்)

## காட்சி 12.

இடம்:- தெரு. காலம்.- பகல் நேரம்.

தேவை:- அரசு, மணி.

(அரசு, மணியின் தோள்பட்டையைத் தட்டிக் கூப்பிட்டு)

அரசு:- மணி! என்ன கொடுமை! முதல் வகுப்பில் பி. ஏ. பரீட்சையில் தேறினேன். இந்தக் கிளார்க் வேலையில் 80 ரூபாய்க்குக் கரணம் போடுகிறேன். ஆனால் என்னோடு படிக்க முடியாமல் படித்து, எழுத முடியாமல் எழுதி மூன்றும் வகுப்பில் எப்படியோ தேறிய தங்கய்யா ஆபீசர் ஆகிவிட்டான். இப்போது 500 ரூபாய்ச் சம்பளம் வாங்குகிறான்.

மணி:- ஆமாம். அதற்கு என்ன செய்யலாம்?

அரசு:- ஒன்றும் செய்யப்போவதில்லை. நினைத்துப் பார்த்தேன், வயிற்றெரிச்சலாக இருக்கிறது.

மணி:- உன் வயிற்றெரிச்சல் உனக்குத்தான் கெடுதி. அது அவனை ஒன்றும் செய்யாது. நீ 80 ரூபாயிலிருந்து 120 ரூபாய்க்குக் போவதற்குள், தங்கய்யாவின் சம்பளம் 500 ரூபாயிலிருந்து ஆயிரத்துக்குப் போய்விடும். தெரியுமா?

அரசு:- தெரியும் அப்பா! தெரியும். தெரிந்துதான் பேசுகிறேன், பேசாமல் என்ன செய்வது?

மணி:- ஏன்? இப்படி வயிற்றெரிச்சல் படவேண்டும்! உனக்கும் பெரிய இடத்துச் சிபாரிகள் இருந்தால் நாளைக்கே

ஆபீசர் வேலே கிடைக்கும். சிபாரிசுக்கு வழி இருக்கிறதா? சொல்.

அரசு:- எனக்கா? உன்னைத்தவிர வேறு யார் எனக்குத் தெரியும்!

மணி:- உனக்குத்தான் பணத்தைப்பற்றிக் கவலேயே இல்லேயே. யார் எவ்வளவு சம்பளம் வாங்கினுல் உனக்கு என்னப்பா?

அரசு:- எனக்கு யார்மேலும் பொருமை இல்லே மணி! உள்ளபடி சொல்லுகிறேன். இதோ பார் (சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக்காட்டல்) தேதி 20 தான் ஆகிறது. கையில் காலணு இல்லே. கடிதம் இப்படி வருகிறது. நான் என்ன செய்வது?

மணி:- (கடிதத்தை வாங்காமல்) இருக்கட்டும். என்ன செய்தி? சொல்லப்பா?

அரசு:- சும்மா படி மணி! நானுகக் கொடுக்கும்போது படித்தால் தப்பு அல்ல! படித்துப்பாரப்பா!

மணி:- (கையில் வாங்கிப் படித்தல்) "அன்புள்ள தம்பிக்கு அக்கா எழுதியது, நலம். இவ்விடம் யாவரும் நலமாக இருக்கிருேம். அம்மா அப்பா நலத்தையும் உன் நலத்தையும் தெரிவிக்கவும். இவ்விடம் எங்கள் துன்பம் சொல்ல முடியாது. இறைப்புக்கு உதவியாக இருந்த கருப்பு எருது கோமாரி வந்து இறந்துவிட்டது. வேறு எருது வாங்கலாம் என்ருல் கையில் காசு இல்லே. நிலத்தை அடமானம் வைத்துவிட்டபடியால், இனிமேல் கடன் கொடுக்க ஆள் இல்லே. ஒரு ரூபாய் கடன் கேட்டாலும் யாரும் கொடுக்கவில்லே. எருது வாங்காமலிருந்தாலோ நீர் இல்லாமல் பயிர் வாடிப்போய்விடும். போட்ட விதையும் வராது. அப்புறம் தலேயெடுக்கவே முடியாது. பெரிய பையன் நான்காவது வகுப்புக்குப் போயிருக்கிருன். இன்னும் புத்தகம் வாங்கவில்லே. கையில் காசு இல்லே. புத்தகம் இல்லாமல் பள்ளிக்கூடம் வரக்கூடாது என்கிருர் வாத்தியார். அவனுக்குக்

கிழியாத சொக்காய் (சட்டை) ஒன்றும் இல்லை. சின்னப்பையனுக்கு அடிக்கடி காய்ச்சல் வருகிறது. ஊசி போடவேண்டும் என்றும், பணம் கொடுத்தால்தான் மருந்து வாங்கிப் போட முடியும் என்றும் டாக்டர் சொல்கிறார். இன்னும் மிகுதியாக எழுதி உனக்குக் கவலை உண்டாக்க மனம் இல்லை. எங்கள் வாழ்க்கை நரக வேதனையாக இருக்கிறது. எப்படியாவது எங்களுக்குப் பணம் அனுப்பினால்தான் நாங்கள் பிழைக்க முடியும். என்ன செய்வது? எங்கள் நிலைமை அப்படி இருக்கிறது.

இப்படிக்குத் தமக்கை,
**அலர்மேலு.**

(கடிதத்தை அரசிடம் கொடுத்து) அரசு! படிக்கவே முடியவில்லையப்பா!

அரசு:- இந்தக் கடிதத்தைப் படித்துச் சொல்லிவிட்டால் போதும், அப்பாவும் அம்மாவும் சாப்பிடவே மாட்டார்கள். அதே கவலையாகக்குன்றி உட்கார்ந்து விடுவார்கள். உதவி செய்யவோ வழி இல்லை. இன்றைக்குக் காலையில் காய்கறி வாங்குவதற்குக் காசு இல்லாமல், மிளகுக்குழம்பு வைக்கும்படியாக அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தேன். என்ன வாழ்க்கை; சனியன்!

மணி;- கலியாணம் செய்துகொள்வதற்கு முன்னமே இப்படிச் சலித்துப்போனால்—?

அரசு:- அப்பாடா, அது ஒன்றுதான் குறைச்சல்! இந்த உப்பு மிளகாய்க் கவலை தீர்வதற்குமுன் கலியாணம் செய்துகொள்கிறவன்தான் வடிகட்டிய மடையன்.

மணி:- எவனோ சொன்னானாம்: இந்தக் கடலில் அலை அடங்குவதற்கு முன் குளிக்கப் போகிறவன்தான் தூண் பொறுக்கி எடுத்த முட்டாள் என்று. அப்படித்தான் இதுவும்.

அரசு:- வீட்டில் எந்நேரமும் அந்தக் கிழவியும் கிழவனும் வருவார் போவாரிடத்தில் என் கலியாணத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். அதுபோல்தான் உன் பேச்சும் இருக்கிறது.

மணி:- அப்பா'டா! நான் சொல்லியா நீ கேட்கப் போகிருய்? எங்காவது உண்டா?

அரசு:- அது கிடக்கட்டும். இதற்கு வழி சொல்... (கடிதத்தைச் சுட்டிக்காட்டி)

மணி:- வேண்டுமானுல் நான் 50 ரூபாய் கடன் தருகி-றேன், அனுப்பு.

அரசு:- கடன் வாங்கி அனுப்பி விடுகிறேன். அப்புறம் அந்தக் கடனை எப்படித் தீர்ப்பது?

மணி:- அதற்கு என்ன செய்வது? வேறுவழி இல்லையே! உனக்கோ சம்பளம் போதாது.

அரசு:- என்ன சிக்கனம் செய்தாலும் பலிக்கவில்லையே. வீட்டு வாடகையைக் குறைப்பதா? சத்து இல்லாத சாப்-பாட்டுச் செலவைக் குறைப்பதா? அழகு இல்லாத ஆடைச் செலவைக் குறைப்பதா? ஒரே வழி; நானும் என் அப்பா அம்மாவை அழைத்துக்கொண்டு ரஸ்தாவுக்கோ, ஆற்றங்-கரைக்கோ போய் ஒரு ஓரத்தில் ஒரு மரத்து நிழலில் அடுப்பு வைத்துப் பொங்கிச் சாப்பிட்டால், வீட்டு வாடகை இல்லா-மற் போகும். ஆனுல், அப்படிச் செய்தால், நாளைக்கே வேலைக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பி விடுவார்களே!

மணி:- அப்புறம் சொல்! நன்ருக பேசுகிருயே!

அரசு:- இதென்னப்பாது? என்னுடைய பேச்சுத் திறமையை எடை போட வந்து விட்டாயே? இது என்ன ஆண்டுவிழாவா? மேடைப் பேச்சா?

மணி:- வேறு என்ன செய்வது? நான் சொன்னுல் எந்த வழியும் உனக்குப் பிடிக்காது. அதனுல் நீயாகச் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அரசு:- சரி, சொல்லப்பா! கேட்கிறேன்.

மணி:- சும்மா காதால் கேட்டால் போதாது. "நிற்க அதற்குத்தக" என்றபடி நடக்க வேண்டும்.

அரசு:- சொல், பார்க்கலாம். கிளார்க் வேலையை விட்டு விட்டு, ஏதாவது பீடி வெற்றிலை பாக்குக் கடை வைக்கச் சொல்கிருயா?

மணி:- ஆ ஆ! முடியுமானுல் தடையில்லாமல் செய்யலாம். ஆனுல் உனக்கு அந்தத் திறமை இல்லை. அதைவிட—.

அரசு:- அதைவிட என்னப்பா!

மணி:- சம்பளத்தோடு கொஞ்சம் இது அது வாங்கிப் பழக்கப் படுத்திக்கொள்.

அரசு:- போதுமப்பா உன் யோசனை! போயும் போயும் இந்த யோசனையையா சொல்ல வந்தாய். வருகிறேன் வணக்கம்.

மணி:- அதற்காகத்தான் நான் சொல்ல மாட்டேன் என்கிறேன். இன்னொரு வழியும் சொல்லி விடுகிறேன் கேள். இந்தமாதிரி காந்தி நெறியிலும், வள்ளுவர் நெறியிலும் நீ போனுல் உன்னுல் வாழமுடியாது. மேலும் நீ இப்போது காதலித்து இருக்கிருயே செல்லம் அவளை மணந்து கொண்டாலும் பயனில்லை. காதலையெல்லாம் உதறிவிட்டு பணக்காரர் யாராவது பெண் கொடுத்தால்-அநேகமாக ஏழைக்குக் கொடுக்க மாட்டார்கள்! ஒரு வேளை எந்தப் பணக்காரராவது வேறு வழி இல்லாமல் உனக்குப் பெண் கொடுக்க முன் வந்தால்—தடை சொல்லாமல் திருமணம் செய்துகொள். பெண் எப்படி இருந்தாலும், கூன், குருடு, நொண்டி, முடமாக இருந்தாலும் சரியே. என்னப்பா! என் யோசனைப்படி நடக்க உத்தேசமா?...

அரசு:- என்ன? என் காதலி செல்லத்தை மறப்பதா? மணி! எனக்கும் செல்லத்திற்கும் உள்ள பழக்கத்தைப் பார்த்துமா, நீ இப்படிப் பேசுகிருய்? அவளை நான் உதறி விட முடியாது. அந்த நல்ல குடும்பத்தை விடமுடியாது... அங்கேதான்...

மணி:- அங்கே உனக்கு என்ன கிடைக்கும்? நாளைக்கு உனக்கு இதைவிட உயர்ந்த ஒரு வேலை வாங்கித்தர

முடியுமா? உனக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில் உதவுவதற்கு ஏதேனும் கொஞ்சம் சொத்துத் தரமுடியுமா? உன்னைவிட ஏழைகளிடம் உனக்கு உறவு இருப்பதால் பயன் என்ன?

அரசு:- பெண் பார்ப்பது, வேலையும் சொத்தும் தேடிக் கொள்வதற்குத்தானா?

மணி:- நம்ம ஊரில் உனக்கு இப்போது பார்க்கிற இடம் நல்ல இடம். வேலையும் சொத்துமட்டும் அல்ல. நல்ல குணமும் உண்டு. பெண்ணின் தகப்பனார் பெரிய பணக்காரர். செல்வாக்கு உள்ளவர். சொத்து முழுவதும் உனக்கே... உன் பெற்றோர்கள் அந்த இடத்தை மிகவும் விரும்புகிறார்கள். "எங்களுக்கு என்ன? உதவாத இடத்தில் தள்ளுவோமா? இவ்வளவு படித்துப் பட்டம் பெற்று முடிந்த பிறகு, கவுரமாக ஒரு வேலையில் இருந்து சுகமாக வாழ வேண்டும் என்பதுதான் எங்கள் கவலை" என்கிறார்கள் உன் பெற்றோர்கள். அரசு! உன் பெற்றோர்கள் மகிழ்ச்சியாக வாழ் நாளைக் கழிக்கவேண்டும் அல்லவா? அவர்கள் மனம் வருந்தும்படியாக விட்டு விடுவது நல்லதா? அவர்களைப் பற்றிக்கூடக் கவலையில்லையாம். எல்லாம் உன்னைப்பற்றி; உன்னுடைய எதிர்காலத்தைப் பற்றித்தான்—அவர்களுக்குக் கவலையாம். நம்மை மதிக்கத் தகுந்தவர்கள் அல்ல அவர்கள். அப்படியிருந்தும் எவ்வளவு தூரம் அவர்கள் வலிய வந்து பெண் கொடுக்க வருகிறார்கள். நீயே சொல்லு! சென, குண, முண, எப்படிப்பட்டவர்!

அரசு:- தெரியும்...ஆனால் அந்தப் பணம் எல்லாம் நல்ல வழியில் வந்த பணம் அல்ல. ஊரை எல்லாம் ஏமாற்றி, ஏழைகளை உறிஞ்சிச் சேர்த்த பணம் அந்தப் பணத்துக்கு ஆசைப்படுகிறார்கள் என் பெற்றோர்கள்...

மணி:- அந்தக் காசிலே அப்படி எழுதி வைத்திருக்கிறதா? அந்தக் காசு செல்லாதா? அப்படிப் பார்த்தால் இருக்கிற கோயில் குளம் பள்ளிக்கூடம் இவைகளில்

முக்காலே மூன்று வீசம் பங்கு அநியாயமாய்ச் சேர்த்த பணத்தாலே ஏற்பட்டவைகள்தான். அதனாலே கட்டின-வர்களுக்குப் புகழ் குறைந்து போச்சா? அரசு! எவ்வளவு திறமை இருந்தாலும், எவ்வளவு படிப்பு இருந்தாலும், கொஞ்சம் ஏமாந்தால் சமூகம் நடுத்தெருவில் விட்டுவிடுகிறது. அறிவோடு நடந்துகொண்டால், மாடி வீட்டில் வைத்துக் காப்பாற்றுகிறது. நீ நல்லபடியே சுகமாக வாழ வேண்டும் என்றுதானே உன் பெற்றோர்கள் பாடுபடுகிறார்கள். இல்லா விட்டால், எங்காவது ஏழை வீட்டில் பார்த்து ஏற்பாடு செய்ய அவர்களுக்குத் தெரியாதா? ஏழையுடன் உறவு வைத்துக் கொண்டால், தலைமுறை தலைமுறையாகக் கஞ்சிக்கும் கந்தலுக்கும் போராடிச் சாகவேண்டியதுதான். அய்யய்யோ! அதை நினைக்கவும் பயமாக இருக்கிறதே! நாளுக்கு நாள் துன்பம் வளருகிறதே தவிர குறையவில்லை. இல்ல, நீயாவது சொத்து உள்ளவனாக இருந்தாலும் கவலை இல்லை. நமக்கு இருப்பதே போதும் என்று ஏழை வீட்டில் உறவு வைத்துக் கொள்ளலாம். உனக்குப் பின்னால், உன் குடும்பம் சுகமாக இருக்க வேண்டாமா?

அரசு:- கவலை இல்லாமல் காலம் தள்ள வேண்டும். அதற்கு ஓரளவுக்குச் சொத்து ஏதாவது இருக்கத்தான் வேண்டும். அதற்காக என் செல்லத்தைக் கைவிட்டு விடுவதா?... பணம் இல்லாவிட்டால்...

மணி:- இல்லாவிட்டால் யாரும் காப்பாற்ற மாட்டார்களப்பா! யாரும் காப்பாற்ற மாட்டார்கள். திக்கில்லாமல் இந்த சமூகத்தில் திரிந்தால், உன் பெற்றோர்களுக்கு, எங்களுக்கு எப்படி இருக்கும்?

அரசு:- (நிமிர்ந்து) சரி. பணம்தான் காப்பாற்றும். சமூகத்தில் யாரும் காப்பாற்ற மாட்டார்கள் என்று சொல்-லுகிறாய் அல்லவா? அதெல்லாம் சரி! அந்த சென்னா, குன்னா, முன்னா எவ்வளவு கொடுப்பார்.

மணி:- இதென்னப்பா கேள்வி... ஒரு வீடு வாங்கி வைத்து, நகைகள் எல்லாம் வைரமாகப் போட்டு, கலியாண-மும் செய்து வைப்பதாகச் சொல்லுகிறார்கள் உன் பெற்றோர் கள்.

அரசு: எல்லாம் சேர்த்து மொத்த மதிப்பு—?

மணி:- அதை யார் கணக்குப் போட்டார்கள்? உன் பெற்றோர்களைக் கேட்டால் தெரியும்.

அரசு:- கணக்குத்தான் இப்போது வேண்டும். ரூபாய், அணு, பைசா இவ்வளவு என்று தெரிய வேண்டும்.

மணி:- (சிறிது யோசித்து) எல்லாம் சேர்ந்து முப்பது முப்பத்தைந்தாயிரம் என்று வைத்துக்கொள்ளலாம்.

அரசு:- சரி! என் விருப்பம்போல் நடந்துகொள்வதாக இருந்தால், அப்பாவுக்கு வெறுப்பு, அம்மாவுக்கு வருத்தம். ஊராருக்குத் துன்பம், சமூகத்துக்குத் தொல்லை. எதிர் காலத்துக்கு ஏமாற்றம் ஏன்? இவ்வளவு வம்பு! உங்கள் விருப்பம் போலவே நடந்து கொள்கிறேன். ஆனல்! இவ்வ-ளவு பணம் போதாது.

மணி:- இன்னும் மிகுதியாகக் கேட்டுப் பார்க்கலாம்.

அரசு:- கேட்டாலும் அங்கே கிடைக்காது. சின்ன வியாபாரிதானே. என்ன சேர்த்து வைத்து இருந்தாலும் ஒரு லட்சம், இரண்டு லட்சத்துக்குமேல் அவரிடம் இருக்காது.

மணி:- எல்லாம் உனக்குத்தானேயப்பா! ஏன்? இது காணுதோ?

அரசு:- காணுது...!

மணி:- அப்படியானல்...

அரசு:- பணம் தேடுவது என்று கதையைத் தொடங்கி விட்ட பிறகு, பஞ்சத்திலாண்டியாக இருக்கக்கூடாது. திருடப் போனலும் பெரிய இடத்தில் திருடப் போகணும்.

மணி:- அதற்கு—? ஆகிற கதையாகச் சொல்லப்பா!

அரசு:- இந்த முப்பத்தைந்தாயிரம் எனக்குப் போதாது; வேண்டவும் வேண்டாம்... முப்பத்தைந்து லட்சம் வேண்டும்.

மணி.- ஆ! முப்பத்தைந்து லட்சமா! அரசு! ஆகிற பேச்சாகப் பேசு! எதையோ சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்க்கிறாய்...?

அரசு:- மணி! நான் வேடிக்கைக்குப் பேசவில்லையப்பா. ஆகிற கதையே பேசுகிறேன். தட்டிக்கழிக்கப் பேசவில்லை. சொன்னபடி செய்யவே போகிறேன். (மணி திகைத்து முழித்தல்) நான்! நீங்கள் விரும்புகிறபடி நடக்கப்போவதில்லை. ஆனால் என் வழியை விட்டுவிட்டு, நீங்கள் காட்டிய வழியில் நடக்கப் போகிறேன். இது உங்கள் விருப்பம் அல்ல; ஆனால் உங்கள் வழி இது. காசுதான் தலைவிதியை வகுப்பது. வேறு எது? பண்பு பணம் இரண்டையும் ஒருங்கே தேடிக் கெடக்கூடாது. இரண்டில் ஒன்று போதும். ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் வேண்டாம். 'காதல் போகட்டும், காசு சேரட்டும். அன்றைக்கு தங்கய்யா சொல்லிக் கொண்டிருந்தானே. அந்தப் பெரிய வியாபாரியின் பெண். அந்தப் பெண்தான் வேண்டும். நான் கவலை இல்லாமல் வாழ்வதற்கு, சுகமாக வாழ்வதற்கு. நீங்கள் என்னைப் பார்த்துக் கவலைப் படாமல் இருப்பதற்கு—எனக்காக ஏங்காமல் இருப்பதற்குப் பணம்தான் வேண்டும். முப்பத்தையாயிரம் போதாது, முப்பத்தைந்து லட்சம் வேண்டும். அவர் கொடுப்பார்... ஒரே மகள்—எல்லாம் எனக்கே. அந்தப் பெண்ணை ஏற்பாடு செய்யச் சொல். இனிமேல் வேறு பேச்சுப் பேசவேண்டாம். அந்தக் குருட்டுப் பெண்தான் எனக்கு வேண்டும். இந்த நொண்டிப் பெண் எனக்கு வேண்டாம். இல்லையானால் எனக்குக் கலியாணமே வேண்டாம். மணந்தால் குருட்டுப் பெண்ணைத்தான் மணப்பேன் என்று சொல்லிவிடு. இனியும் என்னை தொந்திரவு செய்யாதே... இதுவே என் முடிவு...

மணி:- குருட்டுப் பெண். அய்யோ! அரசு! உன் பிடிவாதத்தை மாற்றிக்கொள். ஆமா! உன் பெற்றோர் கெட்ட எண்ணத்தாலா......

அரசு:- ஹும். கெட்ட எண்ணத்தால் கெடுக்க மாட்டீர்கள். ஆனால், நல்ல எண்ணத்தால் கெடுக்க முடியுமே என்பதை நிரூபிக்கப் போகிறீர்கள்.

மணி;- வலிய வந்ததைத் தள்ளுகிறாய்... அப்போ உனக்கு அதிர்ஷ்டமில்லே.

அரசு:- ஏன்? புத்தியில்லேயென்று சொல்...

மணி:- ஆமா! உனக்கென்ன பைத்தியமா?

அரசு:- இனி நான் பைத்தியக்காரன்தான் மணி! வருகிறேன். (விரைந்து போதல், மணி! தன் தலேயில் கையால் அடித்துக்கொள்ளுதல்)

( திரை )

காட்சி 13.

இடம்:- பார்க்கு. காலம்:- மாலே நேரம்.

தேவை:- சுந்தர், கமலா, குமார்.

(சுந்தர் படித்துக்கொண்டு இருக்கையில் மறைவாக கமலா வந்து ஒரு கொப்பில் உள்ள பூவினல் அவன் கன்னத்தில் மெது-வாக அடித்தல்)

சுந்தர்:- என்ன? பூக்கணே பாய்கிறது? யாரது! ஒருவேளே அம் மன்மதனின் திருவிளேயாடலாக இருக்குமோ? சேச்சே. அவனேத்தான் சுட்டெரித்து விட்டாரே! இல்லே. இந்த வனதேவதையே! ஏ! வனமோகினியே! அடி, தாங்கமுடிய வில்லேயே!

கமலா:- மனதைப் பறிகொடுத்த மங்கையின் மலரடி தாங்க முடியவில்லையோ! கன்னியர் கருத்தைக்கவரும் கட்டழகு பெற்றிருப்பது தவறல்லவா?

சுந்தர்:- ஓகோ! தங்கள் கருத்துப்படி தவறுதான்...ம் (பெருமூச்சு)

கமலா:- பெண்ணுலகத்தைக் களவாடல், அவர் மனத்தை அனுமதியின்றி ஆக்கிரமித்தல், ஆகிய பெருந் தவறுகளை செய்திருக்கும் குற்றவாளி நீர்! இயற்கை விதிக்கும் தண்டனையை அனுபவித்தாக வேண்டும். தெரிந்ததா? சுந்தர்!

சுந்தர்:- என்னையும் அறியாமல் நிகழ்ந்த பிழைகளாக இருக்கலாம் பொருத்தருள்க அம்மையே.

கமலா:- உங்களுக்கு மன்னிப்புக் கிடையவே கிடையாது? என் மனம் நோகும்படி நடந்துகொண்ட உமக்கா! ஊஹூம்...

சுந்தர்:- ஏன்? கமலா?

கமலா:- ஏனு? நீங்களே சொல்லுங்கள்!

சுந்தர்:- எனக்கு எப்படித் தெரியும் கமலா!

கமலா:- உங்களைக் காணுமல்...

சுந்தர்:- சூரியனைக் காணுத தாமரை மலர் வாடுவது போல்......

கமலா;- இல்லை சுந்தர்! மழை காணு இளம் பயிர் போல்.

சுந்தர்:- ஏது கமலா! நன்ருகப் பேசுகிருயே!

கமலா:- நான் பேசுவது பிடிக்கவில்லை என்ருல் போகலாம்.

சுந்தர்:- பார்த்தாயா! உடனே கோபந்தான் உனக்கு! அதைச் சொல்லவில்லை கமலா!

கமலா:- பின் எதைச் சொன்னீர்களாம்...

சுந்தர்:- (சிரித்து) கமலா! நீ கோவப்படுவதும் ஒரு அழகாகத்தான் இருக்கு! "உண்மை இன்பத்திற்கு ஊடல் அவசியம்" என்ற வள்ளுவரின் ரகசியம் ஆணைவிட பெண்ணிடத்தில்தான் இயற்கையாக அதிகம் பதிந்து கிடக்கிறது... கமலா! நீ பேசும்போது! கமலா! அமிர்தத்தை வாயாலே தான் பருக முடியுமென்று சொல்லுவார்கள். ஆனால் நான் அதைக் காதாலேயும் பருகினேன் கமலா!

கமலா:- எங்கே? சுந்தர்.

சுந்தர்:- உன்னிடம்தான்.

கமலா:- அதுதான் இல்லே, உங்களிடம்தான்.

சுந்தர்:- அப்படியா கமலா!

கமலா:- உம்...

சுந்தர்:- காரணம்... (குமார் வருதல், இவர்களைப்பார்த்து மறைந்து நிற்கிறன்)

கமலா:- காரணமா! சொல்லட்டுமா! உம்...தென்றல் ஏன் இன்பந் தருகிறது. கரும்பு ஏன் ருசிக்கிறது? தேன் ஏன் அவ்வளவு சுவையாக இருக்கிறது? என்று யாராலும் கூற முடியுமா? அதுபோல் உங்களுடைய பேச்சு ஏன்? திகட்டுவதே இல்லே என்று சொல்லவே முடியாது. அமிர்தத்திலும் மேலாக அல்லவா இருக்கிறது சுந்தர்!

சுந்தர்:- அப்படியா? கமலா!

கமலா:- உம்...சுந்தர்! ஆனால்...

சுந்தர்:- ஆனல் என்ன கமலா!

கமலா:- அதைத் தினமும் அனுபவிக்க எனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லே.

சுந்தர்:- ஏன்? கமலா!

கமலா:- நீங்கள் இப்படி அடிக்கடி வெளியூர் போய் வருவதாகத் தெரிந்திருந்தால்,

சுந்தர்:- என்னைக் காதலித்து இருக்க மாட்டாய்? அப்படித்தானே கமலா!

கமலா:- இல்லை, பொருத்தமில்லையென்று தடுத்திருப்பேன்.

சுந்தர்.- ஏன்? எனக்கு இதயமில்லையா! இல்லை இன்ப உணர்வு இல்லையா?

கமலா:- இதயமிருக்கும் ஆனால் அதில் ஈரமிருக்காது. இன்ப உணர்வு இருக்கும் ஆனால் அதை நுகர நேரமிருக்காது.

சுந்தர்:- (சிரித்துக்கொண்டே) கமலா! உன் ஆராய்ச்சி பெரிது?

கமலா:- தங்கள் ஆற்றலை விடவா?

சுந்தர்:- உனதன்புக்கு முன்னால் என் ஆற்றல் தோற்று விடுகிறது. உன் நினைவில் என்னையும் மறந்து விடுகிறேன்.

கமலா:- சுந்தர்! அதே நிலையில்தான் நானும் இருக்கிறேன்.

சுந்தர்:- கமலா! நீ என் காதல் வானிலே ஒளி செய்யும் முழு நிலவு. (நிலவு என்றதும் சந்திரனைப் பார்த்தல் கமலா).

கமலா:- நிலவா? நானா? இல்லவே இல்லை! நீங்கள் தான் சுந்தர்! உங்களிடம் ஒன்று கேட்பேன் சொல்லுவீர்களா?

சுந்தர்:- உம்......

கமலா:- சுந்தர்! ஏன்? அந்த சந்திரன் நிற்கிறான்.

சுந்தர்:- அதா! உம்... ஆங்... உலகத்திலேதானொரு சந்திரன் தான் இருப்பதாக எல்லோரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், இதோ மற்றொரு சந்திரன் இருக்கிறானே என்று உன் வதனத்தைக் கண்டு ஆச்சரியமுற்று அப்படியே நின்றிருக்கிறான்".

கமலா:- அப்படியா? நான் என்ன உங்களை விட அவ்வளவு அழகாகவாக இருக்கேன்.

சுந்தர்:- கமலா! உன் அழகு... ஆஹா... மனைவியின் அழகுக்காக அன்புக்காக, அவள் இறந்தபின் அவளுக்குத் தன் அன்பின் காணிக்கையாய் தாஜ்மஹாலைக் கட்டிய ஷாஜஹான் இப்பொழுது இருப்பானேயாகில் உன்னுடைய அழகைப்பார்த்து உடனே ஒன்று என்ன? ஒன்பது தாஜ் மஹால் கட்டியிருப்பான். ஆனால் என் கையில் பணமிருந் தால் ஒன்பதா கட்டுவேன்? இல்லை - ஒன்பதினாயிரம் கட்டு வேன். கமலா! கட்டுவேன் ஆனால் நான் உன்னினும் ஏழை... ஆம் கமலா! உன் அழகைப்பற்றி எப்படி உன்னிடம் கூறுவது என்பதே தெரியவில்லை. உண்மையில் நீ ஒரு சிறந்த அழகி கமலா!

கமலா:- அப்படியா! சுந்தர்?

சுந்தர்:- ஆம் இதில் சந்தேகமானால், மதிவதனி, அதோ பார்! ஒரு வெண்மேகம் சந்திரனை மறைக்க எவ்வளவு வேக மாக ஓடோடி வருகிறது.

கமலா:- ஆமாம்! அந்த மேகம் ஏன் ஓடி வருகிறது தெரியுமா?

சுந்தர்:- அதைத்தானே நானும் உன்னிடம் கேட்கிறேன்.

கமலா:- சுந்தர்! நீ எங்கு அந்தச் சந்திரனைப் பிடித்து அடிமையாக்கி உன் காதலி கமலாவிடம் ஒப்படைத்துவிடு வாயோ என்று பயந்து அந்த வெண் மேகத் திரையை இழுத்துத் தன்னை மறைத்துக்கொள்ளப் பார்க்கிறான்.

சுந்தர்:- அதுதான் இல்லை கமலா! அப்படியானால் அதற்குக் கருமேகத் திரையையல்லவோ நாடவேண்டும். இது வெண் மேகமல்லவோ?

கமலா:- பின் எதற்கு? நீங்களே சொல்லுங்கள்!

சுந்தர்:- கமலா! உன் முகப்பொலிவை நேரிலிருந்து பார்ப்பதற்கு வெட்கி தன்னை வெண் மேகத்திரையில் மறைத்துக்கொண்டு பார்க்க முயல்கிறான்.

கமலா:- (சிரித்து) அடடா! அப்படியா! எவ்வளவு

அழகான கற்பனை! உம். உங்களுக்கென்ன நிறைய காவியம் படித்திருப்பீர்கள், உங்களுக்குக் கற்பனை உதயமாகக் கேட்க வேண்டுமா?

சுந்தர்:- உம்... அதுவும் உன்னிடம்தான்

கமலா:- என்னிடமா...உம்... (சிரிக்கிறார்கள்)

குமார்:- (மறைவிலிருந்து முன்வந்து) சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்! என் நிலைமையைக்கண்டு சிரியுங்கள்.

சுந்தர்:- குமார்! வா...இப்படி உட்கார்! உன்நிலைமையைக்கண்டு நாங்கள் வருந்துகிறோம் குமார்!

கமலா:- அண்ணா! உன் காதலி!

சுந்தர்:- குமார்! நீ யாருக்காக உன்னுடைய வாழ்வை அர்ப்பணிக்க நினைத்தாயோ? அவள், உன்னை மோசம் செய்து விட்டாள். இல்லை! மோசமாகிவிட்டாள். வறுமையாலா? இல்லை, அவள் சதியா?

கமலா:- அண்ணா! அழகின் சிகரம், இளமையின் எழில், வாழ்வின் ஒளி, அவள் கயல்விழிகளை, அன்பு கனிந்த ஆதரங்களை கிள்ளை மொழிகளை, கருத்தமைந்த கண்கள், மயக்கும் அழகு, எல்லாம் இணைந்த இளமையின் இராணி, அவளை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் ஆஹா, அவள் அழகு ஓர் அற்புதமான காந்தம், மதுவிலே "போதை" இருப்பதைப்போல, அவள் அழகில் கற்பனைக்கும் எட்டாத ஓர் கவர்ச்சி இருக்கிறது. குருடனைத் தவிர அவள் அழகைக் கண்டு சொக்காதவர்களே இருக்க முடியாது, என்றெல்லாம் வர்ணித்தாயே...உன் காதலி நளினாவைப்பற்றி. அந்த நளினா, இன்று ஒரு கர்ப்பிணி அண்ணா கர்ப்பிணி.

குமார்:- ஆ! ... ஐயோ! நளினா...நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா?

கமலா:- அவள் உன்னை வஞ்சித்துவிட்டாள் எப்படி? மனச்சாட்சிக்கு மதிப்புக்கொடுக்காத ஒரு போலீஸ்காரன் ஒரு கைதியை அவன் ஒரு மனிதன் என்பதையும் மறந்து

மிருகத்தனமாய் நடத்துவதுபோல, தனக்காக ஒரு காதலன் ஏங்கிக்கிடக்கின்ருன் என்பதையும் உதாசினம் செய்து, விபச்சாரத் தொழிலில் இறங்கி விட்டாள்... நம்பிய உன்னே நயவஞ்சனே செய்து விட்டாள். அந்த நாசகாரியை உன் மனதிலிருந்து அகற்றிவிடு அண்ணு! அகற்றிவிடு.

குமார்:- ஆம்! மோகித்து–மோசம் செய்து விட்டாள், வலேவீசி–வஞ்சித்து விட்டாள்; ஆசை காட்டி–அமைதியைக் குலேத்து விட்டாள். கண் போட்டு கண்ணீர் சிந்த வைத்து விட்டாள். உம்... காதல் என்ற சொல்லுக்கே களங்கம் செய்து விட்டாள் நாசகாரி!

சுந்தர்:- குமார்! அவள் மேல் தப்பு இல்லே. அவள் தந்தையார் வற்புறுத்தியே நடந்து இருக்கிறது. செய்தி உனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்கலாம். எங்களுக்கும் முதலில் கேள்விப்பட்டதும் அப்படித்தான் இருந்தது. ஆனுல் இந்த மாதிரி சமூகத்தில் நடப்பது சர்வசாதாரண-மாகிவிட்டது. ஒரு குடும்பம் விபசார விடுதியாகி விட்டது என்ருல் அதற்குக் காரணம் வறுமைதான் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டாம், குமார்! சொல்லித் தெரிய வேண்டாம். அவள் குடும்பமும் அப்படித்தான் சீர்கேடா-னது. சமூகம் செய்த சதி; இல்லே! பணம் படுத்திய பாடு... ஆம்... பணம் படுத்திய பாடு... உம். எப்படியோ! அவள் குடும்பம் பாழ்படுத்தப்பட்டு விட்டது, பசியின் கொடுமை யால். பசியின் கொடுமையால், மானத்தை விற்று வயிறு வளர்த்தார்கள். அதற்குக் காரணமாக இருந்தது இந்த ஒரு சாண் வயிறுதான் குமார்! இந்த ஒரு சாண் வயிறுதான். எப்படி யும் மக்கள் உயிர் வாழத்தான் விரும்புவார்களே தவிர இறக்க விரும்பமாட்டார்கள். குமார்! இறக்க விரும்ப மாட்-டார்கள் இந்நிலேதான் இங்கேயும்......குமார்! நீயும் சற்று சிந்தித்துப்பார் ...... நீயும் மனிதன்தானே......அவள் நிலே-யை நினேத்துப்பார்........இக்கதி அடைவதற்குக் காரணம் என்னவென்று சற்று யோசித்துப்பார் ... ... ... விநாயக முதலியார்......காதலித்துகட்டிய மனேவி ஒரு தாசி குலத்தில்

பிறந்தவளாம்...ஆம்! விநாயக முதலியார் மனைவி தாசி மகள் தான். ஆனால் அவள் சேற்றில் முளைத்த செந்தாமரையாக விளங்கினாள். அவள் வயிற்றிலே பிறந்த நளினாவும் அப்படித்தானே இருந்து இருக்கவேண்டும். ஆனால் இருக்க முடிந்ததா? முடியவில்லை. ஏன் முடியவில்லை? எப்படியோ படிக்க வைத்தார், ஆனால் கடைசிக் காலம் வரை படிக்க வைக்க முடியவில்லை. படிப்பு பாதியில் நின்றது. சாப்பாட்டிற்கே ததிங்கிணத்தோம் போடும்போது படிப்பு எப்படி முடியும். இந்த நிலையில்தான் இந்த ஊர் பெரிய மனிதர்கள் அவள் குடும்பத்திற்கு பண உதவி செய்தனர். (கோபம்) படித்து முடித்தாள்... வயிற்றிலே மூன்று மாதத்தோடு. இப்பொழுது விளங்கும்-அவள் படிப்பை முடிக்கக் காரணம். கஞ்சிக்குக் கதறியபொழுது கை கொடுத்தார்கள் இந்த ஊர் பெரிய மனிதர்கள். படிப்பைப் பாதியில் நிறுத்தியவளுக்கு பாதை காட்டினார்கள் இந்த ஊர் பெரிய மனிதர்கள். இன்பம் அறியாதவளுக்கு இன்பம் மூட்டினார்கள் பண்பிலே உயர்ந்த நம் ஊர் பெரிய மனிதர்கள்—ஆனால் அவள் இணங்கி அல்ல. வற்புறுத்தி. வேறு வழியில்லை. தாசிகுல சபலம் தட்டியது அவள் வாழ்வில். பிழைக்க வேண்டுமே, வயிறு தானே பிரதானம் என்று தந்தையும் மகளும் துணிந்தார்கள். அந்நிலையில் அவள் அப்படித்தான் நடக்க முடிந்திருக்கும். காதலுக்குத் துரோகம் செய்கிறோம் என்று நினைத்தாலும், பசி பசி என்று கதறும் தன் வயிற்றைக் காப்பாற்ற வேண்டுமே? வேறு வழியில்லை... வேறு வழி தென்படவில்லை... உலகத்தில் எதற்குமே ஒப்பிட முடியாத பொக்கிஷத்தை விலை கூறினாள் நளினா... மானத்தை விட்டு வாழத் தலைப்பட்டாள் நளினா... இதைத் தவிர வேறு வழி தோன்றவில்லை அவளுக்கு. அவளுடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருந்திருந்தால் தன் படிப்பையும், தனக்காகக் காத்து இருக்கும் காதலனையும் விரோதித்து அதற்கு இணங்கி இருப்பாள் என்று சற்று சிந்திக்க வேண்டுகிறேன் குமார்! சற்று சிந்திக்க வேண்டுகிறேன்.

இவளுடைய விபச்சாரத்திற்கு வறுமையின்றி வேறு எதுவாக இருக்க முடியும்? வறுமையே விபச்சாரத்திற்கு முக்கிய காரணம். சாவித்திரி, ஜான்ஸி ராணி, கண்ணகி தோன்றிய இந்த நாட்டில் விபச்சாரிகள் அன்றும், இன்றும் கற்பு, கற்பு என்று கதறும் இந்த நாட்டில் விபச்சாரிகள் பெருகி இருக்கிறார்கள் என்றால் காரணம் என்ன? குமார்! காரணம் என்ன? இந்தக் கேள்வியை யாரிடத்தில் கேட்டாலும் வறுமை, வறுமை என்ற பதிலைத் தவிர வேறு ஏதாவது தகுந்த காரணம் சொல்லத்தான் முடியுமா? நல்ல நிலையில் வாழ வேண்டுமென்று நினைத்த நளினாவுக்கு இந்த நானிலம் அளித்த தீர்ப்பு என்ன? குமார்! தீர்ப்பு என்ன? தாசி பரம்பரைதானே! இவளும் தாசியாக மாறுவதில் ஆச்சரியமில்லை என்று கூறலாம் பலர். தாசி குலத்தில் பிறந்தவள் உயர்வடையக்கூடாதா? அவளுக்கு இஷ்டமில்லாதபோது அதை மேற்கொள்ள வேண்டுமா? அவள் பரம்பரையும் இப்படி நாசமாக வேண்டுமா? சேற்றிலே முளைத்த செந்தாமரை மலர்கள் சேற்றிலேதான் சிதைந்துபோக வேண்டுமா? அவர்களுக்கு உய்ய வழியே இல்லையா? இந்த சமூகத்தைப் பார்த்துத்தான் கேட்கிறேன். வாழ்வில் வாழ் வாங்கு வாழ நினைத்தவளுக்குக் கிடைத்த பரிசு என்ன? கொஞ்சம் கூட இஷ்டமில்லாத தொழிலுக்கு மடக்கித் தள்ளப்பட்டாள்... வறுமையினால். வறுமையினால், இப்படி நளினாவைப்போல் எத்தனை பெண்களோ?

கமலா:- கெட்டு இருக்கிறார்கள். இதற்கு இன்னும் சென்ஸஸ் எடுக்கவில்லை. வறுமையின் நிலைமையால் பணத்தை அடைய ஆசைப்பட்டாள். அதற்கு வேறு வழியின்றி தன் கற்பை விலை கூறினாள். இந்தக் கைங்கரியத்தை செய்தவர்கள்......

சுந்தர்:- இந்த ஊரிலே உள்ள நல்ல மனிதர்கள் பெரிய மனிதர்கள் பண்பிலே அல்ல பணத்திலே! பக்திமான்கள் என்ற பட்டம் பகல் வேஷக்காரர்களுக்கு. தங்களூரில்

தங்கள் அம்பலம் தெரியக்கூடாது என்பதற்காக காரிகையை காரிலே கடத்திச் சென்று கற்பழித்தார்கள் நான்கு பேர். நான்கு பேர் செய்த நல்ல காரியம் நளினுவின் வயிற்றில் குழந்தையாய் மாறிவிட்டது. குமார்! அவள் உனக்கு மோசம் செய்யவில்லை, ஏமாற்றவில்லை, எந்தவிதக் கொடுமையும் செய்யவில்லை. நீயும் அதே நிலையில் பெண்ணுய் இருந்திருந்தால் அதைத்தான் செய்திருப்பாய் குமார்! அதைத்தான் செய்திருப்பாய். அவள் உன்னை அடைய எவ்வளவோ ஆசைப்பட்டாள். ஆனுல் சந்தர்ப்பமும், சமயமும் சதி செய்து விட்டது—அவளுக்கு. அவள் தன் இருதயத்தில் உனக்கு இடமளித்தாள். இதைத் தவிர அவளால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை என்றே நினைக்கிறேன். குமார்! எங்களைப் போல இன்ப புரியில் இருவரும் இருக்கவேண்டியவர்கள் தான்! மனம் ஒத்து மங்கள வாழ்வு நடத்த வேண்டியவர்கள் தான், ஆனுல் அப்படி நடத்த முடியவில்லை. ஏன்? முடியவில்லை அந்த நிலை எய்தவிடாமல் தடுத்தது எது? உங்கள் இருவர் மன நிலையுமல்ல, ஜாதி பேதமும் அல்ல, படிப்பும் அல்ல, பின் என்ன? பணம்—பணம் செய்த வேலை—ஆம் பணம் படுத்திய பாடு—இல்லை...வறுமை செய்த வேலை... வறுமை செய்த சதியைத் தவிர வேறு என்ன? குமார்! வேறு என்ன? குமார்! குமார்! (அசைக்கிருன் குமாரை, குமார் பதில் அழிக்கவில்லை) வாழ்க்கையில் ஏதாவது ஒரு செயலில் தோல்வி ஏற்பட்டு விட்டால் அதற்காக வெறுப்போ, சலிப்போ, அதிருப்தியோ, சோர்வோ, கவலையோ அடையக் கூடாது குமார்! இப்படிப்பட்ட நேரத்தில்தான் மனிதன் தன் அறிவை பயன் படுத்தவேண்டும். இல்லாது இருந்தால் உன்மத்தம் பிடித்து விடும். நீயும் அவ்வாறு இல்லாமல் மாறுபட வேண்டும். அதிலேயே மனதைச் செலுத்தி அழுந்திவிடக்கூடாது. அந்த இரும்புத்திரையை கிழித்து எறிந்து விடு குமார்! என்ன பேசாமல் இருக்கிருய்...

குமார்:- இனி என்ன பேச இருக்கிறது...வாழ்க்கையில் எதிர்பார்த்து நிகழாமல் போவதும் உண்டு, எதிர் பாராதது

நிகழ்வதும் உண்டு. ஆனால் என் வாழ்க்கையிலோ, எதிர் பார்த்ததிற்கு நேர்மாறானது நிகழ்வதே வழக்கமாகி விட்டது சுந்தர்! வழக்கமாகி விட்டது.

(திரை)

---

## காட்சி 14.

இடம்:- பார்க்கு. காலம்:- மாலை நேரம்.

தேவை:- மணி, அரசு.

(மணி தனியே உலாவுதல்)

மணி:- (தனியே) அரசுவின் நிலைமையைப் பார்த்து எனக்குத்தான் அழுகை வருகிறது. உம். என்ன பிடிவாத குணம். நல்ல பையன்தான். அதனால்தான் பயமாக இருக்கு. போக்கிரியாக இருந்தால் யார் சொன்னாலும் கேட்கமாட்டான். நல்லவர்களுக்குத் துணிச்சல் குறைவு. ஆனால் துணிச்சல் ஏற்பட்டுவிட்டால் பிறகு யாரலும் மாற்ற முடியாது. இவனை எப்படித் திருத்தவோ தெரியவில்லை. உம். (சற்று அமைதி, உலாவுதல், பெஞ்சில் இருத்தல். அரசு வருகிறான். வந்து மணியின் வாட்டத்தைப் பார்த்து)

அரசு:- ஏனப்பா இவ்வளவு கவலையாக இருக்கிறாய்?

மணி:- உன்னைப்பற்றித்தான்.

அரசு:- என்னப்பா இது. இத்தனை நாளாக இல்லாத கவலை—என்னைப்பற்றி?

மணி:- அப்படியானால், இத்தனை நாளாக உனக்குப் பகையாக இருந்தேனா? நீ கெட்டுப்போக வேண்டும் என்று இருந்தேனா?

அரசு:- இல்லை. இத்தனை நாளாக உனக்கு இவ்வளவு கவலை இல்லையே?

மணி:- இத்தனை நாளாக நான் சொன்னதெல்லாம் நீதான் கேட்கவில்லையே?

அரசு:- நான் என்ன கேட்கவில்லை?

மணி:- என்னவா? பணக்காரரின் பகை வேண்டாம் என்று சொன்னேன், நீ கேட்கவில்லை. யாராவது லஞ்சம் கொடுத்தால், இலட்சுமி கடாட்சம் என்று வாங்கிப் பையில் போட்டுக்கொள் என்று சொன்னேன்; நீ கேட்கவில்லை. நீ வாங்காவிட்டாலும், மற்றவர்கள் வாங்குவதைப்பற்றிப் பழிக்காதே என்று சொன்னேன்; நீ கேட்கவில்லை. உன்னால் உன்னையே காப்பாற்றிக்கொள்ள முடியாதபோது, ஊரில் உள்ள ஏழைகளைப்பற்றிக் கவலைப்படாதே என்று சொன்னேன். நீ கேட்கவில்லை. ஏழைகளுக்காக இரக்கத்தோடு பேசுவதே பணக்காரருக்கு ஆத்திரம் உண்டாக்கும் என்று சொன்னேன். நீ கேட்கவில்லை. வெளியூர்க் கதை எதைப் பேசினாலும் பேசு, உள்ளூர்ப் பெரிய மனிதர்களைப்பற்றிப் பேசாதே என்று சொன்னேன் நீ கேட்கவில்லை. காந்தி, புத்தர், திருவள்ளுவர் இவர்கள் புத்தகங்களைப் படித்தாலும் படி, ஆனால் அவர்கள் சொன்னபடி வாழ முயற்சி செய்யாதே என்று சொன்னேன்; நீதான் கேட்கவில்லை.

அரசு:- போதும் உன் பிரசங்கம் போகட்டும். அதனால் வருவது வரட்டும்.

மணி:- இனிமேலா வரப்போகிறது? வந்து விட்டதே!

அரசு:- யார்? அந்தப் பெரிய மனிதர்களும், ஆபீஸில் உள்ளவர்களும் சேர்ந்து ஏதாவது செய்கிறார்களா? செய்யட்டும்.

மணி:- இப்போது ஒன்றும் கவலை இல்லை. அந்தப் பெரிய மனிதர்களிடமும், சூப்பிரண்ட் இடமும் நேரில் போய்க் கேட்டுக்கொள். மறந்து விடுவார்கள்.

அரசு:- என்ன, தலையா போய்விடும்? இந்தக் கிளர்க் வேலை போய்விடும் அவ்வளவுதானே.

மணி:- நீ போனால் அந்த இடத்திற்கு நன்றாக லஞ்சம் வாங்கிறவனாக இலட்சுமி கடாட்சம் உடையவனாக ஒருவனைப் போட்டு விடுவார்கள். அப்புறம்?

அரசு:- அதற்காக பயந்து, நானே முழு அயோக்கியனாக மாறவேண்டுமா?

மணி:- அப்படிச் சொல்லாதேப்பா. லஞ்சம் வாங்குகிறவர்கள் எல்லாரையும் முழு அயோக்கியர் என்று சொல்லாதே. போர்க்களத்திற்குச் சிப்பாயாகப் போகிறவர்கள் அத்தனைப் பேரும் காந்திக்கும் ஏசுவுக்கும் புத்தருக்கும் பகைவர்கள் என்று சொல்ல முடியுமா? அவர்களிலும் அன்பு நெறியை மறக்காதவர்கள் உண்டு. காக்கி உடை அணிந்து துப்பாக்கியைக் கையில் எடுத்தாலும், பைபிளையும், கீதையையும், குறளையும் மறக்காதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். வேறு வழி இல்லாததால், வயிற்றின் கொடுமையால் சிப்பாய்கள் ஆகி யார் மேலாவது குண்டு போட்டுவிட்டுத் திரும்பி வருகிறார்கள்.

அரசு:- ஆமாம்! லஞ்சம் வாங்குகிற உத்தமர்களும் குறள் படிக்கிறார்கள், கீதை பைபிள் படிக்கிறார்கள்.

மணி:- அதுதான் உண்மை. லஞ்சம் வாங்குகிறவன் ஏன்? அப்படி நெறி தவறுகிறான் என்று எண்ணிப்பார். வேறு வழியில்லை. அவனுக்கும் மனைவி மக்கள் உண்டு; அந்த மனைவி மக்கள் நல்லபடி வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருக்கிறது. அவர்கள் வயிறார உண்ண வேண்டும் என்றும், மனமார உடுக்க வேண்டும் என்றும், இன்பமாகப் பொழுது போக்கமேண்டும் என்றும் அவன் உண்மையாக எண்ணுகிறான்; அன்போடு எண்ணுகிறான்; ஆர்வத்தோடு எண்ணுகிறான்; அதற்கு வழி என்ன? இந்தச் சமூகம் அவனை, உழைக்கச் செய்கிறது; உழைக்கிறான். ஆனால் வாழ்வுக்குப் போதுமான ஊதியம் தருகிறதா? இல்லை. ஆகையால் லஞ்சம் வாங்கிறான்.

அரசு:- அதைவிட அரைவயிறும் கால்வயிறும் உண்டு மடிந்து போகலாமே!

மணி:- அதுதான் திருவள்ளுவர் நெறி; இப்போது உள்ள உலகத்துக்குப் பயன்படாத நெறி; தற்கொலை நெறி· அது உன்னால்தான் முடியும். உடன் பிறந்த தமக்கைக்குப் பணம் அனுப்ப முடியாமல், அவள் மகனுக்குப் படிக்கப் புத்தகமும் வாங்கிக் கொடுக்காமல், சாகும் பிள்ளைக்கும் உன் பெற்றோர்களுக்கும் மருந்தும் வாங்கிக் கொடுக்காமல் காசு இல்லையே என்று கையை விரிக்க உன்னால்தான் முடியும்.

அரசு:- நீ என்னைப்பற்றி என்ன சொன்னாலும் சரி; நானும் அழிவேன்; என்னை நம்பிய சுற்றமும் அழியட்டும். ஆனால் படித்த படிப்பைக் காற்றோடு விட்டு விட்டு நெறி தவறி நடக்க என்னால் முடியாது.

மணி:- நீ போனால் போ! குடும்பம் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிற என்னைப் போன்றவர்களைக் குறை கூற உனக்கு உரிமை இல்லை, தெரியுமா? உன்னைப்போல் நானும் வாழ்ந்தால் என்ன ஆவேன், தெரியுமா? என் வயிற்றில் பிறக்கிற மக்கள் ஏழைமக்களாக இருப்பார்கள். அவர்களை நான் பி. ஏ. வரையில் படிக்கவைக்க முடியாது. படித்தாலும், அவர்கள் முதல் வகுப்பில் தேறினாலும், வேலை கிடைக்காது. கிடைத்தாலும் பெரிய வேலை கிடைக்காது. வாழ்க்கையில் உள்ளபடி எனக்கு ஆசை இருந்து, நானும் பணம் சேர்த்தால் என் மக்கள் பணக்காரக் குடும்பத்துப் பிள்ளைகளாக வளர்வார்கள்; அப்போது தான் அவர்கள் பி. ஏ. படித்தாலும் நல்லபடி வாழலாம்; படிக்காவிட்டாலும் வாழலாம். அப்போதுதான் முயற்சி இல்லாமலே பெரிய இடத்துச் சிபாரிசு கிடைக்கும். தங்கய்யாபோல் மூன்றும் வகுப்பில் தேறினாலும் பெரிய பதவி கிடைக்கும்மப்பா! கிடைக்கும்.

அரசு:- போகட்டும்; வழி வழியாக வரும் ஏழைச் சமுதாயத்துக்குத் துரோகம் செய்துவிட்டு என்னுடைய ஒரு

குடும்பம் வாழ வேண்டுமா? எனக்கு வேண்டாம் அந்த வாழ்வு.

மணி:- அரசு! எனக்கு ஒரு பெண் இருப்பதாக வைத்துக்கொள் என் நெஞ்சில் இரக்கமும் அன்பும் இருப்பதாக வைத்துக்கொள். நானும் உன்னைப்போல் வாழ்ந்தால், அந்த ஒரு பெண்ணுக்கு மூக்குத்தி வாங்கிக் கொடுக்கவும் காசு இருக்காது; கந்தலும் கரிப்புகையுமாக அவளை அடுப்பங்கரையில் வளர்க்க வேண்டும். யாராவது வந்து பெண் கேட்கமாட்டார்களா என்று நான் காத்திருக்க வேண்டும். பணத்தை நம்பும் சமூகம் பண்பை நம்பாத சமூகம் என்று அறியாமல் ஏமாந்து ஏமாந்து கடைசியில் ஒரு முரடனுக்கோ ஏழைக்கோ அந்த ஒரு பெண்ணைக் கட்டிக்கொடுக்க வேண்டும்; அவள் கதி கலங்குவதை நான் கண்ணாலே பார்க்க வேண்டும். இதுதான் நீ காட்டும் வழி; உன் திருவள்ளுவர் காட்டும் வழி; காந்தி காட்டும் வழி; புத்தர் காட்டும் வழி. இந்த சமூகம் என்ன சொல்கிறது, தெரியுமா? நீ லஞ்சம் வாங்கு, வஞ்சம் செய், எப்படியாவது பணம் சேர்த்து வை. உன் பெண்ணைப் பட்டும் பொன்னும் கலையும் காட்சியுமாக வளர்த்து விடு. உள்ளத்தில் இருள் அடர்ந்திருந்தாலும் கவலை இல்லை; உடம்பெல்லாம் வைரம் மின்ன வேண்டும். பண்பும் படிப்பும் குறைவாக இருந்தாலும் கவலை இல்லை, பகட்டான வாழ்க்கையும் பணக்காரர் என்ற பெருமையும் வேண்டும். அப்போது பார்! பட்டதாரிகள் தேடி வந்து பெண் கேட்பார்கள்; சீதேவி தானே வருவாள்; சிறப்பெல்லாம் வலிய வந்து சேரும். இப்படி வாழ்வது ஒரு குற்றமா? அரசு! அன்பும் இரக்கமும் நெஞ்சில் இருந்தால், இப்படித்தானே மக்களை வளர்க்க முடியும்.

அரசு:- போதும் உன் பேச்சு, மணி!, நீ யாரிடம் பேசுகிறாய் என்பதை எண்ணிப் பார்; இன்னும் வளர்க்காதே இரக்கமும் அன்பும் இல்லாத பாவி அல்ல நான். என் நெஞ்சில் அன்பும் இரக்கமும் உண்டு. இந்தப் பெரிய சமுதாயத்துக்குக் கேடு சூழ்ந்து என் சிறிய குடும்பத்துக்கு

மட்டும் நன்மை எண்ணுவதுதான் இரக்கமா? அதுதான் அன்பா? நாடெல்லாம் பாலையாய்ப் போகவேண்டும், என் நான்கு காணி மட்டும் நன்செயாகச் செழிக்க வேண்டும் என்று எண்ணவேண்டுமா? இந்தக் குறுகிய நோக்கத்தை அழகாகப் பேசக் கற்றுக்கொண்டாய். அதுவே போதும். போதும்மப்பா போதும். நான் வருகிறேன். வணக்கம். (போகிறான்)

மணி:- உம்! உன்னைச் சொல்லக் குற்றமில்லையப்பா! சமூகம் செய்த குற்றம். இல்லை. உன்னுடைய அறநெறி போதித்த போதனை. (சிரிப்பு)

(திரை)

---

## காட்சி 15.

இடம்:- பார்க்கு. காலம்:- மாலை நேரம்.

தேவை: செல்லம், அரசு.

(செல்லத்தின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான் அரசு. அவன் உள்ளத்திலே ஒருசமயம் கொந்தளிப்பும் ஒரு சமயம் அமைதியும் நிலவுகின்றன. கொந்தளிப்பு எழும்போது இங்கும் அங்கும் பரபரப்பாக நடக்கிறான்; தலையை அசைக்கிறான், கையை நொடிக் கிறான். அமைதி நிலவும்போது சோர்ந்து உட்காருகிறான்; தலை குனிந்து எதையோ பார்த்தபடி நிற்கிறான். செல்லம் அவனிருக்கும் இடத்திற்கு வருகிறாள்)

(பாட்டு – பின்னனி)

செல்லம்:- அரசு, என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?

அரசு:- உன் அண்ணன் சுந்தர் உனக்குக்கூறிய அறிவுரை உண்மைதான்.

செல்லம்: என்ன இது! திடீரென்று என்னவோ சொல்கிறீர்கள். (அரசு பேசாமல் அமைதியாய் இருக்கிறான். பெருமூச்சு விடுகிறான். செல்லம் அவனுடைய கையைப்பற்றிக் கொண்டு, ஒருவகைத் திகைப்புடன்) என்ன சொல்கிறீர்கள்? உங்கள் மனம் ஏன் இப்படி மாறிவிட்டது.

அரசு:- கல்லூரிப்பிள்ளைகளை நம்பவே கூடாது. உன் அண்ணன் சொன்னதைக் கேட்டு நடந்துகொள்.

செல்லம்:- அய்யய்யோ! அன்றைக்கு நான் உங்களிடம் தெரியாமல் சொல்லி விட்டேன்.

அரசு:- அல்ல அல்ல! தெரிந்துதான் சொன்னாய். உண்மையைத்தான் சொன்னாய்!

செல்லம்:- உங்கள் மனத்தைப் புண்படுத்தி விட்டேன். மன்னித்து விடுங்கள்.

அரசு:- இல்லை. நீ என் மனத்தைப் புண்படுத்தவில்லை. பண்படுத்தி விட்டாய். செல்லம்! பண்படுத்தி விட்டாய்...

செல்லம்:- ஏன் இப்படிச் சொல்லி என்னை வதைக்கி-றீர்கள்?

அரசு:- அப்படி எண்ணாதே. இன்றைக்குத்தான் நான் உண்மையைப் பேசுகிறேன் இதுவரையில் காதலின் போதையிலே இருந்துவிட்டேன்.

செல்லம்:- அய்யோ! அந்தச் சொல்லைத் தவறாகச் சொல்லி விட்டேன். தவறு செய்துவிட்டேன். மன்னிக்க வேண்டும் அரசு!

அரசு:- இல்லை! செல்லம்! தவறு அல்ல; உண்மை அதுதான்.

செல்லம்:- மறந்து விடுங்கள் அதை.

அரசு:- உண்மையை மறக்க முடியுமா? உண்மை. பெரிய உண்மை.

செல்லம்:- நான் அறிவில்லாமல் சொல்லி விட்டேன்.

அரசு:- அறிவான உண்மை; போதையில்தான் இருந்தேன். இப்போது உண்மை தெரிகிறது.

செல்லம்:- (திடுக்கிட்டு) என்ன இது? அப்படியானால் நீங்கள் என்னை மறக்கப்போகிறீர்களா? கைவிடப் போகிறீர்களா?

அரசு:- மறக்கமாட்டேன். ஆனால்—

செல்லம்:- ஏன்? இப்படி உங்கள் மனம் மாறிவிட்டது.

அரசு:- என் எதிர்காலத்தை நோக்கி.

செல்லம்:- என் எதிர்காலம்—?

அரசு:- அதற்கும் தானாக ஒரு வழி ஏற்படும்.

செல்லம்:- அப்படியானால் நம் காதல்—

அரசு:- அது ஒரு போதை—

செல்லம்:- அண்ணா அப்போதே சொன்னான்.

அரசு:- நீ அதைக் கேட்டு நடந்திருக்க வேண்டும்.

செல்லம்:- (சினத்தோடு) ஆமாம். என் தவறுதான். உங்களைப்போல உறுதி இல்லாத ஆளை நம்பியது என் தவறுதான்.

அரசு:- சொல், இன்னும் சொல். என்ன வேண்டுமானாலும் சொல்!

செல்லம்:- என்ன பயன்?

அரசு:- சொல்! செல்லம்! சொல்! சொல்ல உனக்கு உரிமை இருக்கிறது. கேட்க எனக்கு உரிமை இருக்கிறது.

செல்லம்:- (வெறுப்போடு) கடைசியில் என் வாழ்க்கை-என் எதிர்காலம்-உங்களுக்கு வேடிக்கையாக ஆய்விட்டது—.

அரசு:- இன்னும் சொல்! செல்லம்! இன்னும் சொல்!

செல்லம்:- எல்லாம் வெறுஞ் சொல்லாகி விட்டது உங்களுக்கு. (அரசு பேசவில்லை, தலைகுனிந்து நிற்கிறான்.

செல்லம் சிறிது நேரம் திகைத்து நிற்கிருள். பிறகு ஆத்திரத்-தோடு) அரசு! என்னிடம் என்ன குறை கண்டீர்கள்? படிப்பு பண்பு, அழகு இவற்றில் குறை கண்டீர்களா?

அரசு:- இவற்றில் ஒரு குறைவும் காணவில்லை...... ஆனுல்—.

செல்லம்:- அப்புறம்—.

அரசு:- படிப்பு இருந்தாலும் பண்பு இருந்தாலும் அழகு இருந்தாலும் இந்தக் காலத்தில் வாழ முடியாது. நடுத்தெருவில் நிற்க வேண்டும். ஏங்க வேண்டும். கஞ்சிக்கும் கந்தலுக்கும் போராடித் திரியவேண்டும்.

செல்லம்:- பணம் இல்லாத குறையா!

அரசு:- ஆமாம்.

செல்லம்:- அது முன்னரே தெரியாததா உங்களுக்கு? நாங்கள் ஏழைகள் என்று அப்போதே சொன்னேனே.

அரசு:- சொன்னுய். ஆனுல் அப்போது ஒருவகைக் கண்மூடித் தன்மை இருந்தது. இந்தச் சமூகத்தில் நல்லவர்கள் வாழ இடம் உண்டு என்ற அறியாமை அப்போது எனக்கு இருந்தது

செல்லம்:- இதை முதலில் சொல்லியிருக்கக்கூடாதா?

அரசு:- முதலில் எனக்கு அந்த அறிவு இல்லையே.

செல்லம்:- இப்போது மட்டும்—.

அரசு:- இப்போது ஒரு தட்டில் முப்பத்தையாயிரம் வந்து நின்றது. மற்ரெருரு தட்டில் முப்பத்தைந்து லட்சம் வந்து நின்றது அதில் நான் பெரிய தட்டைத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன்.

செல்லம்:- முப்பத்தைந்து லட்சமா?

அரசு: ஆமாம். நம்ம ஊர் பெரிய வியாபாரி. சனு, முனு, கனு, தானுவின் மகள்.

செல்லம்:- ஓ! அந்தக் குருட்டுப் பெண்ணு?

அரசு:- அப்படி இழிவாக ஒன்றும் சொல்லாதே செல்-லம்! சொல்லாதே! அவள் என் வருங்கால இல்லற மோகினி என் மனைவி. ஏன்? அவளும் உன்னைப்போல ஒரு பெண் தான். இந்த சமூகத்தில் அவளும் ஒரு பெண்தான். உண்மை-யைச் சொன்னேன். ஒத்துக்கொள்.

செல்லம்:- நீங்களுமா இப்படி?

அரசு:- நானும் மனிதன்தான்.

செல்லம்:- என்னால் நம்ப முடியவில்லையே? கனவா? எல்லாம்!...

அரசு:- நனவுதான்.

செல்லம்:- அரசு! நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? இல்லறம்-காதல்-வாழ்க்கைத்துணை—.

அரசு:- ஒரு பெண்-பல லட்சம்-மதிப்பான வாழ்வு!

செல்லம்:- பணம்-பணம்-பாழாய்ப்போன பணம்.

அரசு:- செல்லம்! உனக்கு உலகமே தெரியாது. செல்லம்! உனக்கு உலகமே தெரியாது.

செல்லம்:- ஆம்! எனக்கு உலகம் தெரியாது. அரசு! பணக்காரக் குடும்பங்களில் பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும், அவர்களுக்குப் பணம்தான் முக்கியம். மற்றதையெல்லாம் கொஞ்ச நாளில் மறந்து விடுவார்கள். அவர்களிலும் நல்லவர்கள் உண்டு, இல்லை என்று சொல்ல வில்லை. ஆனால் அந்த நல்ல பண்பு, நல்ல கொள்கை, நல்ல குறிக்கோள் எல்லாம் கொஞ்ச நாள் நிற்கும்; பிறகு பணம் ஒன்றுதான் வெற்றிபெறும்.

அரசு:- எனக்கு எதைப்பற்றியுமே இனி கவலை இல்லை.

செல்லம்:- கவலைப்படாமலே இரு அரசு! கவலைப்படா-மலே இரு. எனக்குக் கவலை இல்லை. ஆனால்... அரசு! நம்மைப்போல் ஏழைகளுக்குத்தான் பண்பு, கொள்கை, குறிக்கோள் எல்லாம். மானத்துக்காக உயிரை விடுவதும் இந்தக் குடும்பங்களில்தான். எல்லாப் பைத்தியக்காரத்

தன்மையும் நம்மைப் போன்றவர்களுக்குத்தான். பணக்காரர்களுக்கு வாழ்க்கை ஒன்றுதான் வேண்டும். வாழ்க்கைக்காக மற்ற எல்லாவற்றையும் தேவைக்குத் தகுந்தாற் போல் மாற்றிக்கொள்வார்கள். காதல் பொல்லாதது என்று நாம் நினைப்போம். ஆனால் அவர்களுக்குக் காதலும் காசுக்குத்தான். விலை கொடுத்து வாங்கக்கூடிய சரக்குத்தான். காதல் கடவுள் எல்லாம் அவர்களுக்கு அப்படித்தான். இன்று அவர்கள் உன் கண்களுக்கு நல்லவர்களாக இருக்கலாம். அன்பு உடையவர்களாக இருக்கலாம், உறுதி உடையவர்களாக இருக்கலாம்—ஆனால், பணம் பண்படுத்திவிடும். அவர்கள் மட்டும் அல்ல. பணம் வந்து சேர்ந்துவிட்டால் நீயும் அப்படித்தான், நானும் அப்படித்தான். யாருமே அப்படித்தான். அரசு! அப்படிப்பட்ட வாழ்வு வேண்டாம். பணத்திற்காக—பாழும் பணத்திற்காக—உன் வாழ்வை......

அரசு:- செல்லம்! இல்லறத்தைப் பொறுத்தவரையில் என் வாழ்க்கை பாழ்தான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால், என் எதிர்காலம், நல்ல மதிப்பு, மாடி வீடு, கவலையற்ற ஆடம்பர வாழ்க்கை, களியாட்டம், கார், உயர்ந்த ஆடை, சிறந்த உணவு, நினைத்தபடி வாழும் உரிமை, சமூகம் அடங்கி நடக்கும் பெருமை.

செல்லம்:- ஆனால்—.

அரசு:- அழகற்ற மனைவி என்றுதானே சொல்கிறாய். எத்தனையோ பெறுகின்றேன்; ஒன்றை இழக்கின்றேன். அந்த ஒரு துறையில் என்னை நானே அழித்துக்கொள்கின்றேன்; மற்றப் பல துறைகளில் புத்துயிர் பெறுகின்றேன். ஒரே ஒரு வகையில் பெரும் ஏமாற்றம்; பலவகையில் எக்காளம்.

செல்லம்:- ஏன்? இப்படி வேண்டும் என்றே, தெரிந்துமா—?

அரசு:- அதுதான் நான் செய்யும் தியாகம்!

செல்லம்:- (வருத்தத்துடன்) தியாகம்! தியாகமா இது! கொலை, தற்கொலை! என் வாழ்வுக்குக் கொலை. உங்கள் வாழ்வுக்குத் தற்கொலை.

அரசு:- அப்புறம்—?

செல்லம்:- இந்தச் சமுதாயம் பாழாய்ப் போகாதா? பணம்! பணம்! பணம் என்று அழும் இந்தத் தலைமுறை எரிந்து சாம்பலாகாதா? ஏழைகளின் கண்ணீர், ஏழைகளின் வேதனை, ஏழைகளின் கொதிப்பு, இந்தச் சமுதாயத்தை அடியோடு அழிக்காதா?

அரசு:- சமூக அமைப்பு அப்படி இருக்கிறது? அதற்கு நான் என்ன செய்வேன்?

செல்லம்;- நீங்களா? என்ன செய்வதா? என்னைப் போன்றவர்களின் கண்ணீரைப் பெருக்குங்கள். எங்கள் வேதனையை வளருங்கள். எங்கள் கொதிப்பைத் தூண்டுங்கள் பண வேட்டை ஆடும் இந்தப் பாழும் சமுதாயம் அப்போது தான் அழியும். அழிந்து பாழாகும்.

அரசு:- கொடு சாபம்; நன்ருகக் கொடு. ஆனல், எனக்கு அல்ல—என்னை இப்படி ஆக்கிய சமூகத்துக்கு— என்னைப் படைத்த—.

செல்லம்:- உனக்கு அல்ல! நீ என்ன செய்வாய்! நீ ஒரு துரும்பு. வெள்ளம் ஓடுகிறது. நீயும் ஓடுகிருய். மிதந்து ஓடப் பார்க்கிருய். ஆழ்ந்து போகாமல் மிதக்கப் பார்க்கிருய். உன்னைப் பழித்துப் பயன் என்ன? உன்னைப் போன்றவர்களின் மனம் கெடுவதற்குக் காரணமான சமுதாய அமைப்பைப் பழிக்கிறேன். அதற்குச் சாபம் கொடுக்கிறேன். என் ஒருத்தி சாபம் மட்டும் அல்ல; பெண்ணுலகத்தின் சாபம் முழுதும் அதற்குத்தான். நடிப்பையும் நம்பிக்கையும் கண்டு ஏமாந்து ஏங்கும் பெண்ணுலகம், அதைக் கண்ணிர் விட்டு அழிக்கும் காலம் வரப்போகிறது. வரட்டும். இந்தத் தலைமுறை பொசுங்கட்டும், போகட்டும். அடுத்த தலைமுறை-யாவது வாழ வழி பிறக்கட்டும். பணம்-பண வேட்டை—

பாழும் நாகரிகம் (செல்லம் வேறு திக்கைப் பார்த்து பேசிக் கொண்டு இருக்க, அரசு சொல்லாமல் போய்விடுகிறுன். செல்லம் பார்க்கவில்லை. பெருமூச்சு விட்டு) பண்பு–ஏட்டிலே பண்பு, ஏய்ப்பிலே பண்பு, மேடையிலே, வெறும் பேச்சிலே பண்பு, வாழ்விலே-பணம்-பண வேட்டை-பாழும் நாகரிகம்- (திரும்பிப் பார்த்து) அரசு! ஆ! ஒரு வார்த்தைகூட சொல்லாமல் போய் விட்டாய்! உம். உன்னை நொந்துகொள்வதில் இனி எனக்குப் பயனில்லை. என்னை ... உம் ... இனி எங்கே ஏற்றுக் கொள்ளப் போகிறுன் செடியில் மலர்ந்த மலர் கொய்வாரின்றி செடியின் அடியிலே வீழ்ந்து வாடிவிடுதைப்போல், நானும் தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான். இனி எனக்கு வேறு வழி தென்படவில்லை. காதல் கைகூடா விட்டால் சாதல்! ஆம்! நம் பாரதிகூட காதல்! காதல்! காதல்! இன்றேல் சாதல்! சாதல்! சாதல் என்று கூறியுள்ளார். ஆஹா என்ன அழகாகச் சொல்லியிருக்கிறுர். பாரதி! உன் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். அரசு! உனக்கு இனி நான் எந்தக் காலமும் இடஞ்சலாக இருக்க மாட்டேன் நான் உயிருடன் இருந்தால்தானே உனக்கு கஷ்டம். எனக்கு ஒரு துளிவிஷம் அல்லது ஒரு முளக் கயிறு போதும். அரசு! நீயாவது சந்தோஷமாக வாழ்ந்தால் சரிதான்.

(திரை)

## காட்சி 16.

இடம்:- பைத்திய ஆஸ்பத்திரி. காலம்:- இரவு நேரம்.

தேவை:- குமார், அரசு.

(அரசு, குமார் பக்கத்துப் பக்கத்துப் படுக்கை. இருந்து கொண்டு புலம்பல்)

குமார்: (படுத்தபடி) நளினு! நளினு..... (எழுந்து) நளினு! நளினு!......

அரசு:- (எழுந்து) என்னப்பா! எப்போ பார்த்தாலும் நளினு! நளினு! என்று உனக்கு அந்தப் பெயரின்மேல் ஏன்? அவ்வளவு பிரியம்...என் செல்லத்தைப்போல்... செல்லம்!... நீ அழகா நளினு அழகா?

குமார்:- நளினு!... ஆஹா! அழகான பெயர்... உம். அற்புதமான பெயர்.

அரசு:- அது மட்டுமா! கட்டழகி, பெண்ணரசி, பெண் இனத்திற்கே ஒரு கலங்கரை விளக்கும். அழகு என்ற பதமே செல்லம்!

குமார்:- ஹும்! நளினு பிறந்த பிறகுதான் உண்டாகி இருக்கவேண்டும். நளினு! நீ கலையின் சிகரம்! கற்பனையின் ஊற்று! இல்லை...இல்லை...

அரசு:- இல்லை இல்லை...கவர்ச்சியின் கண்ணுடி!

குமார்:- ஆம்! கலையே நளினு! நளினுவே கலை.

அரசு:- எழில் மிக்க உயிரோவியம் என் செல்லம்!

குமார்:- அதைவிட என் நளினு... ஆஹா நளினு! நளினு!! நளினு!!!

அரசு:- நல்ல பைத்தியம் பிரதர் நீங்கள்!... பாவம்... உலகம் தெரியாதவர்.

குமார்:- எனக்கா உலகம் தெரியாது.. எனக்கு இந்த சமூகமே தெரியுமே... எனக்கு நன்ருகத் தெரியும்... உலகம்! உலகம் உருண்டை என்று... அடே! அவள் கடைக்கண் வீச்சுலே, அகப்பட்டு ஊசலாடிய உள்ளம்... என்ன உள்ளம்...

அரசு:- ஊசலாடிய உள்ளம்... அடே! ஆண்மையே அற்ற அலிகள் உள்ளங்கூட ஆடும் அவளின் அழகைப் பார்த்து...எதைப் பார்த்து...அழகைப் பார்த்துன்ன...

குமார்:- ஏன்? அவள் ஆடை அணிவதைப் பார்த்து அந்த ஆண்டவன் உள்ளத்தையே ஒரு கை பார்த்துவிடும் என்றால், அவன் படைத்த இந்த மானிடன் மனம் என்ன பாடு படும்...எது? படும்...

அரசு:- இந்த மானிடனின் மனம் என்ன பாடு படும். அடே அவள் என்ன அவ்வளவு அழகா!

குமார்:- ஆம்! அழகிதான் என்று வாயால் சொன்னால் போதுமா?

அரசு:- உம்... காணக் கண் கோடி வேண்டுமோ!

குமார்:- வேண்டும்! கட்டழகு அவளுக்குப் பிறவி தந்த அரும்பெரும் பரிசு! அழகோடு நின்றுவிடவில்லை.

அரசு:- பின்னே? வசீகரமும் கலந்திருந்ததோ?

குமார்:- அவள் எழில் முகத்தில் பத்தரை மாற்று பசும் பொன், அவள் நிறத்திற்கு ஈடு சொல்ல முடியுமோ? என்னமோ? நீலவான் ஆடைக்குள்ளே, உடல் மறைந்து நிலாவெனக் காட்டும் அவள் ஒளிமுகம், உண்மையிலேயே நிலவைக்கூட பழித்துவிடும் போலிருந்தது.

அரசு:- அம்மாடி...அப்படியா! உம்...அப்புறம்...

குமார்:- அலைபோன்ற அவளது கருங்குழல், கரும் மேகத்தைப் போன்றிருக்கிறது. கடல் போன்ற அவள் கண்கள் இரண்டும் இரு கமலங்கள். அதிலேதான் எத்தனை பேச்சு. சிரிப்பை அள்ளித் தெளிக்கும் சிவந்த வதனம். அதிலேதான் எத்தனை வர்ண ஜாலங்கள்! வானவில்லைப் போல! முல்லைப் பற்கள். அதிலே முத்துப் பிறக்கும். வாய் விட்டுச் சிரித்தால் இந்த வையகமே அதிரும். யாழினும், குழலினும், குயிலினும் இனியது அவள் பேச்சு. சுருங்கச் சொல்லின் நளின ஒரு கட்டழகி...அழகில் கண்ணாடி...அவளுக்கு ஈடு அவளேதான்! என்று சொல்லத் தயங்காது இந்த சமூகம். பூலோக ரம்பை!

அரசு:- பூலோக ரம்பையா! எங்கே! எங்கே!

குமார்:- இன்று ஆயிரமாயிரம் இளைஞர்களையெல்லாம்!...

அரசு:- என்ன?

குமார்:- உம். பெரிய மனிதர்களைக்கூட ஆட்டிப் படைக்கிறது அவள் அழகு.

அரசு:- அப்படியா? உம்ஹூம். அப்படியென்றால் படித்தோர், பட்டம் பெற்றோர், பள்ளியிலே பயில்வோர், பாராளும் மன்றத்திலே வீற்றிருப்போர், நிதி படைத்தோர், நிதியோடும் மதி படைத்தோரும், பரமனைப் பாடுவோரும்—அவள் கழல் தேடுவோரும்...

குமார்:- நளினாவின் கடைக்கண்ணிலே, பிறக்கும் கருணைக்காக.

அரசு:- காத்திருப்பார்கள் என்று சொல்லு.

குமார்:- அடே! முட்டாளே! அது மட்டுமா! அவளுடன் பேசினாலே அது ஒரு பாக்கியமென்று கருதுவர்... அவளுடன் கைகோர்த்துச் சென்றாலே, அதிலே ஓர் ஆனந்தம், அருகிலே அமர்ந்துவிட்டால் அதிலேதான் எத்தனை மகிழ்ச்சி! அவளை மணந்துகொண்டாலோ? அடடா! பிறந்ததின் பயனை அன்றே அடைந்தவன் ஆவேன் என்று கருதுவார்களடா? கருதுவார்கள். நளினா! என் நளினா! நளினா! நளினா!

அரசு:- அடே முட்டாள்! அதற்காக எப்போ பார்த்தாலும் நளினா! நளினா! என்ற புலம்பல்தானா?

குமார்:- ஆம்! என் உள்ளம் அலம்பி இருக்கிறது. குடம் அலம்பாமல் நீர் சிதறுமா? பகல் பூராவும் நளினாவின் நினைப்பு... பின்பு கற்பனையின் இணைப்பு... இரவு பூராவும் கனவு... பகல் பூராவும் புலம்பல் ஏன்? எப்பொழுதுமே புலம்பல் நளினா! நளினா!... ‘‘வான் மழையின்றி வாடிடும் பயிர்போல் நான் உன்னை நினைந்தே வாடுகிறேனே !’’ (சிரிப்பு)

அரசு:- ஏது? நமக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே...

குமார்:- ஆம்! பைத்தியம்தான்! பயித்தியம் என்ருல் கேவலமா? ஒன்றின்மீது மனதை லயிக்கவிட்டு மற்ற எல்லாவற்றையும் மறப்பதற்குப் பெயர் பயித்தியம்.

அரசு:- மனதை எதிலுமே லயிக்கவிடாமல் எல்லாவற்றையும் மறப்பதற்குப் பெயர் தூக்கம்.

குமார்:- பயித்தியமும் தூக்கமும் ஒன்று சேராத நேர் கோடுகள். இரண்டிற்கும் இவ்வளவு ஒற்றுமை இருந்தும் பயித்தியக்கார சமூகம் தூக்கத்தை வரவேற்கிறது பயித்தியத்தை வெறுக்கிறது முற்றுப்புள்ளி இல்லாத எல்லையற்ற புற்றுதலின் அறிகுறிதானே பயித்தியம்.

அரசு:- ஆம் ஆம்! பிறகு நம்மை ஊரில் பயித்தியக்காரர்கள் என்பார்கள்.

குமார்:- ஊரைப் பற்றியோ, சமூகத்தைப் பற்றியோ, சுற்றி இருப்போரைப் பற்றியோ, இனி நான் கவலைப்படப் போவதில்லை.

அரசு:- கவலைப்பட வேண்டாம். ஆனுல் என்னை மறந்துவிடாதேயப்பா! விடாதே அடே நேரம் ஆகிவிட்டது. சாப்பிடு.

குமார்:- நளினு! நளினு!...

அரசு:- நளினு கிடைப்பாள்... சாப்பிட்டு விட்டு தூங்கு.

குமார்:- கிடைப்பாளா! உம்... அடே! எனக்குத் தூக்கத்தை தர மறுக்கும் இரவு ஏன் வருகிறது?

அரசு:- அதைத்தானே நானும் கேட்கிறேன். செல்லம்! உனக்குத் தெரியுமா?

குமார்:- நளினு! நாட்டில் பஞ்சமாம்? மக்கள் பசியால் வாடுகிருர்களாம். ஆனுல் எனக்கு பசியே எடுப்பதில்லை.

உள்ளத்தில் காதல் இருந்தால் பசியே இருக்காதுபோல் தெரிகிறது.

அரசு:- ஆமா! ஆமா! எனக்கும் பசியே இல்லை!

குமார்:- நாட்டில் உள்ள பசித்த மக்களுக்குக்கெல்லாம் இப்படி ஒரு காதல் தோன்றிவிட்டால் பசியே இருக்காது.

அரசு:- பிறகு ரேஸன் கவலையும் இராது.

குமார்:- உணவை உற்பத்தி செய்! உணவை உற்பத்தி செய் என்று இன்று உயிர் போகக் கத்தும் அரசாங்கம் காதலை உற்பத்தி செய்தால்...

அரசு:- கட்டாயம் பஞ்சம் நீங்கிவிடும் என்று நான் நினைக்கிறேன்.

குமார்:- என் அபிப்பிராயம் எப்படி? சரிதானே...... என்னடா?...காதல்! காதல்! ஆஹா...நளினு! நளினு! நம் காதல்...

அரசு:- அடே! காதல் என்ருல் உங்கள் வீட்டுக் கிள்ளிக் கீரையா?

குமார்:- காதல் என்ன கடைத்தெருச் சரக்கா? கண்ட்-ரோல் விதிக்க!

அரசு:- அப்பா! உன் காதல் "லைலா—மஜ்னு" மாதிரி முடிவடையாமல் பயங்கரமாக...ஆமா...போய் விடாமல்...

குமார்:- காதல் பயங்கரமானதுதான். ஆனல், அதற்காகப் பயப்படுவதா? அம்பிகாபதியும், அமராவதியும் அழியாத காதற் களஞ்சியங்கள். அவர்கள் முடிவு சாதல் என்ருலும், ரோமியோ—ஜூலியத் இவர்களின் முடிவும் சாதல் என்ருலும், அவர்களுடைய காதலின் சாதலில் சந்தோஷமிருந்தது. ஆனல், நான் நரகவேதனைப் படுகிறேன்.

அரசு:- ஆம்! வீண் பயம் வேண்டாம். பொறுமையே உருவெடுத்த நமக்குச் சமூகத்தில் எதிரிகள் இருக்கத்தான் செய்வார்கள். அதற்காக அஞ்சுவதா! வேண்டாமட! வேண்டாம்.

குமார்:- எதிரிகள்...ஆம்...என் வாழ்வையே கெடுத்த எதிரிகள்... இந்த ஊர் பெரிய மனிதர்கள். நளினா! நீ கெடுவதற்குக் காரணம் அவர்கள்தான்! நளினா! நீ இன்று ஒரு கர்ப்பிணி! அதற்குக் காரணம் அவர்கள்தான். நளினா! நீ இன்று ஒரு கர்ப்பிணி... ஐயோ! நளினா... நீ ஒரு கர்ப்பிணி!... நளினா! நீ என்னிடம் கூறியதெல்லாம் எங்கே? மறந்து விட்டாயா? மானத்தோடு வாழ்வேன் இல்லை ஒரு முழக்கயிற்றிலே தொங்குவேன் என்றாயே எங்கே தொங்கினாய்? ஏன்? ஒரு முழக்கயிறு கிடைக்கவில்லையா உனக்கு? இந்தச் சமூகத்தில் ஒரு முழக்கயிற்றுக்கும் பஞ்சமா?

அரசு:- அப்பா! வேண்டாம்! வேண்டாமப்பா! வேண்டாம்... அந்த ஒரு முழக்கயிறு. என் காதலி செல்லம் அந்தக் கயிற்றிலே தொங்கி விட்டாள்... ஐயோ! செல்லம்! நீ இறந்து விட்டாயே! இந்தப் பாவியை மன்னித்து விடு செல்லம்! மன்னித்து விடு... செல்லம்! செல்லம்... செல்லம் மன்னித்து விடு செல்லம்! செல்லம்! (அரசு செல்லம்! செல்லம்! என்று புலம்புதல்)

குமார்:- செல்லம்! மானத்தோடு வாழ்ந்து விட்டாள்! ஆனால்! நளினா! உன் மானம் எங்கே!...தெருவிலே!...வலை வீசி என்னை வஞ்சித்து விட்டாள். இல்லை இல்லை... அவள் மேல் குற்றமில்லை... வயிறு படுத்திய பாடு... ஆம்... வறுமை செய்த சதி... இல்லை பணம் படுத்திய பாடு... ஆம் பணம் படுத்திய பாடு...நளினா! நீ ஒரு கர்ப்பிணி....ஆம் மூன்றுமாதக் கர்ப்பிணி... நளினா! நீ ஒரு கர்ப்பிணி ஐயோ! நளினா! நளினா!

(திரை)

## காட்சி 17.

இடம்:- கலியாண மண்டபம். காலம்:- காலை நேரம்.

தேவை:- சுந்தர், கமலா, ராஜேந்திரம் பிள்ளை, மணி மற்றும் பலர்.

(சுந்திரத்திற்கும் கமலாவிற்கும் கலியாணம். மாலை மாற்றுதலை வெண்திரையில் நிழலில் காட்டுதல்; மாலை மாற்றிய பிறகு அங்கேயே, மறைவிலேயே சுந்தர் பேசுதல்)

சுந்தர்:- தோழர்களே! இந்நாள் என் வாழ்க்கையின் பொன்னுள் ஆகும். இப்பொன்னுளில் நான் வருந்தும்படியான நிலை ஏற்பட்டுவிட்டது காரணம்! என் உயிர் நண்பன் குமார்! என் மனைவி கமலாவின் அண்ணன்! இன்று பையித்திய ஆஸ்பத்திரியில் இருக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது. அதோடு என் தங்கை செல்லம் தற்கொலை செய்து கொண்டாள். அதை நினைத்தால் என் உள்ளம் மிகவும் வேதனை அடைகிறது. செல்லம் பிச்சைக்காரியாக இருந்தவள்தான். ஆனுல் என் அப்பா! அவளைத் தனக்கு ஒருபெண் குழந்தை இல்லையே என்று எடுத்து ஆதரித்தார். நானும் அவளைத் தங்கையாகவே மதித்துப் பழகி வந்தேன். அவள் கதி இப்படி ஆகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அவள் காதலன் அரசு என்பவனும் குமாருடன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிருர். இதையெல்லாம் நினைத்தால் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அதிகமாகப் பேசி எல்லோர் மனதையும் வருத்தமடையச் செய்ய விரும்பவில்லை இந்தப் பொன்னுன நாளில்.

(திரை)

காட்சி 18.

இடம்:- தெரு. காலம்.- பகல் நேரம்.

தேவை:- மணி, சுந்தர்.

(மணி! மிகவும சோகமான உருவத்தில் தோன்றுதல்)

மணி:- குமார்! பைத்தியமாவதற்குக் காரணம் இந்த ஊர் பெரிய மனிதர்கள் செய்த சதி. அரசு! நீ பைத்திய

மாவதற்குக் காரணம். இந்தப் பாவிதான்! அரசு! இந்தப் பாவிதான். ஐயோ! என்னால் அல்லவா? செல்லத்தைக் கைவிட்டான். ஐயோ! செல்லம் இறக்கும்படி செய்த சதிகாரன் நான்தான், ஐயோ! அரசுவின் பெற்றோர்கள் விரும்பியதைச் செய்ததிற்குக் கிடைத்த பலன்—அரசு பைத்தியம்! செல்லம் தற்கொலை. ஐயோ! நினைக்கவும் பயமாக இருக்கிறதே! கெட்ட எண்ணத்தால் கெடுக்கவில்லை. ஆனால் நல்ல எண்ணத்தாலும் கெடுக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டேனே பாவி. நான் விளங்குவேனா? அவர்கள் வாழ்வைக் கெடுத்த நான் ஏன்? உயிருடன் இருக்க வேண்டும். இந்தப் பாவி இந்த சமூகத்தில் வாழக்கூடாது. ஆம் இறக்கத்தான் வேண்டும். (சுந்தர் வருதல்) ஒரு முழக்கயிறு அல்லது ஒரு துளி விஷம் போதும்—என் வாழ்வை முடித்துக் கொள்ள. அரசு! உன் வாழ்வைக் கெடுத்த பாவி இனி வாழக்கூடாது. செல்லம்! உன் உயிருக்கு எமனாக வந்த எமன் இதோ வருகிறேன். (குமார் போதல், சுந்தர் தடுத்து)

சுந்தர்:- மணி! நீ வருந்துவதெல்லாம் சரி! ஆனால் உன் முடிவு பயங்கரமானது. என் தங்கைதான் கோழைத்தனமாகத் தற்கொலை செய்து கொண்டாலும், படித்த நீ, எல்லாம் தெரிந்த நீ, இப்படிக் கோழைத்தனமாக முடிவு கட்டுகிறாயே! உன்னை நான் என்ன சொல்ல!

மணி:- அரசுவின் வாழ்வைக் கெடுத்த இந்தப் பாவி, செல்லத்தின் உயிரைக் குடித்த இந்தப் பாவி, வாழக்கூடாது சுந்தர்! வாழக்கூடாது. சுந்தர்! என்னைத் தடுக்காதே! நான் இறக்கத்தான் வேண்டும். செல்லத்தின் வாழ்வைக் கெடுத்த இந்தப் பாவி இறக்கத்தான் வேண்டும் சுந்தர்! இறக்கத்தான் வேண்டும்.

சுந்தர்:- இல்லை மணி இல்லை. நீ வாழத்தான் வேண்டும். நீ வாழப் பிறந்தவன், மணி! என் தங்கை தற்கொலை செய்து கொண்டாள் என்றால் அது அவளுடைய கோழைத் தன்மையைத் தவிர வேறு என்ன? அதற்கு நீ எப்படிப்

பொறுப்பு ஆவாய்! அவள் மனேவலிமை அவ்வளவுதான். அரசு! பைத்தியமாக இருக்கிருன் என்ருல் எப்பொழுதுமா அப்படி இருப்பான். என்று அவன் குணமடைந்து வருகிருனே அன்று அவன் திரும்பவும் அவள் நினைப்பால் பைத்தியம் ஆகாமல் திருத்த வேண்டியது உன் கடமை அல்லவா? அவன் குணமடைந்து வந்த பிறகு, நீ அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அதுவரை நீ வாழத்தான் வேண்டும் மணி! நீ வாழத்தான் வேண்டும்.

மணி:- ஆம்! அவனிடம் நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பாவியின் மனம் சற்ருவது நிம்மதி அடையும். ஆம்! சற்ருவது நிம்மதி அடையும்.

சுந்தர்: ஆம்! அதுதான் சரியான முடிவு. மணி! நீ வாழ வேண்டிய அவசியத்தை இனியாவது அறிந்துகொள். மணி! இனியும் முட்டாள்த் தனமாக நடந்துகொள்ளாதே! வா மணி! அரசையும், குமாரையும் பார்த்து வரலாம். வா... போகலாம்...

(திரை)

---

## காட்சி 19.

இடம்:- பேச்சு மேடை. காலம்:- மாலே நேரம்.

தேவை:- சுந்தர், கமலா, ராஜேந்திரம், மணி.

(சுந்தர் மாலேயுடனே காட்டுதல்)

சுந்தர்:- (மாலேயைக் கழுத்திலிருந்து எடுத்தவாறு) மக்களே! வாழ்க்கை வாழ்வதற்கே என்று சொல்லுவார்கள். ஆம்! இல்லேயென்று சொல்லவில்லே. வாழ்க்கை வாழ்வதற்குத்தான். ஆனல், வாழ்க்கையின் வாய்ப்பு இன்று சிலருக்குப் பிறப்பால்தானே அமைகிறது. வேறு சிலருக்கு எதிர்

பாராத விபத்துப்போல் குருட்டுத் திசையாகக் கிடைக்கிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருக்கு விடாமுயற்சி யின் பயனாக ஒருவேளை கிடைத்தாலும் கிடைக்கிறது. பெரும்பாலோரின் கதை என்ன? பிறக்கும்போது நல்ல உடம்போடுதான் பிறக்கிறார்கள். ஆனால் திறமை பெறுவ-தற்கு வாய்ப்பு இல்லை; திறமை பெற்ற பிறகும் திறமை யைக் காட்ட வாய்ப்பு இல்லை; திறமையைப் புலப்படுத்திய பிறகும் அதைப் பயன்படுத்த வாய்ப்பு இல்லை; திறமையைப் பயன்படுத்திய பிறகும் வாழ்வதற்கு வாய்ப்பு இல்லை. இந்த நிலைமை வர வர மிகக் கெட்டு வருகிறது. மக்களே! வாழ் வாங்கு வாழ வேண்டும், கொடுமை இல்லாமல் வாழ வேண்டும்! காற்று, மழை, பனி, குளிர், கதிரவன் சுடர், நிலவொளி, நீலக்கடல், பசி, தாகம், தூக்கம், சுகம் ஆகிய-வைகள் பொதுவாக இருப்பதைப்போல், உழைப்பு, ஊதி-யம், வாழ்வு, வசதி, வளம் எல்லாம் எல்லாருக்கும் பொது வாக வேண்டும் என்பதே நம் லட்சியமும் கடமையும் ஆக வேண்டும். வீரப் பழங்குடி மக்களே! கடமையே நமது உடமை, நன்மையே நமது வன்மை, மானமே நமது கானம், உரிமையே நமது வாழ்வு, உண்மைக்காக உழைப்போம், சமூகத்தின் செம்மைக்காகப் பாடுபடுவோம். ஆனால் பாடு படாது பங்கெடுக்கும் பாதகர்கள், உழைக்காது பிழைக்கும் உன்மத்தர்கள், ஏழைகளை கோழைகளாக மதிக்கும்—இறு-மாப்பாளர்கள், ஊரை ஏய்த்து வாழும் உலுத்தர்கள். பகற் கொள்ளையிடும் பழிகாரர்கள், பிறப்பில் உயர்வு பேசும் பேதைகள், செருக்கினால் தழுக்கித் திரியும்—தான்தோன்றி கள்—இவர்களைப் பற்றியும்—நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்டப் பட்டப்பகலில் மூட்டை தூக்குவோன், வண்டி இழுப்போன், கல் உடைப்போன், மரம் அறுப்-போன், மண் வெட்டுவோன் —சேற்றிலே நின்று சிதையும் உழவன், சுரங்கம் தோண்டும் தொழிலாளி—இவர்களைப் பற்றியும்கூட கவலை இல்லையென்று சர்க்கார் சொன்னாலும், இருக்க இடமின்றி, நிற்க நிழலின்றி, படுக்கப் பாயின்றி,

கட்டக் கந்தையின்றி, குடிக்கக் கூழின்றி, தன்னிலைபற்றி நினைக்க நேரமின்றி அலைந்து திரியும் பிச்சைக்காரர்களுக்காவது உதவி செய்ததா? சர்க்கார். ஹூம். சர்க்கார் தங்கள் சர்வாதிகாரம் சரிந்து விடுமோ என்ற சஞ்சலத்தால் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதனை எத்தனை காலத்திற்குச் சகித்துக்கொண்டு இருக்க முடியும்? சிந்தித்து ஒரு வழி காணுங்கள் தோழர்களே! சிந்தித்து ஒரு வழி காணுங்கள். நம்மை சிறுமைப் படுத்தும் அவர்கள், அதிகார போதையில் ஆழ்ந்திருக்கிறார்கள். பாவம்! போதை வெறி, புத்தியை அவர்கள் வசத்தில் வைத்திருக்காது. முன்னுக்குப் பின் முரணாகப் பேசச் செய்யும், சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பு இருக்காது. அடக்கு முறையால் நம்மளின் ஆர்வத்தை அடக்கவோ? நசுக்கவோ? அவர்களால் முடியாது? மக்களின் உரிமைக் குரல் கேளா மந்தச் செவியாக இருக்கும் ஆளவந்தாரை எச்சரிக்கிறோம்? மேலும் கடமைக்காகத்தான் சட்டமும் அரசாங்கமும்! அரசாங்கம்! இப்பொழுது கையாண்டு வரும் கெட்ட கொள்கைகளை விட்டு, நல் வழிப் படாவிட்டால், அரசாங்கத்தையே! சீர்திருத்துவோம்! அதுவே இனி நம் லட்சியம் எது எப்படி ஆனாலும் ஆகட்டும் மக்கள் எல்லோரும் சந்தோஷமாக வாழ வேண்டும். அதே நம் குறிக்கோள். நம் குறிக்கோளுக்கு குறுக்கே யார் வந்தாலும்சரி எதிர்ப்போம்! நம்மைச்சிறையில் தள்ளினாலும், சிந்தனையை சீர்குலைத்தாலும், கையில் விலங்கிட்டாலும், உள்ளத்தை, உடலை வருத்தினாலும் அக்கரை இல்லை. எதிரிகள் என்ன செய்தாலும் நம்மளின் உணர்ச்சியை, மனக் கிளர்ச்சியை, யாராலும் அடக்க முடியாது என்பதை நிரூபித்துக் காட்டுங்கள்... திறமையற்றவர்கள் ஆகிவிடாதீர்கள் இந்தக் காரியத்தில். இன்றைக்கு ஆடம்பரமாக வாழ்வோர் அத்தனை பேருக்கும் திறமை நிறைந்திருக்கிறதா? திறமை இல்லாதபோதும் அவர்களுக்கு வாழ்க்கைக்கு உரிய வாய்ப்பு இருக்கிறதே! நன்றாக வாழ்பவரின் வாழ்வைப்பற்றிச் சொல்லவில்லை. வாழ வாய்ப்பே இல்லாதவர்களுக்கு வாய்ப்-

புத்தரச் சொல்கின்றேன். ஏ! எண்ண உலகமே! நம் எண்ணமே இனி உலகம்! உள்ளம் திருந்தின் உலகம் திருந்தும்; மனம் போல வாழ்வு. கருத்துக்களே! ஆற்றல் மிக்க படைக்கலங்கள். இவ்வாறு பேசுவன எல்லாம் வெறும் பேச்சுக்கள் என்று எண்ணிவிடக் கூடாது. உண்மை என நம்பினால் தான், திருந்திய முறையில், திருந்திய சமூகம் அமையும். இத்துடன் முடிக்கிறேன். வணக்கம்! (கை தட்டல்)

(திரை)

## காட்சி 20.

இடம்:- பூங்கா. காலம்:- மாலை நேரம்.

தேவை:- சுந்தர், கமலா.

(வெண் திரையில் நிழலில் உருவங்கள் காட்டுதல்)

(வாய் அசைத்து பாடுதல், பின்னால் பாட்டு)

(முற்றிற்று)

(திரை)

(முற்றும்)

கலைச்சுடர் குழு
57 · சம்பாத் தெரு
தென்காசி

| | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| பக்கம் 6 | வரி 1 | இதுகள்டே | இதுகள்ட்டே |
| பக்கம் 17 | வரி 27 | விரும்புகிறேன் | அழைக்கிறேன் |

பக்கம் 18 வரி 14, 15. பிழை: I appreciat the lecture very good idea

திருத்தம்: I appreciat the lecture. Very good idea.

| | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | வரி 16 | Marveloess | Marvellous |
| பக்கம் 32 | வரி 16 | நிணைத்தால் | நினைத்தால் |
| பக்கம் 35 | வரி 8 | இன்சால்வெண்ட் | இன்சால்மெண்ட் |
| பக்கம் 37 | வரி 28 | நீங்க ஒன்னு | நீங்க ஒண்ணு. |
| பக்கம் 40 | வரி 29 | தலை முறைகளாக | தலைமுறை தலைமுறைகளாக |
| பக்கம் 53 | வரி 27 | all places, 'am ready...... (பிழை) | all places, I am ready...... (திருத்தம்) |
| பக்கம் 76 | வரி 17 | டொல் | பெடால் |
| பக்கம் 95 | வரி 25 | இருக்கிருளே | இருக்கிறது |
| பக்கம் 100 | வரி 7 | ந்தக் | இந்தக் |
| பக்கம் 111 | வரி 12 | வாழ்க்கைத்துனை | வாழ்க்கைதுணை |

ஸ்ரீ சண்முகம் பிரஸ்,

தென்காசி.